கல்கி

ஸ்வீட்டா...ஸ்டைலா...ஸ்மார்ட்டா...



KALKI • 26.07.2009 • ரூ.10.00 • 96 பக்கங்கள்



Dr. KAMAKSHI MEMORIAL HOSPITAL

#1.RADIAL ROAD, PALLIKARANAI, CHENNAI- 600 100
PH: 22469200 66300300 FAX: 22463282 66300400
E-mail: info@drkamakshimemorialhospital.org. Website: drkamakshimemorialhospital.org.

ONE STOP SOLUTION FOR CANCER

ஒரே இடத்தில் புற்றுநோய்க்கு தீர்வு

* PET CT SCAN	* பெட் சீடி ஸ்கேன்
* ALL ENDOSCOPIES	* அனைத்து என்டோ ஸ்கோபி
* RADIATION	* கதிர்வீச்சு
* (LINEAR ACCELERATOR) & BRACHY THERAPY	* (லீனியர் ஆக்ஸிலரேடர்) & உட்கதிர்வீச்சு
* IGRT	* IGRT
* SURGICAL ONCOLOGY	* புற்றுநோய் அறுவை சிகிச்சை
* MEDICAL ONCOLOGY	* புற்றுநோய் மருத்துவம்

இலவச ஆலோசனைக்கு : (044) 22469200 / 66300300

PET CT CENTRE AT CANCERINSITUTE (WIA)CANAL BANK ROAD, GANDHI NAGAR, ADYAR,CH-20
24 HRS PHARMACY & AMBULANCE SERVICES AVAILABLE

Dr. KAMAKSHI GROUP OF HOSPITALS

LAKSHMI NURSING HOME, PALLAVARAM
PET – CT CENTRE, ADYAR
Dr. KAMAKSHI MEMORIAL MULTISPECIALITY CENTRE

கல்கி அடுத்த இதழில்...



சங்கராபுரம்

கதை வழியே மஹா பெரியவர்
தரிசிக்கத் தயாராகுங்கள்



அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி

ரூ.10,000 பெறும் முதல் பரிசு கதை



கிரேஸி ட்ரீட்

- வாசகர்களுக்கு கூப்பன்-2

'வலை'யோடு விளையாடு

நீர்

தாகத்துக்குக் குடிக்கும் தண்ணீர்கூட மருந்துதான் என்றால் யாருக்கும் கொஞ்சம் ஆச்சர்யமாகத்தான் இருக்கும். ஆனாலும் அதுதான் உண்மை.

ரத்தசோகை, உடல் பருமன், சளி, இருமல், சைனஸ், சரும வியாதிகள், சிறுநீரகக் கல், வயிற்றுப் புண், வயிற்றுப் போக்கு, நாட்கள் தவறிப்போதல் என்று பெரும்பாலான நோய்களுக்கு 'வாட்டர் தெரபி'யில் தீர்வு காணமுடியும்.

தினசரி காலையில் ஒன்றரை லிட்டர் தண்ணீர் குடித்தபின் ஒரு மணி நேரத்துக்கு ஆகாரங்களைத் தவிர்த்தாலே போதும். உடல் சூடு குறைவதோடு சருமமும் பள பளப்பாகக் காட்சியளிக்கும். மலச்சிக்கல் விடைபெறும். முதல்நாள் இரவு நீங்கள் மதுவருந்தியிருக்கக் கூடாது என்பதுதான் ஒரே கண்டிஷன்.

பாரம்பரியமான இந்த நன்னீர் சிகிச்சை ஒருபுறமிருக்க, கடல்நீர் சிகிச்சை என்ற தனி வகையும் உண்டு. இதைக் கண்டுபிடித்தவர் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ரிச்சர்ட் ரஸ்ஸல் என்ற மருத்துவர்.

மாற்று மருத்துவத்தில் எப்போதும் முதலிடம் தண்ணீருக்கே. நீர் சிகிச்சை பற்றி அறிந்து கொள்ள www.altmedicinezone.com

நிலம்

வாழும் பூமியைப்பற்றி அறிந்து கொள்ள ஆர்வமுள்ளவர்களுக்கு உதவ முன்வந்திருக்கிறது www.eoearth.org. உலகெங்குமுள்ள சுற்றுச்சூழல் அறிஞர்கள் எழுதும் கட்டுரைகளோடு இம்மண்ணில் வாழும் சகல ஜீவராசிகளைப் பற்றியும் தகவல்களைக் கொண்ட இலவச இணைய கலைக்களஞ்சியம்.

சுற்றுச்சூழல் தகவல் கூட்டமைப்பு என்ற அமைப்பு இந்த இணைய கலைக் களஞ்சியத்தை உருவாக்கியுள்ளது.

நெருப்பு

நெருப்பு உண்டாக்க மனிதன் கற்றுக் கொண்ட பிறகுதான் நாகரிகமே வளர ஆரம்பித்தது. மனித சமூகத்தின் நண்பனான நெருப்பு, கொஞ்சநேரம் அசந்து நின்றால் ஜென்ம விரோதியாகிவிடக் கூடும். சமைக்கும்போது வெள்ளை நிற ஆடை அணிவதே பாது



காப்பானது. வெண்ணிறம் வெப்பத்தைப் பிரதி பலிப்பதால் தீப்பற்றும் வாய்ப்பு மிகக்குறைவு. அணியும் ஆடைகள் இறுக்கமாக இருப்பதும் நல்லது. தளர்வாக இருந்தால் காற்றிலசைந்து தீப் பிடிக்க வாய்ப்பாகும். இதுபோன்ற பயனுள்ள பாதுகாப்புக் குறிப்புகளை வழங்குகிறது www.firesnoop.com

காற்று

காற்று மாசுபடுவதற்குக் காரணம் வாகனப் பெருக்கம், தொழிற்சாலைகள் என்பதெல்லாம் உண்மைதான். அன்றாடம் நாம் பயன்படுத்தும் பெயிண்ட், வார்னிஷ், பாடி ஸ்ப்ரே, ஹேர் ஸ்ப்ரே ஆகியவையும் காற்று மாசுபடுவதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

'எவ்வளவு பெரிய பூமி, இதைக்கூட தாங் காதா?' என்று கேட்பவர்களுக்காக உலக சுகாதார நிறுவனம் சொல்லியிருக்கும் ஒரு சின்னப் புள்ளி விவரம். காற்று மாசுபாட்டினால் நேரடியாகப் பாதிக்கப்பட்டு இறப்பவர்களின் எண்ணிக்கை ஆண்டுக்கு 24 லட்சம்.

www.indiaenvironmentportal.org.in

ஆகாயம்

நீங்கள் நிலவின் ரசிகரா? அமாவாசை நாட் களிலும் ' உன்னைக் கண் தேடுதே' என்று வானம் பார்த்து வாய் முணுமுணுக்கிறதா? அப்படியென் றால் உங்களுக்கு வானவியலின்மீது ஆர்வமிருக் கிறது என்று அர்த்தம். நிலவை ரசிக்கவும் அதைச் சுற்றியுள்ள விண்மீன்களை அறிந்து கொள்ளவும் வழிகாட்டுகிறது www.space.com

- ஸாந்த்

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர்: லக்ஷ்மி நடராஜன்

ஆசிரியர் : சீதா ரவி

உதவி ஆசிரியர்கள் : கதிர்பாரதி, அமிர்தம் சூர்யா

வடிவமைப்பு : எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், பா.கோபால்

தொலைபேசி : 044 - 4343 8888

தொலைநகல் : 044 - 4343 8899

ஆசிரியர் குழு : 044 - 4343 8822 kalki@kalkiweekly.com

விளம்பரப் பிரிவு : 044 - 4343 8811 marketing@kalkiweekly.com

சந்தா பிரிவு : 044 - 4343 8833 subscription@kalkiweekly.com

விற்பனை பிரிவு : 044 - 4343 8844 sales@kalkiweekly.com

இன்டர்நெட் முகவரி : www.kalkionline.com

இணையதளத்தில்... வாங்கி, வாசித்து, மகிழ... www.sangapalagai.com

சந்தா விவரம் (ஒரு வருடம்) :

உள்நாடு : ரூ.500/-

வெளிநாடு : ரூ.3,800/-

கல்கி பில்டிங்க்ஸ், 47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 32

''அண்ணே கல்கி நகைச்சுவை ஸ்பெஷல் வரப்போவுதாம்''

''அட்ராசக்கை, அட்ராசக்கை, ஆடிக்கு வாசகர்களை அசத்தப் போறாங்கங்க டோய்.''

- த.சத்தியநாராயணன், அயன்புரம்

தமது அரசியல் வண்ணத்தின் பின்னணி நிர்ப்பந்தமா, நிழல் தேவையா என்பதைச் சொல்லாமலே, தான் நல்ல நடிகன் என்பதை, பா.விஜய் நிரூபித்திருக்கிறார்.

- எம்.சம்பத், வேலாயுதம்பாளையம்

குறும்படமோ... நெடும்படமோ தமக்கே உரித்தான வகையில் மனத்தை அருளியது அருமை!

- என்.சீத்தாலட்சுமி, சென்னை - 40

க்ரைம்.காம் தொடரில் வாசகர்களுக்கு இவ்வளவு ஈஸியாகவா தடயத்தை வைத்து பரிசைத் தட்டிச் செல்ல வைப்பது? எங்கள் மூளைக்கும் கொஞ்சம் வேலை கொடுங்க ப்ளீஸ்!

- எஸ்.கோபாலன், நங்கநல்லூர்

ஜோக் அடிப்பதில்கூட 'கல்கி' சதாசிவம் 'சாதா'சிவம் அல்ல என்பதை அவருடைய 'நேபாளி பெண்' ஜோக் மூலம் அறிந்துகொண்டோம்.

- கே.கஸ்தூரி, வேலூர்

வலியின் வரிகள்...

வசப்படுத்தும் டைரக்டர் வஸந்துக்கு வாழ்த்துகள்!

- டி.வசந்தா, திண்டுக்கல்

மாட்டர் பற்றிய எல்லா மேட்டரையும் அக்கு வேறு ஆணி வேறாக அலசி, இரண்டும் ஒன்றே என்பதை சயின்டிஃபிக்காக சங்கராச்சார்யார் அருள்வாக்கு வழியாக

தம் தந்தை, ஜெயலலிதாவைச் சந்திக்காததற்கு உண்மையான காரணத்தை வெளிப்படையாகச் சொன்ன அன்பு மணிக்கு ஆயிரம் அப்ளாஸ்...!

- பி.என்.ஜெய்குமார், திருவாரூர்



'ஜனநாயகத்துக்கு வேட்டு வைக்கும் பட்ஜெட்' வெறும் தலையங்கம் மட்டுமல்ல... மத்திய

பூங்குயில் பட்டம்மாள்

முன்னணி வித்வான்களைப்போல் சவுக்க காலத்தில் பெரிய பெரிய தீக்ஷிதர் கீர்த்தனைகளை எல்லாம் அழுத்தமாகவும் பிடிப்புடனும் பாடுகிறார். வித்வத்துடன் குரல் இனிமையும் சேர்ந்திருக்கிறது. அதனால் கச்சேரி செய்யும்போது விகாரப் படுத்திக்கொள்ளாமல் புன்னகை தவழும் முகத்துடன் பாடுதல் சாத்தியமாய் இருக்கிறது... வருங்காலத்தில் இவருடைய பெயர் பெரிதும் பிரசித்தி அடையும் என்று எதிர்பார்க்கிறேன்.

- ஆனந்த விகடன் 12.1.1936-ல் அமரர் கல்கி

இசைக்குயில் டி.கே. பட்டம்மாள் காலமான செய்தி இந்த இதழ் அச்சேறும் நேரத்தில் கிடைத்தது. அஞ்சலிக் கட்டுரை அடுத்த இதழில். - ஆர்

வட்டமேஜை

அரசுக்கு வைத்திருந்த 'குட்டும்'கூட!

- **ஆர்.ராமசுப்ரமணியன், திருவாரூர்**

எழுத்து எக்ஸ்பிரஸ்ஸில் சி.மகேந்திரன் சொல்லியிருந்த 'அத்தைமடி' ஓர் அற்புதம்!

- **பி.ஆர்.மயிலப்பன், ஈரோடு**

பட்ஜெட் வரிகள் பற்றிய தலையங்க வரிகள்தான் மக்களின் முகவரிகள். அந்த வலியைத் தானே வாழ்க்கையில் அனுபவிக்கிறோம்.

- **அ.யாழினி பர்வதம், சென்னை-78**

'**அ**ரங்கன் திருமுற்றம்' ரிஷபனின் அழகிய தமிழ்நடையில் உற்சவத்தைக் கண்ட உணர்வு!

- **க.சுந்தர், நெய்வேலி**

கு.ஞா. கட்டுரையில் 'பசித்திரு, தனித்திரு, விழித்திரு'- இதன் அர்த்தம் புரியாதவர்கள் திருதிரு!

- **ஜி.கீர்த்தனா, நெய்வேலி**

ஓவியர் ஜெ.பிரபாகர் தூரிகை மனசில் கிராமத்து எழிலை வரைந்த ஓவியம் அருமை!

- **இராம.பார்த்திபன், வயலூர்**

அடுத்தடுத்த அதிரடிகள்னு சொல்லி சும்மா கலக்கிக்கிட்டிருக்கீங்க.

- **எம்.மிக்கேல்ராஜ், சாத்தூர்**

ரா.நாகப்பனின் 'அது' கவிதை எதுவாகவேனும் இருந்துவிட்டுப் போகட்டும். ஆனால் அதைப் படிக்கும்போது ஏற்பட்ட 'இது' இருக்கிறதே? அந்த இதுதான் 'அது'வோ..?

- **வானவில் மூர்த்தி, கடலூர்**

துப்பறிய வாங்க போட்டி - 2 முடிவு

சரியான விடை எழுதியவர்களில் குலுக்கல் மூலம் ரூ.200/- பரிசு பெறும் ஐந்து பேர்...

1. எஸ்.கௌரிலக்ஷ்மி - ஸ்ரீரங்கம்
2. எஸ்.ஆர்.பார்வதி - திருவானைக்காவல்
3. எல்.ஜனார்த்தனன் - கோவை
4. பி.ஆர்.மயிலப்பன் - ஈரோடு
5. கே.எஸ்.அக்ஷயா - மதுரை

நீலகிரி மாவட்டச் செய்திகள்

அமிர்தம் சூர்யா,

ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு





* குடும்பத்தினருடன் கே.வி.ஆனந்த்...



மோளக்காரன் கிளம்பிட்டான்!

இது ஆடி மாதம். சின்ன வயதில் ஆடி மாதம் வந்துவிட்டால் என்னை வீட்டில் பார்க்கவே முடியாது. எங்கெல்லாம் அம்மன் கோயில்கள் உள்ளனவோ அங்கெல்லாம் போய் விடுவேன். அவ்வளவு பக்தியா என்றுதானே கேட்கிறீர்கள்? நான் போவதன் காரணமே வேறு. பகலில் திருவிளையாடல் வசன ரெகார்டு, இரவில் பாட்டுக் கச்சேரி, தெருவை அடைத்து ஸ்கிரீன் கட்டி பக்திப் படங்கள் என அமர்க்களமாக இருக்கும். எங்காவது ஒரு சந்தில் உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருப்பேன். என்னைக் காணாமல் வீட்டில் தாத்தா, பாட்டி கவலைப்பட, அப்பாவும் சித்தப்பாவும் ஆளுக்கொரு பக்கம் கிளம்புவார்கள். அப்பா என்னைக் கண்டுபிடித்து முதுகில் சாத்தி, வீட்டுக்கு அழைத்து வருவார். சற்று நேரத்தில் சித்தப்பா, ''அந்தப் பயலை எங்கேயும் காணோம்'' என்றபடி வீட்டுக்குள் நுழையும்போது நான் தூங்கியிருப்பேன்.

ஃபோட்டோகிராஃபராக என்னுடைய கேமரா பேக்கை தோளில் மாட்டிக் கொள்

ளும்போதெல்லாம் என் வடிவு பாட்டியின் நினைவு வரும். ஆரம்ப காலத்தில் நான் கேமரா பேக்கை எடுத்துக் கொண்டு புறப்பட்டால், ''மோளக்காரன் கிளம்பிட்டான்'' என்று கமெண்ட் அடிப்பார். அவரது கண்ணோட்டத்தில் ஃபோட்டோகிராஃபி கௌரவமான தொழில் இல்லை. எனது குடும்பப் பின்னணி அப்படிப்பட்டது.

நான் பிறந்து வளர்ந்தது சென்னை ஜார்ஜ் டவுனில். எங்கள் மூதாதையர்கள் சுமார் 150 வருடங்களுக்கு முன்னால் இங்கே வந்து செட்டிலாகி நிலம் வாங்கி இருக்கிறார்கள். அதற்கான 1857ஆம் ஆண்டு டாக்குமென்ட்களை அப்பா என்னிடம் காட்டியிருக்கிறார். ஹாலிவுட் படங்களில் புதையலைத் தேடிச் செல்பவர்கள் கையில் வைத்திருக்கும் வரைபடத்தைப் போல் இருக்கும் அதைப் பிரமிப்புடன் பார்த்திருக்கிறேன். தாத்தா, டவுன் ஏரியாவில் விறகுக் கடை வைத்திருந்தார். இப்போது ராக்கெட் ஏவப்படுகிற ஸ்ரீஹரி கோட்டா பகுதியில் இருந்த சுமார் நூறு ஏக்கர் நிலத்தில் சவுக்கு பயிரிட்டு சென்னைக்குக் கொண்டுவந்து விற்பனை செய்வதுதான் அவரது தொழில். அப்பா பிரசிடென்சி கல்லூரியில் இந்தி லெக்சரராகவும் பிறகு பண்ருட்டியில் இங்கிலீஷ் லெக்சரராகவும் இருந்தவர். அதன்பிறகு ஸ்டேட் பேங்கில் பணியாற்றி ரீஜினல் மேனேஜராக ரிடையர்டானவர். சித்தப்பாவுக்கு மத்திய அரசின் வருமான வரித் துறையில் வேலை. இப்படி இருக்க, 'ஃபோட்டோ எடுக்கிறேன் பேர் வழி' என நான் கிளம்பியது பாட்டிக்குப் பிடிக்கவில்லை.

என்னை வேறு வேலைக்கு அனுப்ப வீட்டில் எத்தனையோ முயற்சிகள் நடந்தன. 'அயன்' படத்தில் அம்மா ரேணுகா, மகன் பேங்க் வேலைக்குப் போக வேண்டுமென ஆசைப்பட்டு அப்ளிகேஷன் வாங்கி வந்து சூர்யாவிடம் கொடுப்பார். அதை அலட்சியமாக டைனிங்டேபிள் மீது வைக்கும் சூர்யா, சாப்பிட்ட மட்டன் துண்டுகளின் மீதியை அதில் வைப்பது போல் ஒரு காட்சி வரும். இது கொஞ்சம் மாற்றப்பட்ட உண்மைச் சம்பவம். கரெக்ட்!



கே.வி.ஆனந்த்

என் வீட்டில் நடந்ததுதான். பையன் பேங்க் வேலைக்குப் போக வேண்டுமென என் அம்மா ஆசையுடன் வாங்கி வந்த அப்ளிகேஷனை டைனிங் டேபிள் மீது வைத்தேன். உப்புமா சாப்பிடும்போது மறதியாய் கறிவேப்பிலை, மிளகாயை அதன் மீது வைத்து அம்மாவிடம் வாங்கிக் கட்டிக் கொண்டேன்.



எது எப்படியோ, என் ஃபோட்டோகிராஃபி ஆர்வம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வந்தது. நான் அரும்பாக்கம் வைஷ்ணவா கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த சமயத்தில், சென்னையில் எந்தக் கல்லூரியில் ஃபோட்டோகிராஃபி போட்டி என்றாலும், நான் எடுத்த புகைப்படங்களை அனுப்பி வைத்துவிடுவேன். நாளடைவில், என் புகைப்படங்களுக்குப் பரிசு கிடைப்பது வழக்கமாகி விட்டது. ஒருமுறை அனைத்துக் கல்லூரி அளவில் எனக்குப் பரிசு கிடைத்தபோது, எங்கள் வைஷ்ணவா கல்லூரி முதல்வர் வீரராகவன் அந்த சர்டிஃபிகேட்டில், தன் கைப்பட "Ace Photographer Anand!" என்று எழுதி, கையெழுத்திட்டுக் கொடுத்து என்னைக் கௌரவப்படுத்தினார்.

அந்தத் தருணத்தில் என் பாட்டியின் 'மோளக்காரன்' கமெண்ட் நினைவுக்கு வர, என்னையும் அறியாமல் சிரித்துவிட்டேன். அன்று மாலை என் பாட்டியிடம் சர்டிஃபிகேட்டைக் காட்டி, ''பாட்டி! மெட்ராஸ் காலேஜ் பசங்களிலேயே நான்தான் ரொம்ப நல்லா மோளம் அடிக்கிறேனாம். அதுக்காக எனக்கு இந்தப் பரிசு குடுத்திருக்காங்க'' என்று கலாய்த்தபோது, மொத்த வீடும் கொல்லென்று சிரித்தது.

மெட்ராஸ் காலேஜ் பசங்கள்ல நான் நல்லா மோளம் அடிக்கறேன்!



★ வடிவு பாட்டி

என் பாட்டிக்கு நேரெதிர் அப்பா வெங்கடேசன். நான் எது செய்தாலும் என்னை என்கரேஜ் செய்வார். அதற்கு ஓர் அட்டகாசமான சம்பவத்தை சொல்ல வேண்டும்...

(ஆக்ஷன் தொடரும்)

எழுத்து வடிவம்: **எஸ்.சந்திரமௌலி**

● என்.சண்முகம், திருவண்ணாமலை

நகைச்சுவை நாடகம் எழுதும் உங்களால் சரித்திர நாடகம் எழுத முடியுமா?

கேள்விகேட்ட உங்கள் வாய்க்கு தேனும், தினை மாவும் போட வேண்டும். வீட்டு வாசலில் காலிங் பெல்லைக் கழட்டி விட்டு ஆராய்ச்சி மணியைத் தொங்க விட்டிருக்கிறேன். சாண்ட்ரோவுக்கு பதிலாக பஞ்ச கல்யாணி புரவியில் சவாரி செய்கிறேன். மயிலிறகை மசியில் தோய்த்து ஓலைச் சுவடியில் 'கே.பி.டி சிரிப்பு ராஜசோழன்' என்னும் நகைச் சுவை சரித்திர நாடகத்தை எழுதிக் கொண்டிருக்கிறேன். அக்டோபரில் அரங் கேற்றம். இதில் நாடகக் காவலர் R.S. மனோகரின் பிரமாண்டமும் இருக் கும்; கிரேசியின் கும்மாளமும் இருக்கும்.

● இரா.முருகன், சென்னை

கண்ணன் குழல் ஊதி, பட்ட மரமெல்லாம் தளிர்த்தது. புல்லாங்குழல் மட்டும் ஏன் தளிர்க்கவில்லை?

இது SMSஸில் வந்த VIP கேள்வி (இரா.முருகன் கமலின் 'உன்னைப் போல் ஒருவனின்' வசன கர்த்தா). கண்ணனின் கையில் உள்ள புல்லாங்குழல் எதையும் முழுமையாக்க வல்ல FULLலாங்குழல். புல்லாங்குழலை ஊதி ஊதி, பட்ட மரம் போல கருப்பாக இருந்த கண்ணனே, பச்சைபசேலென பச்சை மா மலை போல் மேனியாகி விட்டானே. அவனுக்குப் போட்டியாகத் துளிர்க்காமல் ஸாரி தளிர்க்காமல், எஜமான விசுவாசத்தில் அது 'தேமே' என்று இருந்து விட்டது போலும்.

● மு.மதிவாணன், அரூர்

துணிச்சல் - அசட்டு துணிச்சல் என்ன வேறுபாடு?

உண்மை பேச வெறும் துணிச்சல் போதும்; பொய் சொல்ல அசட்டுத் துணிச்சல் வேண்டும்!

● மஞ்சுதேவன், அயிரோலி

மகாவிஷ்ணு சக்கரம் - வாழ்க்கை சக்கரம் ஒப்பிடுக?

மகாவிஷ்ணுவின் சக்கரம் சுழல்வதற்கு முன்பு சங்கு ஊதப்படும். வாழ்க்கை சக்கரம் நின்ற பிறகு சங்கு ஊதப்படும்!

● ரா.பிரசன்னா, மதுரை

ரத்த அழுத்தம்... முத்த அழுத்தம்?

ரத்த அழுத்தம் PRESSURE....முத்த அழுத்தம் PLEASURE....ரத்த அழுத்தம் BPயால....முத்த அழுத்தம் ''பீபீ''யால!

★ கௌரி, விழுப்புரம்

'பணம் காய்ச்சி மரத்தை' கடவுள் உங்களுக்குக் கொடுத்தால்?

கைமாத்தா 'சில்லறை காய்ச்சிச் செடியைக்' கேட்பேன். முடியாது என்றால் விரும்பும் 'பொருள் காய்ச்சி மரத்தைக்' கேட்பேன். கடைக்குப் போகும் அலைச்சலைத் தவிர்க்கலாம் இல்லையா!

● அ.யாழினி பர்வதம், சென்னை

உங்களுக்குத் தூக்கத்தில் நடக்கும்

ராஜராஜ... கிரேஸி மார்த்தாண்ட...

கிரேஸியைக் கேளுங்கள்

வியாதி இருப்பதாக வைத்துக் கொள்வோம். எங்கே நடந்து போவீர்கள்?

தெருத்தெருவாகச் சுத்த நான் என்ன நடு ரோட்டிலா தூங்குகிறேன். பெட் ரூமுக்குள் சுத்திச்சுத்தி வருவேன். நீங்கள் கேட்க நினைத்தது 'நடக்கும்போது தூங்கும்' வியாதி என்று நினைக்கிறேன். அப்படி இருந்தால், நடந்தபடி தூங்கிக்கொண்டே பெட். -ரூமுக்குப் பழக்கத் தோஷத்தில் வந்து 'தூங்கியபடி நடக்க' ஆரம்பிப்பேன்.



• **ரேவதிப்ரியன்,**
ஈரோடு

நடிப்பில் உயர்ந்தவர் கணவனா, மனைவியா?

கணவன்! ஆனால், இயக்குனர் மனைவி!

• **என்.சண்முகம்,**
திருவண்ணாமலை

'காக்கா உட்கார பனம்பழம் விழுந்த கதை' என்ன சார்?

'குருவி தலையில் பனம்பழம் விழுந்த கதைக்கு' ஃப்ளாஷ் பேக் கதை!

• **ப்ரியா, சென்னை**

கிரேஸி நீங்கள் என்ன ராசி?

'ஜீவ' ராசி!

• **என்.சண்முகம்,**
திருவண்ணாமலை

கிரேஸிக்குப் பிடித்த வாகனம்?

அரியை ஆழ்வார்கள் நாலாயிரத்துக்குள் அடக்கிய ஆவாகனம்.

(அடுத்த பக்கம் கிரேஸி ட்ரீட்)

கிரேஸி ட்ரீட்!

125வது வாரக் கொண்டாட்டம்



வாசகர்களுக்கு ஒரு
மெகா சர்ப்ரைஸ் ட்ரீட் கிரேஸியோடு!

கிரேஸியைக் கேளுங்கள் 125-வது வார கொண்டாட்டத்தில் பங்குபெறுங்கள்.

கீழே உள்ள கூப்பனில் கிரேஸிக்கான கேள்வியை எழுதி அனுப்புங்கள்.

கிரேஸி தேர்ந்தெடுக்கும் கேள்வியை எழுதிய வாசகர்களுக்கு அவருடன் சர்ப்ரைஸ் ட்ரீட் காத்திருக்கு.

ஒருவரே எத்தனை கூப்பன்கள் வேண்டுமானாலும் அனுப்பலாம்; ஆனா ஒரு கூப்பனில் ஒரு கேள்வி மட்டுமே இருக்கணும்.

ஜெராக்ஸ் நாட் அலௌவ்ட்; ஒரிஜினல் கூப்பனை மட்டுமே அனுப்புங்க.

2.8.09, 9.8.09 கல்கி இதழ்களிலும் கூப்பன் வெளியாகும்.

30.8.09 இதழில் கொண்டாட்டம் காத்திருக்கிறது.

கடைசி தேதி: 10.8.09. ஆசிரியர் தீர்ப்பே இறுதி

கிரேஸி ட்ரீட் - 1

கிரேஸியைக் கேளுங்கள் இங்கே : ....
....

பெயர் : ....

முகவரி:..
....
....

தொலைபேசி எண் : ....

கல்கியில் விரும்பிப் படிப்பது:................................
....

கிரேஸி ரெடி... நீங்க ரெடியா..?



கல்கி



2009 ஜூலை 26
விரோதி ஆடி 10
மலர் : 67
இதழ் : 52

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - *பாரதியார்*


விஜய் மல்யாவின் விதண்டாவாதம்!


குஜராத் கள்ளச் சாராயச் சாவுகள், காந்தி பிறந்த மண்ணில் நிகழ்ந்த கொடுஞ் சோகம். அதனினும் சோகம் ஒன்று உண்டெனில், அதைத் தொடர்ந்து சாராயச் சக்கரவர்த்தி விஜய் மல்யா குஜராத் அரசுக்கு அறிவுரை வழங்கியதுதான்! "குஜராத்தில் மது விலக்கை ரத்து செய்யுங்கள்; அதுவே கள்ளச்சாராய பிரச்னைக்குத் தீர்வு" என்று அவர் கூறியதை இந்த தேசம் மௌனமாகக் கேட்டுக் கொள்ளும் நிலைமையில் இருப்பதுதான் அவலத்திலும் அவலம்!

மதுபான உற்பத்தியில் கோடி கோடியாகச் சம்பாதிப்பவர் என்பதால் மட்டுமே விஜய் மல்யாவினால் இப்படி ஒரு சிபாரிசை அளித்துவிட முடியாது. இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் மது அருந்தத் தடை கிடையாது என்கிற துணிவுதான் அவரைப் பேச வைக்கிறது! தமிழகம் போன்ற மாநிலங்களில் அரசே சாராயம் விற்கும் கொடுமைதான் அவரது நாவைத் தூண்டுகிறது!

மல்யாவின் பேச்சைக் கேட்டு குஜராத் அரசு உடனே மதுவிலக்கை வாபஸ் பெற்றுவிடப் போவதில்லையென்றாலும் அப்பேச்சில் உள்ள அபத்தத்தை நாம் உணர்ந்து எச்சரிக்கை கொள்வது அவசியமாகிறது.

கள்ளச் சாராயம் அருந்தியதால் ஒரு சம்பவத்தில் நூறு பேர் வரை இறந்துபோனது கொடுமைதான். எனினும், காவல் துறையின் மதுவிலக்குப் பிரிவும் ஒற்றாடல் பிரிவும் லஞ்ச - ஊழலுக்கு இடங்கொடாமல் கைகோத்தால் கள்ளச்சாராயத்தை ஒழித்துவிட முடியும். குஜராத்தின் தற்போதைய துயரத்தில்கூட, மக்களால் பலமுறை எச்சரிக்கப்பட்டும் போலீஸார் சரிவர இயங்கவில்லை






என்பதே பொதுவான குற்றச்சாட்டாக உள்ளது.

கள்ளச்சாராயத்துக்குப் பயந்து, மது அருந்துவதை ஒரு உணவுப் பழக்கம் அல்லது கேளிக்கை என்ற சமூக அங்கீகாரத்துடன் அனுமதிப்பது, கள்ளச் சாராயம் ஏற்படுத்தக்கூடிய நாசத்தைக் காட்டிலும் பல மடங்கு அபாயகரமான, மோசமான விளைவுகளை உண்டாக்கும். மதுப்பழக்கம் உள்ளவர்கள் படிப்படியாகத் தங்களை அழித்துக் கொள்கிறார்கள் என்பது விஞ்ஞான ரீதியான உண்மை. மேலும், மதுப்பழக்கத்துக்கும் மது அடிமைத்தனத்துக்குமான மெல்லிய இடைவெளியை நிரந்தரமாகக் கட்டிக்காக்கும் மனத் திண்மை, எல்லோரிடமும் எப்போதும் இருப்பதில்லை. ஒவ்வொரு முறை எல்லை மீறுகிறபோதும் என்ன விபத்து அல்லது இழப்பு ஏற்படும் என்பதை அனுமானிக்க முடியாது; தடுக்கவும் முடியாது. மதுவுக்கு ஒரு நபர் அடிமையாகிவிட்டாலோ, அதனால் குடும்பத்துக்கும் சமூகத்துக்கும் ஏற்படக்கூடிய பாதிப்பும் நஷ்டமும் நலிவும் எந்தக் கணக்கிலும் அடங்காதவை! ஒரு குடிகாரத் தந்தையைப் பெற்ற குடும்பத்தின் துயரமும் மன ரீதியான பாதிப்பும், தலைமுறைகளைத் தாண்டித் தொடரும். இந்தச் சோகத்துக்கு என்ன விலை நிர்ணயித்து நாம் நஷ்டக் கணக்கு எழுதுவது?!

விஜய் மல்யா போன்றவர்கள் சமுதாயத்தின் நலிவு பற்றியோ தனிநபர் வீழ்ச்சி பற்றியோ கவலைப்படவேண்டிய கட்டாயத்தில் தாங்கள் இல்லை என்று கருதலாம். ஆனால் ஓர் அரசாங்கம் அப்படிச் செயல்பட முடியாது; கூடாது.

காந்தி மாநிலத்தில் நடந்த கள்ளச் சாராய சாவுக் கொடுமை, ஒட்டுமொத்த தேசத்தின் கண்ணைத் திறக்கட்டும். நாடு தழுவிய மதுவிலக்கை அமுலுக்குக் கொண்டுவர முயற்சிகள் தொடங்கட்டும். நாகரிகப் பழக்கமாக உலகமே ஏற்ற புகைபிடிக்கும் பழக்கம், இன்று நிராகரிப்புக்கு மட்டுமின்றி தடைக்கும் உள்ளாகி வருகிறது. மதுவை மொத்தமாக நிராகரிக்க உலகுக்கே குரல் கொடுக்கும் முதல் நாடாக இந்தியா இருக்கட்டும். கள்ளச் சாராயத்தையும் ஒழிப்போம்; ‘நல்ல’ சாராயத்தையும் நிராகரிப்போம்! ●



ரிட்டர்ன் டு கூடலூர்



'ஈரநிலம்' குறும்படம் பற்றிய அபிப்ராயம்:

பசுமையைப் பூசிக் கொண்டிருக்கும் குளிர்ப்பிரதேச கூடலூர் மக்களின் வாழ்வு மட்டும் வறட்சி எல்லைகளால் வரையப்பட்டுள்ளது. ஏன்? ஆயிரக்கணக்கான தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள், திருப்பூர் ஆடை உற்பத்தி நிறுவனங்களுக்கு இடம்பெயர்ந்து கொத்தடிமைகளாக வெம்பிப் போனதேன்? வரும் தலைமுறைக்கான வேலை விருட்சங்களை நமது மாவட்ட மண்ணில் விதைக்கத் தவறியது யார்? எதனால்? இவை கூடலூரிலிருந்து திருப்பூர் சென்று எக்ஸ்போர்ட்டில் வேலை செய்து அவமானப்படும் ஒரு இளைஞனின் மனத்தில் எழும் கேள்விகள்.

மீண்டும் சொந்த மண்ணுக்குத் திரும்பி வந்து சோகக் கேள்விகளுக்கு விடை தேடுகிறான். தொழிலதிபர் முதல் சாதாரண வியாபாரி வரை அத்தனை வாசல்களுக்கும் சென்று நேர்காணல் செய்து கூடலூர் புத்தனாய் விடைபெறுகிறான். இங்கு தொழில் செய்து லாபம் ஈட்டும் பலரும் தங்கள் லாபத்தை வேறு மாவட்டத்தில் முதலீடு செய்வதும் உள்ளூர் மக்கள் கூட தங்களின் தேவைக்கு கோவை, திருப்பூர் சென்றால்தான் கௌரவம், தரம் என்று மூட நம்பிக்கையில் மூழ்கியிருப்பதும்தான் காரணம் என உணர்கிறான். அனைவரையும் கூட்டி வேரும் விழுதும் ஒரே நிலத்தில் இருந்தால்தான் மரத்துக்கு வலு என்பதைப் பிரசங்கிக்கிறான் - இடைவிடாது. நிலைமை மெல்ல மாறும் சூழல் சூல் கொள்கிறது என்பதாய், படம் நன்றி என்று முடிகிறது. கதை வசனம் கவிஞர் பெ.மணிவண்ணன். இயக்குநர் ஜி.எம். சண்முகராஜ் சமூகப் பிரச்னையை கலைத்துவமாகச் சொல்ல முயற்சிக்கையில், பிரச்னை - தனது தீவிரத்தை, தீர்வை விவரணப்படமாக வடிவமைத்துக் கொண்டுள்ளது.

குறும்படத்திலுள்ள பரிகாரம் மட்டுமே கூடலூரரைச் சீரமைத்து விடாது. படத்தைக் காணும் நபரின் இதய ஈரநிலமெல்லாம் சிந்தனை விதைகளாகத் தூவும் சமூகச் செயல்பாட்டுக்காக, சின்னச் சின்னக் குறைகளை மறந்து குறும்படக் குழுவைத் தாராளமாய்ப் பாராட்டலாம்.


நீலகிரி மாவட்ட சிறப்பிதழ்

திட்டம்

ப்ளாக் அண்ட் வொயிட் கதைகள்-14



1896 ஜூலை 7. இரவு 10 மணி.

பம்பாய் வாட்ஸன் ஹோட்டலின் ஒரு பிரத்யேக அறையில் பதற்றமான குரலில் பேசிக் கொண்டிருந்தார்கள் அங்கே தங்கியிருந்த லூமியர் சகோதரர்கள்.

சினிமா எனும் அதிசயத்தை உலகம் முழுக்க ஒரு வருடமாக அரங்கேற்றிக் கொண்டு வந்தவர்கள், இந்தியாவில் முகாமிட்டிருந்தார்கள். இளையவர் லூயிஸ் லூமியரின் கைகளில் அன்றைய டைம்ஸ் ஆஃப் இந்தியா தினசரி...

''விளம்பரத்தை இன்னும் கொஞ்சம் பெரிசாக் குடுத்திருக்கணும். ரொம்பக் குட்டியா தெரியுது...''

''இல்லை... ஷோ நேரமாகப் பார்த்து மழை வந்ததுதான் பிரச்னை...''

இந்தியச் சந்தையைப் பற்றி மிகப் பெரிய நம்பிக்கை கொண்டிருந்தார்கள் லூமியர்கள். அதனால்தான் 1895ல் சினிமாவைக் கண்டறிந்தவர்கள், அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் அரங்கேற்றம் செய்த அடுத்த ஆண்டே கீழைத் தேசமான இந்தியாவுக்கு ஓடி வந்திருந்தார்கள். ஆனால், அவர்கள் எதிர்பார்த்தது போல சினிமாட்டோகிராபுக்கு இந்திய மண்ணில் வரவேற்பு கிடைக்கவில்லை.

அன்றைய முதல் நாள் காட்சிக்கு ஆங்கிலேயச் சீமான் சீமாட்டிகளும், ஒரு சில இந்தியச் செல்வந்தர்களும் வந்திருந்தார்களே தவிர, லூமியர்கள் எதிர்பார்த்ததுபோல திமுதிமுவென்றெல்லாம்



கூட்டம் கூடிவிடவில்லை.

''அறிவியல் மக்களை யோசிக்க வெச்சிரும்னு அதை ஒதுக்கியே வெச்சிருந்த தேசம் இது. மதக் கட்டுப்பாடுகளாலேயே ஜனங்களைக் கட்டிப்போட்டு ஆண்டிருக்காங்க அரசர்கள். இந்த பிரிட்டிஷ்காரனுங்க வந்துதான் கொஞ்சம் மாத்தியிருக்கானுக. ஆனா அவனுகளும் வியாபாரத்துக்கேத்த அறிவியலைத்தான் கொண்டு வந்திருக்கானுக... ம்... பொழைக்க வந்த தேசம் எப்படிப் போனா என்ன...?''

''நம்ம திட்டப்படி ஒரு மாசத்துக்கு இங்கே சினிமா காட்டியாகணும். நாம ஊசியளவு இடம் கொடுத்தாலும் அந்த தாமஸ் ஆல்வா எடிசன் அவரோட கெனோட்டோகிராப்பைத் தூக்கிட்டு வந்துருவாரு... அதுக்குள்ளே இந்தியா முழுக்க நாம சினிமா காண்ட்ராக்ட் போட்டுட்டு அடுத்த தேசம் கிளம்பணும்...''

அகஸ்தே லூமியர் அழுத்தமாகச் சொல்ல, சிடுசிடுப்பாகப் போய் ஜன்னல் திரையை விலக்கி, காற்றுப் பட நின்று கொண்டார் லூயிஸ் லூமியர். வெளியே பம்பாய் நகரமே இருளில் மூழ்கியிருந்தது.

ஜன்னல் பக்கமிருந்து பிரகாசம் பூசிய முகத்தோடு திரும்பினார் லூயிஸ்.

''கூட்டம் சேர்க்க வழி கிடைச்சாச்சு...''

''அது என்ன லூயிஸ்...?''

''சஸ்பென்ஸ்... நாளைக்குக் கவனி...''

மறுநாள் பம்பாயிலிருந்த எல்லா கேளிக்கை விடுதிகளுக்கும் தங்களின் ஆட்களை ஏவினார் லூயிஸ். சினிமாட்டோகிராப் பற்றிய துண்டுப் பிரசுரங்களும், போஸ்டர்களும் அங்கே ஒட்டப்பட்டன. பணியாளர்களுக்குக் கமிஷன் கொடுத்து விடுதிகளுக்கு வரும் வாடிக்கையாளர்களிடம் தங்கள் நிகழ்ச்சி பற்றி செய்தி

''டைரக்டர் ஸார், நாய்களை வைச்சு படம் எடுக்கறீங்களோ, என்ன பேரு வைச்சிருக்கீங்க?''
''நாய்கள்!''

- எடக்காடு பி. சேகர்

பரப்புமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. தமது அந்த ஏற்பாட்டுக்கு நல்ல பலன் கிடைக்குமென்று கணக்குப் போட்டிருந்தார் லூயிஸ்.

ஆனால், அதற்கடுத்த நாட்களிலும் கூட்டம் குறைவாகத்தான் வந்தது.

ஐந்தாம் நாள் இரவு. மன அமைதி குலைந்து காணப்பட்டார்கள் லூமியர்கள். இருவருமே அதிகம் பேசிக்கொள்ளவில்லை. கட்டிலுக்கு அருகில் இருந்த டீபாயில் காற்றில் அசையும் அன்றைய டைம்ஸ் ஆஃப் இந்தியா கண்ணில்பட, அகஸ்தே லூமியர் எழுந்து எடுக்கிறார். புருவம் சுருக்கிச் சொல்கிறார்.

''எனக்கு ஒரு யோசனை...''

''என்ன...?''

''நாளைக்கு இங்கே போகலாமா...?''

செய்தித் தாளை வாங்கி அகஸ்தே காட்டிய இடத்தில் பார்க்கிறார் லூயிஸ். அது அரிச்சந்திரா நாடகம் பற்றிய விளம்பரம்.

''அங்கே போனா...?''

''நமக்கு ஏதாவது வழி பிறக்கும்...''

மறுநாள் சினிமா ஷோ முடிந்ததும் அரிச்சந்திரா இரவுக் காட்சிக்குக் கிளம்பினார்கள் இருவரும். நாடக அரங்கமே நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. யாரோ ஒரு அரச குடும்பத்துப் பிரபு ஒருவனின் வருகைக்காக நிகழ்ச்சியைக் காலம் தாழ்த்திக் கொண்டிருந்தார்கள். அந்தப் பிரபு வியாபார விஷயமாக மறுநாள் கப்பல் ஏற இருப்பதால், அரிச்சந்திராவை அன்றே பார்க்க விரும்பி ஆளனுப்பியிருந்தான். நாடக நிர்வாகிகள் அவன் அனுப்பிய ஆளிடம் கூன் விழுந்து நடுநடுங்கிப் பேசுவதைப் பார்த்த லூமியர்கள் சிரித்துக் கொண்டார்கள்.

அரசு குடும்பத்தினர் மற்றும் நிலப் பிரபுக்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த மாடப் பகுதியில், வேறு பல பிரபுக்கள் தங்கள் சகாவுக்காகப் பெருமையோடு காத்திருந்தார்கள். தங்கள் சகா காலந்தாழ்த்துவதும் நாடகம் தொடங்காமல் இருப்பதும் அவர்களுக்குப் பிடித்தமானதாக இருந்தது.

திடீரென மாடத்தில் ஏதோ சலசலப்பு.

லூமியர்களுக்கும் அந்தப் பகுதியில்தான் இருக்கை கொடுத்திருந்தார்கள். அகஸ்தே லூமியர் எழுந்து சலசலப்பு வந்த திசையில் நடந்தார். அங்கே



தடியான ஒருவனை காவலாளி நெட்டித் தள்ளிக் கொண்டிருந் தான். அருகிலிருந்த இன்னொரு காவலாளி யிடம் ஆங்கிலத்தில் விசாரித்தார்.

அந்தத் தடித்தவன் சாதாரண வணிகனாம். ஆனாலும் நல்ல அலங் காரத்தோடு வந்து அனு மதிச் சீட்டு அலுவல கத்தில் தன்னை ஒரு நிலப்பிரபு என்று சொல்லி ஏமாற்றி, உயர் வகுப்புக் கட்டணம் செலுத்தி மாடத்துக்கு வந்து விட்டானாம். அவன் அங்கே உட்கார ஆட்சேபித்தார்கள் மற்ற உயர் வகுப்பினர். அவன் எதிர்த்துப் பேச, வந்தது பிரச்னை.

''இங்கே உட்கார்ந் துட்டா பெரிய ஆளாகிட முடியுமா...? சீமான்கள் பண்றதைப் பூராத் தானும் பண்ணனும்னு நெனப்பு...'' என்று சலித்துக் கொண்டான் காவலாளி. அவன் கையில் ஒரு ரூபாய் வைத்துவிட்டு இருக்கைக்குத் திரும்பினார் அகஸ்தே.

அவர்கள் இருந்த பகுதிக்கு இரு தளம் கீழிறக்கி அந்தப் பிரச்னைக்குரியவன் அமர்த்தப்பட்டான். அதே காவலாளியைக் கூப்பிட்டு அது யாருக்கான பகுதி என்று கேட்டார் அகஸ்தே. மிடில் கிளாஸ் என் றான். அதற்கும் மேலே என்ன என்றதும், செகண்ட் கிளாஸ் என்றவன் கூடவே, எல் லாத்துக்கும் கீழே லோ கிளாஸ் என்றொரு உபரித் தகவலும் சொல்லி நகர்ந்தான்.

''நான் இங்கே கழுதையா கத்திக்கிட்டு இருக்கேன். நீ என்ன பண்றே?''

''உங்களுக்கு பேப்பர் எடுக்கத்தான் போயிட்டிருக் கேங்க!''

- எடக்காடு பீ. சேகர்



சிறிது நேரத்தில் வர வேற்பாக இசை முழங்க, அரங்கினுள் நுழைந்தான் அதுவரை அனைவரை யும் காக்க வைத்த அந்த அரச வம்சி. அரங்கம் இருட்டாக, மேடை ஒளிர, நாடகம் தொடங்கியது. ஹூமி யர்களுக்கு அரிச்சந்திரா வைப் புரிந்துகொள்ளத் தலைவலித்தது.

திடீரென்று ஆரவா ரம். அந்த தாமதப் பிரபு மாடத்திலிருந்த வாறு சில்லறைகளை வாரிக் கீழ்ப்பக்கம் இறைத்துக் கொண்டிருந்தான். கூட்டம் அடித்து விழுந்து பொறுக்கிக் கொண்டிருந் தது. அவனைப் போலவே வேறு சில பிரபுக்களும் அவர்கள் மனைவிமார்களும் சில்லறை இறைத்தார்கள். மக்கள் ஓடியோ டிப் பொறுக்கினார்கள்.

அகஸ்தே ஹூமியர் மறுபடியும் அந்தக் காவலாளியை அணுகினார்.

''காவலாளியே... அங்கே எதுக்கு அப்படிக் காசை வீசறாங்க...?''

அகஸ்தே என்ன கேட்கிறார் என்றும் அதற்குக் காவலாளி என்ன சொல்கிறான்

என்றும் தள்ளி நின்றிருந்த லூயிஸ் லூமியருக்குப் புரியவில்லை. சற்று நேரத்தில் பிரகாசம் பூசிய முகத்தோடு திரும்பினார் அகஸ்தே.

''கூட்டம் சேர்க்க வழி கிடைச்சாச்சு...''

''அது என்ன அகஸ்தே..?''

''சஸ்பென்ஸ்... நாளைக்குக் கவனி...''

மறுநாள் வாட்ஸன் ஹோட்டல் முன் ஒரு புதிய அறிவிப்பு வைக்கப்பட்டிருந்தது. லூமியர்களின் சினிமாட்டோகிராப் - அரச பரம்பரை மற்றும் நிலப் பிரபுக்களுக்கு இரண்டு ரூபாய். அரசு அதிகாரிகள் மற்றும் சீமான்களுக்கு ஒரு ரூபாய். நடுத்தர மக்களுக்கு எட்டணா. உடல் உழைப்பாளர்கள் மற்றும் கூலிகளுக்கு நாலணா.

அன்று அரங்கு திமிலோகப்பட்டது.

''அகஸ்தே உனக்கு எப்படி இது தோணுச்சு?''

''எல்லாம் அந்தக் காவலாளி கொடுத்த ஞானம்...''

''சஸ்பென்ஸ் போதும் அகஸ்தே, நேத்து அவன்கிட்டே என்ன பேசினே?''

''நாங்க பேசிக்கிட்டதை அப்படியே சொல்றேன் கேட்டுக்க...'' என்ற அகஸ்தே விவரித்தார்.

முன்தினம்.

''காவலாளியே, அங்கே எதுக்கு அப்படிக் காசை வீசறாங்க...?''

''இது இங்கே வழக்கம். நாடகம் நல்லா இருந்தா நாடகம் போட்டவங்க மீதும் காசு வீசுவாங்க. நாடகம் பார்க்க வந்த இந்த மாதிரி பஞ்சப் பராரிகள் மேலயும் வீசுவாங்க. எப்படிப் பொறுக்கறானுக பாருங்க?''

''இவங்க போடறதாலதானே அவங்க பொறுக்கறாங்க...?''

''இல்லை, அவங்க பொறுக்கட்டும்னு தான் இவங்க போடறாங்க...''

''ரெண்டும் ஒண்ணுதானே...?''

''தப்பு, இங்கே பொது இடங்கள்ல பெரிய மனுஷங்களைப் பெரிய மனுஷங்களா நடத்தணும். அது ரொம்ப முக்கியம்... அப்பத்தான் கூட்டமா வருவாங்க...''

''அதுக்கு என்ன செய்யணும்..?''

''ரொம்ப சாதாரணம், பெரிய மனுஷங்க எதிர்ல சாமானியர்களை மட்டம் தட்டினாப் போதும்...''

''ஓ... அந்த வேலையை யார் செய்யறது..?''

''யாரும் செய்ய வேண்டாம்... மேல... கீழ... நடுவுலேன்னு பிரிச்சு, வாய்ப்பை ஏற்படுத்தினாலே போதும். மத்ததை அவங்களே பார்த்துப்பாங்க.''


மேசையிலிருந்த மதுப்புட்டிகளும் பதார்த்தங்களும் வேகமாகக் காலியாகிக் கொண்டிருந்தன. ●



''இங்கே உட்கார்ந்துட்டா பெரிய ஆளாகிட முடியுமா...? சீமான்கள் பண்றதைப் பூராத் தானும் பண்ணனும்னு நெனப்பு...''

அருள்வாக்கு

ஈடுபாடு



'ஏதனிடம் ஈடுபாடு வைக்கிறோமோ அது உயிருள்ள ஒன்று: அதிலே நம் சிற்றுயிர் ஈடுபாடு என்ற பெயரில் உறவு கொண்டாடுகிறது; அப்புறம் உறவும் போய், தானும் போய், அதுவேயாகிவிட வேண்டும்' என்று இருப்பதே அன்பு. உயிர்! அது முக்கியம்! ப்ராண ஸ்நேஹிதன், உயிர்த் தோழன் என்கிறோமே, அப்படி உயிரோடு உயிர் சேர்வது அன்பு. செஸ்ஸுக்கு, கிரிக்கெட்டுக்கு உயிர் (இருப்பதாகத்) தெரிகிறதா? ஸங்கீதம், நாட்டியம், காவியம் ஆகியவற்றை உயிருள்ள தேவதையாக வைத்து தங்களையே அதற்குக் கொடுத்து ஈடுபாட்டுடன் அப்யாஸம் பண்ணுபவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அவற்றில் ரொம்பவும் உயர்ந்த கட்டத்தைத் தொடும்போது, ''மெய்மறந்து பண்ணினார்கள்'' என்கிறோம். என்ன அர்த்தம்? அப்போதைக்குத் தனி - நானை அந்தக் கலைக்கே இவர்கள் கொடுத்து விடுகிறார்கள். அதைத்தான் 'மெய்மறந்து' என்கிறோம். அந்தக் கலைக்கு 'உயிர்' இருப்பதால் அதுவே இவர்களுக்குள்ளே புகுந்து இவர்களை அதில் உசந்த ஒன்றைப் பண்ணும்படிச் செய்கிறது. ஸயன்ஸில்கூட இப்படி மெய்மறந்த நிலையில்தான் - 'இன்ட்யூஷ'னில் - ஐன்ஸ்டைன் போன்றவர்கள் 'டிஸ்கவரி' பண்ணுகிறார் களே அதெப்படி? கலைகளை அப்யஸிக்கிறவர்களைப் போல அவர்கள் ஒன்றும் ஸயன்ஸ் ஒரு உயிருள்ள தேவதை என்று நினைக்கவில்லையே என்றால்: எல்லா உயிர்களுக்கும் மேலே ஒரு பேருயிர் இருக்கிறதோ, இல்லியோ? அத்தனை கலை, ஞானம், கார்யம் எல்லாவற்றுக்கும் அதுதானே மூலம்? ஒரே ஈடுபாடாக, dedicated ஆக இவர்கள் ஸயன்ஸுக்குத் தங்களை அர்ப்பித்துக் கொண்டிருப்பதை மெச்சி அந்தப் பேருயிரே அவர்களு டைய சிற்றறிவின் வேலைக்கு மேற்பட்ட இன்ட்யூஷனாக ஒரு உண்மையை அவர்களுக்குத் தெரிவித்துவிடும்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய ஸ்வாமிகள்



ஷாநவாஸ் கானுக்கு இருபத்தைந்து வயது. 55 லட்சம் மதிப்புள்ள இரண்டு வீடுகள், 7 லட்சம் மதிப்புள்ள ஹோண்டா சிடி கார், இரண்டரை லட்சம் ரூபாய் மதிப்புள்ள ஃப்ளாட் எல்லாம் இருக்கிறது. ஸாருக்கு என்ன தொழில் தெரியுமா? நகைப் பறிப்பு. டெல்லி மற்றும் காசியாபாத் பகுதிகளில் சாலைகளில் தனியாக நடந்து போகும் பெண்கள், ஆட்டோவில் போகும் பெண்கள் ஆகியோரை கத்தி முனையில் மிரட்டி நகைகளைப் பறிப்பதுதான் அவரது முழு நேரத் தொழில். கடந்த ஒரு வருடமாக 100 பிளஸ் நகைப் பறிப்பு சம்பவங்களில் தன் கூட்டாளியுடன் சேர்ந்து ஈடுபட்டதை ஷாநவாஸ் கான் ஒப்புக் கொண்டிருக்கிறான்.

(ஜாமீன்ல வந்ததும், எலெக்ஷன்ல நின்னு எம்.எல்.ஏ. ஆயிட்டா கான் மேல போட்ட கேஸ்கள் Gone!)

அடுத்த வருடம் டெல்லியில் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் நடக்கவிருக்கின்றன. அதற்காகத் தயாராகும் விளையாட்டு மைதானங்களை ஜனவரியில் விளையாட்டு நிர்வாகக் குழுவிடம் ஒப்படைக்க வேண்டும். சிக்கல் என்னவெனில், இன்னும் சில மைதானங்களில் வேலையே ஆரம்பிக்கப்படவில்லை. காரணம், அந்த இடங்களை, உரிய காண்ட்ராக்டர்களிடம் இன்னும் ஒப்படைக்கவேயில்லை.

(விளையாட்டுதானேன்னு, ரொம்ப விளையாட்டா எடுத்துக்கிட்டாங்க போல!)

சௌம்யா விஸ்வநாதன் என்ற டீ.வி. ஜர்னலிஸ்ட் கொலை வழக்கு

சிதம்பர



டெல்லி மெட்ரோபாலிடன் நீதிமன்றத்தில் நடக்கிறது. குற்றம் சாட்டப்பட்டுள்ள இரண்டு நபர்களை போலீஸ் திகார் ஜெயிலிலிருந்து கோர்ட்டுக்கு அழைத்து வந்தார்கள். திடீரென அவர்களில் ஒருவன், இன்னொருவனை தான் மறைத்து வைத்திருந்த பிளேடால் கழுத்தில் சீவிவிட்டான். உடனே போலீஸ் பாய்ந்து அவனைப் பிடித்துத் தடுத்து நிறுத்தினார்கள். கடந்த ஒரு வருடத்தில் அந்தக் கோர்ட்டில்

இதுபோன்று மூன்றாவது முறையாக நடக்கிறது.

(எங்க ஊர்ல எல்லாம் அருவாதான்! பிளேடெல்லாம் ஜுஜுபி!)

டெல்லி தொடர் வெடிகுண்டு வழக்கில் கைதாகி சிறையில் இருக்கும் இந்திய முஜாஹிதீன் தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்தவன் சாகிப் நிஜார். கடந்த செமஸ்டர் எம்.பி.ஏ. பரீட்சையை ஜெயிலில் இருந்தபடியே எழுதிய அவன், இப்போது, பரீட்சை எழுதுவதற்காக ஜாமீன் கேட்டு விண்ணப்பித்திருக்கிறான். கோர்ட் பதில் கேட்டு டெல்லி போலீசுக்கு நோட்டீஸ் அனுப்பி இருக்கிறது.

(வெடிகுண்டு தயாரிக்கும் வித்தையைப் படம் வரைந்து விவரி என்று கேள்வி கேட்டால், நிஜார் பிச்சு உதறி விடுவான்!)

அண்மையில் மத்திய உள்துறை துணை அமைச்சர் வெளியிட்ட தகவலின்படி இந்தியாவில் மொத்தம் 1276 சிறைகள் உள்ளன. அவற்றில் அடைக்க முடிந்த கைதிகளின் எண்ணிக்கை சுமார் இரண்டு லட்சத்து எழுபத்தேழாயிரம். ஆனால், 2007ஆம் வருட கணக்குப்படியே இந்தியச் சிறைகளில் மொத்தம் மூன்று லட்சத்து எழுபத்தாறாயிரம் பேர் அடைபட்டிருக்கிறார்கள். சிறைகளில் நெரிசலைக் குறைக்க என்ன செய்யலாம் என அரசு யோசித்துக் கொண்டிருக்கிறதாம்.

(காந்தி ஜெயந்தி மாதிரி லோக்கல் தலைவர்கள், அவங்க பையன், பேரன் ஜெயந்திகளை முன்னிட்டு ரிலீஸ் பண்ணிடலாமே...)

ரகசியம்!

வருண் காந்தியின் பாதுகாப்பு பற்றி பா.ஜ.க.வின் சுஷ்மா ஸ்வராஜ் எழுப்பிய கேள்விக்கு, எழுத்து மூலமாகப் பதிலளித்த உள்துறை அமைச்சர் சிதம்பரம், 'பாதுகாப்பு குறித்து லோக்சபாவில் வெளிப்படையாகப் பேசுவது, பாதுகாப்பு ஏற்பாட்டையே கேலிக்குள்ளாக்கும் என்பதால், இந்தக் கடிதம் மூலம் உங்களுக்குத் தெரிவிக்கிறேன்' என்று விவரமாக சுஷ்மாவுக்கு ஒரு கடிதம் எழுதினார். ஆனால், கடிதம் எழுதிய கையோடு சிதம்பரம் தரப்பிலிருந்தே மீடியாவுக்கு லீக் ஆகிவிட்டது என்று குற்றம் சாட்டுகிறார் சுஷ்மா.



(சிதம்பர ரகசியம் என்பது இதுதானோ?)

– பரத் ராம்

19.07.09 முதல் 25.07.09 வரை

மேஷம் : எண்ணங்கள் யாவும் ஈடேறும். பணவசதி பெருகும். வீடு மாற்றம் ஏற்படும். கடன் சுமை தீரும். கல்வியில் நல்ல வளர்ச்சி உண்டாகும். இல்லற வாழ்வு நன்றாக இருக்கும். சனி / ராகு / கேது வழிபாடு செய்துவர நற்பலன் அதிகரிக்கும்.

ரிஷபம் : தெய்வ சங்கல்பம் நிறைவேறும். உல்லாசப் பிரயாணம் வந்து சேரும். தாயின் உடல் நிலை பாதிக்கும். கல்வியில் அக்கறை எடுத்துப் படிக்கவும். வேலையில் உயர்வு ஏற்படும். சனி வழிபாடு செய்துவர நற்பலன் அதிகரிக்கும்.

மிதுனம் : வாக்குவாதம் தவிர்க்கவும். கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை. வாகனத்தில் செல்லும்போது உஷார். கல்வியில் அதிக அக்கறை எடுத்துப் படித்தல் நல்லது. ராகு / கேது / குரு வழிபாடு செய்து வர சங்கடங்கள் தீரும்.

கடகம் : மனக் குழப்பம் நிறைந்து இருக்கும். தேவை இல்லாத செலவு வந்து சேரும். உடல் நிலையில் கவனம் தேவை. கணவன் மனைவிக்குள் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. ராகு / கேது / குரு / சனி வழிபட்டு வர தீமைகள் விலகி நற்பலன் பெருகும்.

சிம்மம் : வெற்றிகளைத் தரும் வாரம். கடன் தொல்லை விலகும். திருமணம் தடை விலகி கைகூடும். கணவன் - மனைவி உறவு திருப்திகரமாக இருக்கும். குழந்தைகள் மூலம் சுபச் செலவு உண்டாகும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். சனி / குரு வழிபாடு செய்துவர நன்மை உண்டாகும்.

கன்னி : பூர்விகச் சொத்து வந்து சேரும். நண்பர்களை விட்டுப் பிரிய நேரிடும். செலவுகள் அதிகரிக்கும். கல்வியில் கவனம் தேவை. திடீர் பண வரவு ஏற்படும். வழக்கு வெற்றி பெறும். கூட்டாளிகள் மூலம் அனுகூலம் ஏற்படும். வீடு மாற்றம் ஏற்படும். தொழில்துறையில் முன்னேற்றம் ஏற்படும். ராகு / கேது / சனி வழிபாடு நன்மை தரும்.

துலாம் : வேலையில் இடமாற்றமும் பதவி உயர்வும் நற்பெயரும் ஏற்படும். கணவன் - மனைவிக்குள் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. குழந்தை பாக்கியம் உண்டாகும். புதிய தொழில் தொடங்க ஏற்ற தருணம். புதிய வீடு / மனை வாங்க ஏற்ற தருணம். ராகு / கேது/ குரு வழிபாடு செய்து வர நற்பலன் பெருகும்.

விருச்சிகம் : புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். நீண்ட காலப் பிரச்னை முடிவுக்கு வரும். சுபகாரியப் பேச்சுவார்த்தைகள் பலிதமாகும். திருமணம் தடை விலகி கைகூடும். குழந்தைகள் இடம்மாறிப் போவார்கள். வியாபாரம் மந்த நிலையில் இருக்கும். சனி / குரு வழிபாடு செய்துவர நற்பலன் பெருகும்.

தனுசு : சுபகாரியம் கைகூடும். படிப்பில் முன்னேற்றம் ஏற்படும். உடல் நிலையில் இருந்து வந்த தொல்லைகள் விலகும். கடன் தொல்லை தீரும். கல்வி வளம்

மேலோங்கும். மனஸ்தாபம் விலகும். பண வரவு பெருகும். ராகு / கேது / குரு வழிபாடு நற்பலனைத் தரும்.

மகரம் : எதிலும் அதிகக் கவனமுடன் செயல்படுவது நல்லது. திருமண முயற்சிகள் கைகூடி வரும். உடல் நிலையில் இருந்துவந்த சிரமங்கள் விலகி பூரண குணமாகும். ராகு / கேது / சனி வழிபாடு செய்துவர நற்பலன் அதிகரிக்கும்.

கும்பம் : நல்லவர்களின் உதவி கிடைக்கும். புதிய பொருட்கள் வாங்குவீர்கள். இல்லற வாழ்வு மகிழ்ச்சிகரமாக இருக்கும். குழந்தைகள் மூலம் சந்தோஷம் உண்டாகும். கடன் தொல்லை தீரும். சனி வழிபாடு செய்துவர நற்பலன் அதிகரிக்கும்.

மீனம் : மனச் சுமை நீங்கும். தொலைதூர நண்பர்கள் மூலம் அனுகூலமான தகவல் வந்து சேரும். பூர்விகச் சொத்து பாகப்பிரிவினை ஆகும். கல்வி வளம் மேலோங்கும். குழந்தைகள் இடம் மாறிப் போவார்கள். ராகு / கேது வழிபட்டு வர நற்பலன் பெருகும். ●



நடக்குமென்பார்; நடக்கும்!

தஞ்சை பரத்வாஜ்

அமரர் கல்கி



பிரசித்தி பெற்ற தேவி வித்யாலயத்தின் ஸ்தாபகரும் தலைவியுமான சகோதரி அன்ன பூரணி தேவி, ஒருநாள் மாலை வழக்கம் போல் வித்யாலயத்தைச் சுற்றியிருந்த பெரிய தோட்டத்தில் உலாவிக் கொண்டிருந்தார். வித்யாலயத்துக்குக் கொஞ்ச தூரத்திலுள்ள ஒரு பங்களாவிலிருந்து வந்த மேளச் சத்தம், அவருக்கு ஏதேதோ பழைய நினைவுகளை உண்டாக்கின. எப்போதும் சாந்தம் குடி கொண்டிருக்கும் அவருடைய முகத்திலே ஒரு நிமிஷம் கிளர்ச்சியின் அறிகுறி தோன்றி அடுத்த கணம் மறைந்தது.

அக்காட்சி, அமைதியான சமுத்திரத்தில் திடீரென்று ஒரு பேரலை கிளம்பி, கரையோரமிருந்த பாறை மீது ஒரு மோது மோதி, அதை ஒரு நிமிஷம் மூழ்கடித்துவிட்டு அடுத்த நிமிஷம் மறைய, மறுபடியும் அக்கடலில் முன்போல் அமைதி குடிகொள்வது போலிருந்தது. அலை அடித்தது என்பதற்கு ஞாபகார்த்தமாக, அந்தப் பாறையிலே உள்ள பள்ளங்களில் தண்ணீர் தங்கியிருப்பது போல், அன்னபூரணியின் கண்களிலும் ஜலம் தளும்பி நின்றது.

அப்போது அவர் நடந்துகொண்டிருந்த பாதையில் எதிர்ப்புறமாக வித்யாலயத்தின் உதவி ஆசிரியை ஸ்ரீமதி சாவித்ரி, எம்.ஏ.; எல்.டி. வந்து கொண்டிருப்பதைப் பார்த்ததும் அன்னபூரணி தேவி கண்ணீரைச் சட்டென்று துடைத்துக்கொண்டு புன்னகையுடன்



நினைவலைகள்

சாவித்ரியை வரவேற்கிறார். இருவரும் சமீபத்தில் ஒரு வேப்பமரத்தின் அடியில் இருந்த மேடை மீது உட்கார்ந்தார்கள்.

பெண் குலத்தின் சேவையில் தலை நரைத்துப் போனவர் என்றால், அது சகோதரி அன்னபூரணிக்கு முற்றும் பொருத்தமாயிருக்கும். அவருடைய நெற்றியைக் கவிழ்ந்து கொண்டு அடர்த்தியாய் வளர்ந்திருந்த வெள்ளி கேசத்தைப் பார்க்கும்போது, மலைச் சிகரங்களின் மேல் அடுக்கடுக்காகத் தங்கி நிற்கும் வெண்ணிற மேகங்களின் காட்சி ஞாபகத்துக்கு வரும். இவ்வாறு தலைமயிர் நரைத்துப் போயிருந்தாலும், அவர் முகத்தைப் பார்க்கும்போது அவர் ஐம்பது வயதைத் தாண்டியவர் என்று யாராலும் சொல்ல முடியாது. மாறாத இளமையின் இரகசியத்தைக் கண்டு பிடித்தவரோ அவர் என்றுகூடத் தோன்றும். வெள்ளைக் கலையுடனும், வெண்மயிர் அடர்ந்த தலையுடனும், சாந்தம் குடிகொண்ட முகத்துடனும் தோன்றிய சகோதரி அன்னபூரணியைப் பார்ப்பவர்கள், அவரை சரஸ்வதி தேவியின் அவதாரமென்றே நினைப்பார்கள்.

அன்னபூரணியின் வாழ்க்கை வரலாறு, எல்லாரும் பிரசித்தமாக அறிந்த விஷயம். ஒன்பதாவது வயதில், நினைவு தெரியும் முன்பே வைதவ்யக் கொடுமைக்கு ஆளாகும் துர்ப்பாக்கியத்தைப் பெற்றவர் அவர். அவருடைய அந்தத் துர்ப்பாக்கியமே பெண் குலத்தின் நற்பாக்கியமாயிற்று. பிற்காலத்தில் அவர் படித்து பி.ஏ.; எல்.டி. பட்டம் பெற்றார். அது முதல் இளம்பிராயத்தில் கணவனை இழந்தவர்கள், கணவன்மார்களால் புறக்கணிக்கப்பட்டவர்கள், அநாதைப் பெண்கள் முதலியோருக்குத் தொண்டு செய்வதிலேயே தமது வாழ்நாளைச் செலவிட்டு வந்தார். அவருடைய இலட்சியத்தை நிறைவேற்றுவதற்கு ஒரு சாதனமாக, இந்த தேவி வித்யாலயத்தை ஸ்தாபித்து தமது உடல் பொருள் ஆவி எல்லாவற்றையும் அதற்கே அர்ப்பணம் செய்திருந்தார்.

('கடிதமும் கண்ணீரும்' கதையிலிருந்து...)

"அப்புறம் லைஃப் எப்படி போயிட்டிருக்கு?"

"அப்படியேதான் போயிட்டிருக்கு மேடம்."

"வாவ்! என்ன அருமையா பதில் சொல்றீங்க! உங்க ஹாபி என்ன?"

"டி.வி. பார்ப்பேன். ரேடியோ கேட்பேன், அரட்டையடிப்பேன், நேரமே பத்தலங்க மேடம்."

"ரொம்ப நகைச்சுவையா பேசறீங்க, நீங்க விரும்பிக் கேட்ட 'தீப்பிடிக்க தீப்பிடிக்க' பாட்டு உங்க மனசைப் பத்த வைக்க வருது. நீங்கள் கேட்டுக் கொண்டிருப்பது / பார்த்துக் கொண்டிருப்பது..."

இப்படித்தான் போய்க் கொண்டிருக்கிறது, தமிழ்நாட்டில் இளைய சமுதாயத்தின் குரல்.

'24 மணி நேரம் போதவில்லை' என்று குறைபட்டுக் கொள்கிறவர்கள் ஒருபுறம். 'ஒவ்வொரு நாளும் போறதே பெரிய 'போரா' இருக்கு' என்று சொல்பவர்கள் ஒருபுறம். நேரத்தின் அருமையை எப்படி உணர்வது, உணரவைப்பது? தேர்வு அறைகளில் கடைசி ஐந்து மணித்துளியின் அருமையை நன்றாகப் படிக்கும் மாணவ மாணவியரிடத்தில் கேட்டுப் பாருங்கள்.

தேர்வு தொடங்கியவுடன் வினாத்தாளை வாங்கி, கால் மணி நேரம் சாமி கும்பிட்டு, அரை மணி நேரம் சுற்றிப் பார்த்து, அந்த அறையில் யாரும் எதிர்பார்க்காத நேரத்தில் படாரென்று எழுந்து, வேகமாக வெளியே செல்லும் மாணவக் கண்மணிகளையும் நான் பார்த்திருக்கிறேன்.

தேர்வு எழுதிவிட்டு வெளியே வந்த ஒரு மாணவனிடத்தில், "கேள்வி ஈஸியாக இருந்ததா?" என்று கேட்டேன். உடனே அவனும், "அதுக்கென்ன ஐயா... புத்தகத்தைப் பார்த்துத்தான் கேள்வி எடுக்கிறாங்க, ஈஸியாத்தான் இருந்தது. பதில்தான் கஷ்டமாயிருந்தது, வரட்டுமா ஐயா" என்று விரைந்து காணாமல் போனான்.

ஒருமுறை மதுரையில் ஒரு கூட்டத்தில் பேசிவிட்டு எங்கள் சொந்த ஊருக்குச் செல்லும் கடைசிப் பேருந்தை (இரவு 10.40 மணி) ஒரு சில நிமிடங்களில் தவறவிட்ட நான், கண்ணுக்கெதிரே விரைந்து போகும் பஸ்ஸைப் பிடிக்க ஒரு ஆட்டோவில் ஏறினேன். டிரைவரிடம் விவரத்தைச் சொன்னேன். அந்த ஆட்டோ டிரைவரும் தெலுங்குப்பட கிளைமாக்ஸில் வில்லனை விரட்டிப்போகும் கதாநாயகனின் கார் வேகத்துக்கு வண்டியை ஓட்டியபடி, 'நீங்க கவலைப்படாதீங்க



கு.ஞானசம்பந்தன்

ஐயா... ஒரு நொடியில கொண்டு விட்டுடுறேன்' என்று சொன்னபடியே ஒரு நொடியில் (பள்ளத்தில்) விட்டார். பிறகு ஒரு மணல் லாரியில் ஏறி, எங்கள் ஊரில் எல்லோரும் செகண்ட் ஷோ படம் விட்டுப் போனபோது நானும் வீடு போய்ச் சேர்ந்தேன். நேரத்தின் அருமையை நான் உணர்ந்திருந்தாலும் நான் பேசிய கூட்டத்தின் வரவேற்புரை சொன்னவரோ, தலைவரோ, கடைசியில் நன்றியுரை சொன்னவரோ அல்லது கொன்னவரோ உணராததால், எனக்கு அத்தனை இடர்ப்பாடு!

ஒலிம்பிக் போட்டி ஓட்டப்பந்தயத்தில் ஒரு வினாடியில் கூட அல்ல. ஒரு வினாடியின் பத்தில் ஒரு பகுதியில் (micro second) தங்கப் பதக்கத்தைத் தவற விட்டவருக்குத்தான் அந்த மைக்ரோ செகண்டின் அருமை தெரியும்.



சிரிப்போம் ஜெயிப்போம்!

சில நேரங்களில் நாம் எவ்வளவு சரியாக நேரத்தைக் கடைப்பிடித்தாலும், நாம் ஏறிச் செல்லும் பேருந்து, தொடர் வண்டி, விமானம் இவையெல்லாம் சரியான இடத்துக்குச் சரியான நேரத்துக்குப் போகவில்லை என்றால் முடிவு... சோகம்தான்... தோல்விதான்!

என் அமெரிக்கப் பயணத்தின்போது

நேரம் நல்ல நேரம்!



நியூஜெர்சி நகரத்தில் இருந்து நியூயார்க் வரை இரயிலில் செல்ல வேண்டிய வாய்ப்பு வந்தது. எல்லா விவரங்களையும் என்னிடத்தில் சொல்லி இரயிலேற்றி விட்ட நண்பர் விடைபெற, அந்த இரண்டு மணி நேரப் பயணத்தில் நான் பல ஆச்சரியங்களைப் பார்த்தேன்.

தானே மூடித்திறக்கும் கதவுகள், ஓடும் இரயிலிலேயே டிக்கட் வாங்கிக் கொள்ளும் வாய்ப்பு, அடுத்த ஸ்டேஷன் என்ன என்பதை ஒலிபெருக்கியில் சொல்லும் அறிவிப்பு. இத்தனை வசதி இருந்தும், வண்டி ஒவ்வொருமுறை



ஒரு மைக்ரோ செகண்டின் அருமை ஓட்டப் பந்தய வீரர்களுக்குத் தான் தெரியும்

நிற்கும்போதும் என் பக்கத்தில் இருப்பவரிடம் நான் இறங்கவேண்டிய இடம் வந்துவிட்டதா என்று கேட்டுக் கொண்டிருந்தேன். எல்லாவற்றுக்கும் பொறுமையாகப் பதில் சொன்ன அவர், எனக்கு ஒரு எளிய வழியும் சொல்லிக் கொடுத்தார்.

ஒவ்வொரு இரயில் பெட்டியின் ஏறும், இறங்கும் உள்வாசலில் ஒரு அட்டவணை ஒட்டியிருந்தார்கள். அந்த இரயில் எங்கிருந்து புறப்படுகிறது, புறப்படும் நேரமென்ன, அடுத்த நிறுத்தம் எது, அப்போதைய நேரமென்ன என்று வரிசையாகப் போட்டு, கடைசி நிறுத்தத்தின் நேரத்தையும் போட்டிருந்தார்கள்.

அதை அவர் சுட்டிக்காட்டி ''உங்கள் கடிகாரத்தைப் பார்த்துக் கொள்ளுங்கள். நீங்கள் இறங்க வேண்டிய இடத்தில் ஒன்பது மணி பதின்மூன்று நிமிடத்துக்கு இறங்குங்கள். அது நீங்கள் செல்ல வேண்டிய இடமாகத்தான் இருக்கும்'' என்று அவர் உறுதியாகச் சொன்னபடியே மிகத் துல்லியமாக 9.13க்கு நான் இறங்கினேன். அது நியூயார்க்தான்!

இதை நண்பரிடம் சொன்னதும் சிரித்தார்.

''என்ன சிரிப்பு நான் எவ்வளவு சீரியஸாக நேரத்தைப் பத்திச் சொல்றேன். சிரிச்சா என்ன அர்த்தம்?'' என்றேன் சற்று கோபத்தோடு.

''அட அதுக்குச் சிரிக்கலைப்பா, ஒரு தடவை நான் இரயில்ல ஏறி மதுரையில இருந்து இராமேஸ்வரத்துக்குப் போய்க்கிட்டு இருந்தேன். அது பகல்நேர பாஸஞ்சர் வண்டி. பரமக்குடியைத் தாண்டி வேகமாப் போய்க்கிட்டிருந்த ரயில், 'சடார்'னு நின்னுபோச்சு. என்னடான்னு எல்லோரும் இறங்கிப் பார்த்தா... ஒரு எருமைமாடு இரயில்வே லைன்ல படுத்திருக்கு. பிறகு எல்லோரும் சேர்ந்து அதை விரட்டினோம். ரயில் கிளம்பிப் பாதி தூரம் போயிருக்கும். திரும்ப அதே பிரச்னை, நான் பயத்தோட பக்கத்தில் இருந்தவர்கிட்ட கேட்டேன், 'இந்தப்பக்கம் எருமைமாடுகள் அதிகமா?' அவர் சோகத்தோடு பதில் சொன்னார், 'அட நீங்க ஒண்ணு, அதே எருமைதாங்க, ரயிலை முந்தி முந்தி வந்து படுத்துக்கிறது'ன்னார்'' என்று சொன்ன நண்பர், ''இந்தச் சமயத்தில் அத நெனச்சுத்தான் சிரிச்சேன். ஆனா இப்ப அதெல்லாம் மாறி அதிகமாயிருக்கும்!'' என்றார்.

''எது எருமையா?'' என்று நான் கேட்டேன்.

''அட ரயிலோட வேகம் கூடியிருக்கும்'' என்றார்.

நாங்கள் சேர்ந்து சிரிக்க... நேரம் போனதே தெரியவில்லை.

(வெற்றி தொடரும்)



''உலகத்திலேயே லண்டன் க்யூ கார்டனுக்கு அடுத்து, இதுதான் குறிப்பிடத்தக்க பொட்டானிகல் கார்டன்னு சொல்லிக்கறாங்க. 1847ல் நெட் ஐவர் (Net Ivor), அஞ்சு பேர் இல்லீங்க, ஒருத்தர்தான், இந்தப் பூங்காவை உருவாக்கினார். நம்ம ஊரு காய் கறிங்க, இங்கிலாந்துலேர்ந்து ஊட்டிக்கு வந்து தங்கின ஆளுங்களுக்கு ஒத்து வரலை. அதனால இந்த நெட் ஐவர் லண்டன் பூங்காவிலேர்ந்து இங்கிலிஷ் காய்கறி விதைகளைக் கொண்டாந்து இந்தப் பூங்காவுல விதைச்சு, உற்பத்தி செஞ்சார்.

அப்புறமா அரிய வகை மரங்களை வளர்க்க ஆரம்பிச்சார். இந்த மண்ணுக்கும் சீதோஷ்ணத்துக்கும் ஜோரா வளர்ந்திடுச்சு. ரொம்ப குஷியாயிட்டார். காய்கறிச் செடிங்க, மரம், பூச்செடிகள்னு விரிவாக்கி பொட்டானிகல் கார்டனா ஆக்கிட்டார்'' என்று ஊட்டி தாவரவியல் பூங்கா பற்றிப் பெருமையுடன் குறிப்பிடுகிறார் ஓர் ஊட்டிவாசி. இங்குள்ள சிறப்பு அம்சங்கள் சில...

★ நூறு வகையான மர வகைகள், நூற்றுக்கணக்கான மரங்கள். இமயமலையில் செழித்து வளரும் பலவகை மரங்கள் இங்கும் வளர்ந்திருக்கு.

★ தென் ஆற்காடு மாவட்டம், திருவாக்கரையிலிருந்து கொண்டு வந்து வைத்திருக்கும் கல்மரத்தின் வயது என்ன தெரியுமா? மயக்கம் போட்டு விழுந்துடாதீங்க. சுமார் இருபது மில்லியன் ஆண்டுகள்னு தொல்லியல் ஆய்வாளர்கள் சொல்றாங்க.

★ வசந்தமாளிகை சினிமாவுல சிவாஜி, வாணிஸ்ரீக்குக் கட்டி வெச்ச மாதிரி, பொட்டானிகல் கார்டன்ல கண்ணாடி மாளிகை இருக்கு. அந்தக் கண்ணாடி மாளிகையின் ஸ்பெஷாலிட்டி வருடம் முழுவதும் பூத்துக் குலுங்கும் பூச்செடிகள்!

வருடாவருடம் மே மாதம் மூன்றாவது வாரம் நடக்கும் ஊட்டி மலர் கண்காட்சி, இந்தப் பூங்காவில்தான் நடைபெறுகிறது. இந்த வருடம் நூற்றுப் பதின்மூன்றாவது மலர்க் கண்காட்சி நடந்தது. அந்த மூன்று நாட்களில் சுமார் இரண்டு லட்சம் பேர் பார்த்துச் சென்றார்கள்.


இங்கிருக்கும் கல்மரத்தின் வயது சுமார் 20 மில்லியன் ஆண்டுகள்!

கார்டனில் கண்ணாடி மாளிகை!

வாசகர் யோசனை: பி.ஏ.வதூத்

ஒரு தேயிலைத் தோட்டம் பிக்னிக் ஸ்பாட் ஆகுமா? ஆகும்னு நிரூபிச்சிருக்கு குன்னூரில் இருக்கும் 'ஹை ஃபீல்டு எஸ்டேட்'. இருநூறு ஏக்கர்ல பச்சைக் கம்பளம் விரிச்சுப் போட்டாப்ல வரவேற்குது. நாம போயிருந்தது தூறலும் சாரலும் மழையும் மாறி மாறி ரவுண்டு கட்டி அடிச்ச ரம்யமான பொழுது. நம்ம உடம்புக்குள்ளார வெட... வெட...குளிரு.



சும்மா சொல்லப்படாது. உலகத்துல நம்மாளுங்க ஒவ்வொண்ணுக்கும் ஒரு கதை வெச்சிருக்காங்க. அதை நம்ம கைடு ஆல்பர்ட் வாயால சொல்லக் கேட்போம்.

''கிறிஸ்டினு வனவிலங்குகள் ஆய்வாளர், 1833ல உலகம் பூரா சுத்துறாரு. அப்ப ஒரு காட்டுக்குள்ளார ஒரு மரத்தோட இலைகளைத் தின்ன விலங்குகள், அப்படியொரு குதியாட்டம் போடுதுங்க. மனுஷன் மலைச்சுப் போறார். அந்த இலைகளைப் பறிச்சுட்டு சைனா போறார். உடம்பு முடியாமல் போகுது. வைத்தியம் பார்க்கிறாங்க. சரியா வரலை. அவர் கூட இருந்தவங்க, அவர் கொண்டாந்த இலையில ஏதாவது விஷயம் இருக்கும்னு நெனைக்கறாங்க. அந்த இலைகளை வேக வெச்சு வடிகட்டி அந்தத் தண்ணியை கிறிஸ்டிக்குத் தர்றாங்க. என்ன ஆச்சர்யம்! உடம்பு சுகமாகி புத்துணர்ச்சி கிடைக்குது. இங்கிலாந்து போய் அந்த இலை பற்றின ஆராய்ச்சியில் ஈடுபடுறார் கிறிஸ்டி. அந்த இலையில நிக்கோடின் இருக்குன்னு தெரிய வருது. (வனவிலங்குகள் ஆட்டம் போட்டது அதனாலதான்!) அப்புறமா நிக்கோடினை நீக்கிய தேயிலை தயாராகுது. இப்பவும் இங்கிலாந்து விமானப் பயணங்கள்ல தரப்படுற டீ பிஸ்கட்டுக்கு 'கிறிஸ்டி'னுதான் பேரு!

உலகின் முதல் டீ எஸ்டேட் எங்கே அமைஞ்சது தெரியுமா? ஊட்டியில. 1855ல் 'லார்ட் டன்சல் டே' என்கிற பிரிட்டிஷ் கவர்னர், 'டன்சல் டே எஸ்டேட்' என்கிற பேருல தேயிலைத் தோட்டம் அமைச்சாரு. தேயிலை மரம்னு சொல்றாங்க. இங்கே பார்த்தா குட்டை குட்டையா செடி மாதிரி இருக்கேனு தோணும். எஸ்டேட்டைச் சுத்திப் பார்ப்போம். அதெல்லாம் ஒவ்வொண்ணா சொல்றேன்!''

ஆல்பர்ட்டைப் பின்தொடர்ந்தோம்.

''தேயிலை மரம் அதுபாட்டுக்கு உயரமா மேல போய்க்கிட்டே இருக்கும். தேயிலை பறிக்கறது எப்படின்னு யோசிச்சாங்க. அதனால மரத்தை, குட்டைச் செடிகளா கவாத்து பண்ணி வளர்க்க ஆரம்பிச்சாங்க. இப்ப உபயோகத்துல இருக்கறது நாற்றங்கால் பதியத் தேயிலைச் சாகுபடி. குறிப்பிட்ட உயரத்துக்கு மேல இது உயராம அப்பப்ப கவாத்து பண்ணணும். அதனால தோட்டம் முழுதும் நூல் பிடிச்சு அமைச்சாப்ல எல்லாச் செடிகளும் ஒரே சைஸ்ல ஒரே உயரத்துல ரம்யமா இருக்கும்'' என்கிறார் ஆல்பர்ட்.

தேயிலைச் செடிகளுக்கு மத்தியில சில்வர் ஓக் மரங்கள். நானூறு சதுர அடிக்கு ஒரு மரம். இந்த மரம் தேயிலைத் தோட்டங்களுக்கு ஒரு வரம். மண் சரிவைத் தடுக்கும். அதன் வேர்கள் மழை நீர் சேகரிப்பு நிலையங்கள் எனச் சொல்லப்படுகின்றன. தண்ணீரைச் சேமித்து, அதுவே தேயிலைச் செடிகளுக்குத் தந்து கொண்டேயிருக்குமாம். இயற்கை வழி சொட்டு நீர்ப்பாசன உத்தி!


தேயிலை பறிக்கறாங்க. பெரிய சைஸ்லே நீளமான ஹால்லர்ல பரப்புறாங்க. அதனடியில மின் வெப்பம். வெப்பக் காத்துல அந்தப் பச்சை இலைகளிலிருந்து நிக்கோடின் நீக்கப்படுது. அதனை சல்லடையில சலிச்சு அரைவைக்கு அனுப்பறாங்க. அரைவையின்போதே நான்

கைந்து ரகங்கள்ல டீத்தூள் பிரிக்கப்படுது. உயர்ரகங்களை ஏற்றுமதி பண்றாங்க. அதற்கடுத்த ரகங்கள் உள்நாட்டு விற்பனைக்கு அனுப்பப்படுது. தெருவோர டீக்கடைகளில் நாம் குடிக்கறது சூப்பர் டஸ்ட் டீ!

''தேயிலைத் தூள்ல பல வகை இருக்கு. உயர் ரகம். நடுரகம். கடை ரகம்னு. இதுல ஒயிட் டீ, வெள்ளி நிறத்துல இருக்கும். ஒரு கிலோ ஐந்தாயிரம் ரூபாய்! மசாலா டீ, சாக்லெட் டீ, வீட்டு உபயோக டஸ்ட் டீ, லீஃப் டீ, கிரீன் டீனு பலவகை.

பொதுவா சுத்தமான டீத் தூள்ல இருநூறு கப் டீ தயாரிக்கலாம்னா, கலப்பட டீத்தூள்ல நானூறு கப் டீ தயாரிக்கப்படுது. டீத்தூள்ல கலப்படம் பல நிலைகள்ல பல வகைகள்ல நடக்குது. தேயிலை வாரிய இயக்குநர் நசீமின் கடும் நடவடிக்கைகளின் மூலமாக, தேயிலை உற்பத்தி நிலையங்களில் கலப்படம் பெருமளவு தடுக்கப்பட்டுள்ளது. தேயிலை நூறு வருஷப் பயிர். ஒரு மரத்திலேயிருந்து முதல் அறுபது வருஷம் அதிக அளவு தேயிலை கிடைக்கும். அப்புறமா கொறைஞ்சு போயிரும்!'' எனச் சொல்கிறார் ஹைஃபீல்டு ஷாப்பிங் சென்டரின் விற்பனை மேலாளர் என்.சேகர்.

வாசகர் யோசனை :
நயிமா ரஃபீக், சென்னை



இலக்கியக் கூடல்

விடாது பெய்யும் அடை மழை கிளப்பிய மண் வாசமும் சில்லென்ற தைல வாசனையும் கூடிக் குலவிக் கொண்டிருந்தன கூடலூரில். பெய்யும் மழைக்காதலன் எங்கும் தேங்காமல் பள்ளத்தை நோக்கி ஓடிக்கொண்டே இருந்ததால் மழையின் பாதச் சுவடுகள் பாதையில் அதிகம் இல்லை. கேரளமும் கர்நாடகமும் தமிழகத்தில் கூடுகின்றதால் கூடலூர் என்ற பெயரைச் சூடிக்கொண்ட இவ்விடத்தில், சங்கத்தின் ஒற்றை அறையில் கூடிப் பேச நீலகிரி தமிழ்ச்சங்கத்தினர் முடிவெடுத்து கல்கி குழுவை அழைத்திருந்தனர். அந்த அறையில் நிகழ்ந்த அறிமுக உரையாடல்.

''**எ**ன்ன ஸார்! இங்கு எங்க பார்த்தாலும் மலையாளமும் கன்னடமும் கடை போர்டில இருக்கே''ன்னு கேட்டதும்தான் தாமதம்.

''ஆமாங்க ஐயா... இங்க மலையாளம் பசு; கன்னடம் கன்று'' என்றார் எழில் ராஜா. ''அப்ப தமிழ்?'' என்றோம். ''அது நோய்வாய்ப்பட்ட எருது'' என்ற அவரின் நையாண்டியில் ஏதோ உள்ளர்த்தம் குத்தியது.


''இருபது வருஷத்துக்கு முன்பு தமிழனுக்கு இங்க மரியாதையே இல்லை. இலங்கைத் தமிழர்களை இங்கு குடியேற்றிய பின்தான், 'இந்த பூமி தமிழ் நாட்டிலதான் இருக்கு. இது நம்ம நாடு' என்று யோசிக்கவே முடிந்தது. மலையாளப் பெண்ணைக் கட்டிக்கிட்டு மலையாளம் பேசினாத்தான் கௌரவம்னு நெனைக்கற இளைஞர்கள் இங்கு உண்டு. அந்த அளவுக்கு மலையாள ஆதிக்கம்.



இப்பத்தான் கொஞ்சம் மாறியிருக்கு. டி.வி.யும், பத்திரிகையும் நுழையாத கிராமங்களே அதிகம். பலருக்கு வைரமுத்துவைக் கூடத் தெரியாது. இந்த மாதிரியான சூழலில்தான் நாங்க எழுதிக்கிட்டு இருக்கோம்'' என்றார் பத்திரிகையாளரான அ.நாகநாதன்.

தலைமையாசிரியர் ஆர்.கருப்பையா, ''கண்ணிருந்தும் குருடாப் போச்சு ஊருங்க; கல்லாமை ஊனமாக்கிடும் பாருங்க'' என்ற பாடலைப் பாடி, தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டார். அறிவொளி இயக்கத்தைச் சேர்ந்தவர். தானே பாடலை எழுதி, மெட்டு கட்டி மக்கள் மத்தியில் பாடி, புதுக்கோட்டை திருவரங்குளம் ஒன்றியத்தில் 18,747 பேரை எழுத, படிக்க வைத்திருக்கிறாராம். ''சேலம் பஸ் ஸ்டாண்டில் கட்டணக் கழிப்பிடத்தில் காசு வாங்கி கல்லாவில போடுற வேலை பார்க்கிறவர் என்பாட்டை ஏற்கெனவே கேட்டிருப்பார் போல. வணக்கம் வெச்சுச் சிரிச்சார். நான் ரெண்டு கையைக் கூப்பி தமிழன் பாணியில் வணக்கம்னு சொன்னேன். பஸ் ஸ்டாண்டில் நின்னுக்கிட்டு இருந்தவங்க அவரைப் பார்த்தாங்க. அந்த மனுஷன் பொலபொலன்னு கண்ணீர் விட்டு அழ ஆரம்பிச்சுட்டார். நான் கொடுத்த கட்டணத்தை வாங்க மறுத்துட்டார். என்ன ஏதுன்னு விசாரிச்சா, இதுவரை யாரும் அவருக்குப் பதில் வணக்கம் சொன்னதில்லையாம். நான் வணக்கம் வெச்சது அவருக்கு அவ்வளவு பெருமை. வணக்கத்துக்கு ஒரு தமிழனை ஏங்க வெச்சிருப்பது எவ்வளவு





✱ விஜயகுமார்

கம்யூனிஸம் கற்க லஞ்சம்!

மோசமான சூழ்நிலை. இதெல்லாம்தான் நான் பாட்டா எழுதுவேன்'' என்றார் கருப்பையா.

''கீழ்வெண்மணி இருஞ்சூர் கோபால கிருஷ்ண நாயுடு கொலை வழக்கில் குற்றவாளியா 14 வருஷம் சிறையில் இருந்தேன். மன்னிப்பு கோரியோ, தண்டனையைக் குறைக்கக் கோரியோ நான் விண்ணப்பிக்கல. உலகத் தமிழ் மாநாட்டுக்கு ஜெயிலில் இருந்தபடியே நான் ஒரு கவிதை எழுதி அனுப்பினேன். கவிஞர் கண்ணதாசன் அதைப் படிச்சுட்டு என்னைப் பார்க்க ஜெயிலுக்கு வந்தார். அப்புறம் அவர் அரசவைக் கவிஞரானதும் எம்.ஜி.

'ஊழலில் மிதக்கிறது உன் தேசம்
நீ என்ன செய்வதாய் உத்தேசம்'



* எழில்ராஜா

ஆரிடம் விண்ணப்பித்து நான் வெளியேவர ஏற்பாடு செய்தார். இனப் பற்றுல நான் ஜெயிலுக்குப் போனேன். தமிழ்ப் பற்றுல நான் விடுதலையானேன். உணவகம் வெச்சு நடத்திக்கிட்டு இருக்கேன். ஏழை மாணவர்களுக்கு உணவுப் பொட்டலத்தை இலவசமா இல்ல; லஞ்சமாவே கொடுத்து என்னோட கம்யூனிஸ சித்தாந்தத்தைக் கடத்திக்கிட்டு இருக்கேன்'' என்ற போராளி எழில்ராஜா,

'ஊழலில் மிதக்கிறது உன் தேசம்
நீ என்ன செய்வதாய் உத்தேசம்' என்ற கவிதையை வாசிக்கையில் கண்கள் சிவப்புக் கொடியாய்க் காட்சியளித்தன.

''கூடலூரில் முதன்முதலாய் கவிதைத் தொகுப்பு போட்டதும் நான்தான்; பரிசு வாங்கியதும் நான்தான்; கடைசி ஆளும் நான்தான்'' என்று மணிவண்ணன் தமக்கு முன்பும் பின்புமான நீலகிரி இலக்கியச் சூழலை விவரித்தார். மொழிப் போர் தியாகி தாளமுத்துவின் பெயரை புனைபெயராகச் சுவீகரித்துக் கொண்ட குணசேகர், தூய தமிழில் பேசினார். ''எப்படி இது சாத்தியம்?''னு கேட்க, ''நான் தமிழன் ஐயா. ஆங்கிலேயன் வரும்முன் என் முன்னோர்கள் தமிழில் தானே பேசினார்கள். தமிழில் பேச ஏன் தலைகுனிவு? சொந்தத் தலை உள்ள எவனும் தமிழில் பேசத் தயங்கமாட்டான்'' என்றார். பிறகு கூட்டத்தில் ஸார் என்ற வார்த்தை காணாமல் போயிற்று.

பசுமையான நீலகிரியில் தமிழின் வறட்சியைப் போக்க, தொடர்ந்து சில படிப்பகங்களுக்கு இலவசமாக கல்கியை அனுப்பி வாசிப்பு எண்ணத்தைக் கூட்டலாமே என்றார். மௌண்டான் செட்டி மக்களைப் பற்றிய தமது ஆய்வுகள் குறித்துப் பேசினார்.

''மொழிவாரியாக மாநில எல்லை நிர்மாணிக்கையில் கூடலூர் தமிழகத்தில்தான் இருக்க வேண்டும் என்று போராடியவர்கள் அந்தப் பழங்குடிகள்'' என்றார் உதயகுமார்.

மழை இலேசாய் வானிலிருந்து வெளிநடப்பு செய்திருந்தது. பெரும் இருளை விழுங்கிவிட்டு ஏதும் தெரியாதது போல அடக்கமாயிருக்கும் அகல் விளக்கென இருந்தனர் இந்தச் சந்திப்பில் பங்கேற்றவர்கள். அவர்களின் விஷய தானத்துக்கு நன்றி சொல்லிக் கிளம்புகையில், 'சட்டச் சட சட்டச்சட டட்டா என்று தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்'' என்ற பாரதியின் பாடலை இடியாய் மொழி பெயர்த்துக் கொண்டிருந்தது ஆகாயம்.

தகவல் : **அ.நாகநாதன், கூடலூர்**



எச்சில் ஆகாத ஈசன்!

கோத்தகிரி கிராமம், அரவேணு பக்கத்தில் பனசோலை வனப் பகுதியில் பனகுடி சிவன் கோயில் விசேஷமானது. வனத்துறை அனுமதியோடுதான் இப்பகுதிக்குள் செல்ல முடியும். ஒவ்வொரு வருடமும் ஆனி மாதம் வளர்பிறையில் விழா. கோரைப் புற்களால் கோயில் கூரையைப் புதியதாக வேய்வார்கள். கோயிலுக்குச் செல்லும் முன் தூடை என்ற மரப்பட்டையைத் துண்டுகளாக்கி வழிநெடுகத் தூவியபடி குரும்பர் இனத்தைச் சேர்ந்தவர்கள் செல்வர். கிராமத்தில் முதல் கன்று ஈனும் பசுவின் பாலை மட்டுமே அபிஷேகத்துக்கு எடுத்துச் செல்வர். அப்படி பால் கிடைக்காவிட்டால் அந்த வருடம் விழா கேன்சல்ட்! கோயிலில் தவிட்டுப் பழ மரத்தை உரசி, நெருப்பு வரவழைத்து, மண் அகல் விளக்கேற்றுவர். மண் பானையில் கைக்குத்தல் அரிசியை இட்டுப் பொங்கலிடுவர். இறைவனை தும்பைப் பூவால் அலங்கரிப்பர். அப்போது அர்ச்சகர் படுக மொழியில்..

''அசி அக்கி வாக்கில் எச்சிலு
தும்பை ஹீ தும்பி எச்சிலு
கன்னை கடசு வனாலு கரு எச்சிலு
நா, அரது மாடிதலேயு அரியாதே மாடிதலேயு பார்வதி பரமேஸ்வரா''

முதல் கன்று ஈனும் பசுவின் பாலால்தான் ஈசனுக்கு அபிஷேகம் நடக்கிறது!





என்பார். 'பறவைகள் நெல்லை எச்சில் படுத்துகின்றன. தும்பைப் பூவை வண்டுகளும், பாலைக் கன்றும் எச்சில்படுத்துகின்றன. அதனையே உனக்கு நான் படைத்தேன். என்னை மன்னித்துவிடு பரமேஸ்வரா' என சாஷ்டாங்கமாக விழுந்து வணங்குவர். பூஜையின்போது அர்ச்சகர் வாழை இலையால் வாயை மூடிக் கொள்வார். மூன்று முறை கோயிலைச் சுற்றி வந்து விழாவை நிறைவு செய்வர். குரும்பரும் படுகரும் சேர்ந்து கொண்டாடும் இவ்விழா மிகப் பழைமையானது. இங்கிருக்கும் பஞ்ச பாண்டவர் உருவங்கள் உள்ள கருங்கல் மேடையை, தொல்பொருள் துறை கண்காணிக்கிறது. அர்த்தம் ததும்பும் இந்த இறைவிழா அபூர்வமானது!

வாசகர் யோசனை:
பீ.ராமன், கோத்தகிரி.

பாரி குளிவி நா நிங்கக ஏனா மாட பேகு? - இது படுகு மொழி. பண்ணி கூத்குள்ளி நா நிங்க ஏனு மாட பேகு? - இது கன்னடம். வரு இரிக்கு நிங்கள்க்கு ஞான் எந்து செய்யனும்? - இது மலையாளம். ப்ளீஸ் கம், சிட் டவுன். வாட் கேன் ஐ டு ஃபார் யு? - இது ஆங்கிலம். வாருங்கள், உட்காருங்கள். நான் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும்? - சந்தேகமேயில்லாமல் இது தமிழ்தான்.

ஊட்டியில் உள்ள ஒரு வழக்குரைஞர் அலுவலகத்துக்கு நீங்கள் சென்றால், மேற்கண்ட ஐந்து மொழிகளில் உங்களுக் கானதில் மென்மையான வரவேற்பினைப் பெறலாம். ஊட்டியில் மட்டுமின்றி, பொதுவாக நீலகிரி மாவட்டப் பகுதிகளில் மேற்கண்ட ஐந்து மொழிகளில் பேசுபவர்கள் அதிகம்! தம் இருப்பிடம் நாடி வருபவர்களின் மொழிகளில் பேசி, இன்முகத்துடன் உரையாடுபவர் இளம் வழக்குரைஞர் கே.விஜயன்.

"**எ**ன்னுடைய பிறப்பின் பூர்விகத்தால் மலையாளி. ஆனாலும், தூய தமிழ் பேசும் பேச்சாளி நான். நல்ல தமிழ்ப் படிப்புக்கும் பரப்புரைக்கும் சொந்தக்காரன். என் அலுவலகம் என்றில்லை, மேற்கண்ட ஐந்து மொழி பேசுபவர்களை எங்கு கண்டாலும் அவரவர் தாய்மொழிகளில் பேசுவது என் பாணி. இதனால்தான் அவர்கள் தங்களில் ஒருவனாக என்னை உணர்கிறார்கள்!" என்கிறார் விஜயன். இவர், நீலகிரி மாவட்ட வாசகர்களால் 'மிஸ்டர் மாவட்டம்' ஆக அடையாளம் காட்டப்படுகிறார்.

நம்ம ஆஃபீஸ் பையன் 'அட்ரா சக்கை' ஆறுமுகசாமி பாணியில், இந்த மேட்டரைச் சொல்லிருவோம். அப்பத்தான் எல்லாருக்கும் நல்லா புரியும்.

"வக்கீலுக்குப் படிச்சமா. டெய்லி நாலு கேஸ" பார்த்தமா. பர்ஸ் ரொம்பினிச்சா. வீட்டுக்கு வந்தமானு இல்லீங்க, இந்த வக்கீலு. சமூகப் பிரச்னை சமூக சேவைனு ஊட்டியில இவர் பண்ற நல்ல விஷயங்கள் ஏராளம். அதுக்கு முன்னாடி இவர் ஸ்கூல் லைஃபைச் சொல்லிடுறேன். அதாங்க இந்த மனுஷனோட ஆரம்பம்.

பொறந்த ஊர் மஞ்சூர் கிராமம். அங்க ஹைஸ்கூல்ல எட்டாம் வகுப்புப் படிச்சப்ப, தமிழாசிரியர்களோட சிநேகம் ஆச்சு.



இருளர் இனத்தைச் சார்ந்த ஒருத்தரை வக்கீலுக்குப் படிக்க வெச்சுருக்கார்!



விளைவு, 'புதுப்புயல்' மாதாந்திர கையெழுத்துப் பத்திரிகையை ஆரம்பிச்சு மூணு வருஷம் வெளிவந் திருக்கு. அப்புறம் பி.ஏ., எம்.ஏ.னு பட்டப்படிப்பு. மைசூர் சட்டக்கல்லூரியில சட்டப் படிப்பு. படிச்ச காலங்கள்லயே பொதுப் பிரச்னை அது இதுனு போராடினதுல போலீஸ் ஸ்டேஷனும் கோர்ட்டும் ரொம்பப் பழகிப் போச்சு.

வியக்க வைக்கும் விஜயன்!



அந்தப் பழக்கதோஷத்துல, சட்டம் படிச்சு முடிச்சதியும் எந்த வக்கீல்கிட்டயும் ஜூனி யரா போய்ச் சேராம, இவரே தனியா ஆஃபீஸ் போட்டுட்டார். யார்ட்ட யும் பிராக்டிஸ் எடுத்துக்காமயே, தனியா நின்னு வழக்குப் பேசி வக்கீல் ஆகிட்டார். வக்கீல் ஆனதியும், இவருக்குப் பொதுச் சேவைகள்ல பல களங்கள் உருவானது.

மலைவாசிகள் தாழ்த்தப்பட்ட இருளர் சமூகத்தில், ஒரு மாணவனைத் தேர்ந் தெடுத்து, தன்னோட செலவுல வக்கீலுக் குப் படிக்க வெச்சார் (காண்க: நியூஸ் ஏந்தி பவன்). எந்தச் சமூகமா இருந்தாலும், 'ஏழை மாணவர்களுக்கு கல்வி உதவி'யை கடந்த ஏழெட்டு வருஷமா செஞ்சு வர்றார். நண்பர்களின் துணையோடு நெறைய பேருக்கு, படிப்புக்குப் பண உதவி செஞ் சிருக்கார்.

'மக்கள் சட்ட மையம்'னு இவரோட தலைமையில இயங்குது. நீலகிரி மாவட் டத்தோட அடிப்படை பிரச்னைகளுக்காகப் போராடி தீர்வு காண்பது அதோட நோக்கம். இப்படித்தாங்க, ரொம்ப வருஷமா தீராம இருந்த கல்லார் டு கக்கநல்லா (180 கி.மீ. நீளம்) ரோடு சமாசாரம். குண்டும் குழியுமா இருந்திருக்கு. அதை முழுசா சீரமைக்க மக்கள் சட்ட மையம், ஐவர் குழு அமைச் சுப் போராடியது. நீலகிரி மாவட்டத்துல நூற்று அறுபத்தொன்பது அமைப்புகள், மக்கள் சட்ட மையத்தோட இணைஞ்சு போராட்டம் நடத்திச்சு. அதுக்கு அப்புறம் தான், 2008ல அந்த 180 கி.மீ. நீள சாலைய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் முழு மையா செப்பனிட்டுத் தந்தது.

இப்பச் சொல்லுங்க, இவர் மிஸ்டர் மாவட்டம்தானே?''

வாசகர் யோசனை:
தவமுதல்வன், கோத்தகிரி

"அட தோ பார்றா குன்னூர் தந்திமாரியம்மன் கோயிலாம். தண்டு மாரியம்மன்தான் ஒரு வேளை தந்தி மாரியம்மனா மரு விடுச்சோ?''

''டேய் நல்லா விசாரிச்சுட் டேன். இது நூறு வருட பாரம் பரியக் கோயிலாம். பேருக்குப் பின்னால பெரும் கதையே இருக்கு.''



''ஓ! நானென்னவோ சாமிகூட காலத்துக்கு ஏத்த மாதிரி தன்னை அப்டேட் பண்ணிக்கிடுச்சோன்னு நெனைச்சேன்.''

''நாத்திக நக்கலை கொஞ்சம் நகர்த்தி வைச்சுட்டுச் சொல்றதைக் கேட்டுக்கோ. குன்னூரில் இங்க வனப் பகுதியா இருந்தப்ப வெள் ளைக்காரங்களோட குதிரை லாயத்தில அம்மன் ஒரு சிறுமியா ஊஞ்சலாடி இருக்கிறாள். இது நேரிடையான காட்சி மட்டுமல்ல; பலருடைய கனவுகளிலும்


நீலகிரி மாவட்ட சிறப்பிதழ்

மனுஷனுக்கும்



மலைப்பாதைகளில் ஆங்காங்கே மண்ணும் பாறைகளும் சரிந்திருக்க, எறும்பு வரிசையாய் நகர்கின்றன வாகனங்கள். சில இடங்களில் துருப்பிடிக்காத கம்பிகளைக் கொண்டு ஒரு பெட்டி போலத் தயாரித்து, அதனுள் கருங்கற் களை நிரப்புகிறாங்கள். இப்படிப் பல கருங்கல் பெட்டி கள் செய்து ஒன்றன் மீது ஒன்றாக தடுப்புச் சுவராய் அடுக்கி மண் அரிப்புக்கு அணைபோடும் வேலை துரிதமாய் நடந்தபடியிருக்கிறது. இங்கு பணிபுரியும் ஊழியர்களை மேற்பார்வை செய்துகொண்டிருக்கும் வேளாண்துறை பொறியாளரிடம் இன்னும் கொஞ்சம் விளக்கம் கேட்டோம். மண் அரிப்பு பற்றி அவர் நடத்திய மெகா சிலபஸ் இதோ...

''சாலையை நீட்டிக்க, அகலப்படுத்த சாலைப் போக்குவரத்துத் துறை செங்குத்தாக மண்ணை வெட்டி அதை அங்கேயே ஓரமாய் அல்லது வேறு இடத்தில் கொட்டிவிடுகிறது. (பெரிய பில்டிங் கட்டும்போது வெளியேறும் மண்ணும் சேர்ந்து) மழையில் கரைந்து அணைக் கட்டை, மலைத்தோட்டத்தை மூடி விடுகிறது. அணைக் கட்டின் நீர்த் தேக்கம் குறைந்து விவசாயம்

மாரியம்மனும் மசூதியும்



தோன்றியிருக்கிறாள். அடுத்த நாள் அந்த இடத்தில சுயம்புவா அம்மன் சிலை இருந்ததைப் பார்த்திருக்காங்க. அங்க ஆங்கிலேயருடைய தந்திக் கம்பம் இருந்த தால, இந்த அம்மனை தந்தி மாரியம்மன்னு பெயரிட்டு ஜனங்க கும்பிட ஆரம்பிச்சாங்க. தந்தி போல ஓடி வந்து துரிதமா உதவும் இந்த அம்மனுக்கு, ஏப்ரல் மாதம் முழுசும் விழா நடக்குமாம். ஒவ்வொரு நாளும் ஒரு சாதி ஓர் இனம்னு விழாவைப் பங்கு போட்டு நடத்து வாங்களாம். 23 வருஷத்துக்கு முன்னாடி முதல் கும்பாபி ஷேகம் நடந்ததாம். 2006-லேயும் நடந்திருக்கு. இதெல்லாம் ஸ்ரீ தந்தி மாரியம்மன் சேவா சங்கம் மேற்பார்வையில செயல்படுது.''

''எல்லாம் சரி. ஒரே தெருவில இடப்பக்கம் தந்தி மாரியம்மனும் வலப்பக்கம் பழைமையான மசூதியும் இருக்கிறதைப் பார்த்தியா? ஆனால் இதுவரை இங்கே எந்த மனஸ்தாபமும் வரலயாமே... நல்ல ஜனங்ககூட ஒரு பெரிய வரம்தான் இல்லே.''

வாசகர் யோசனை: முருகன், குன்னூர்

ஒரு தடுப்பு வேணும்!

பாதிக்கப்படுகிறது. மழையின் வேகத்தைப் பொறுத்து எப்போது வேண்டு



மானாலும் காட்டின் சிறுஓடை பெரும் ஓடையாக மாறி மண்ணை இலகுவாக்கி, பாறையை அசைத்து, மண்ணும் பாறையுமாக வேகமெடுத்து ஓடி வரும். அப்போது பாலங்களையே அடித்துக் கொண்டு போய்விடும். 94-ல் ஒரு பேருந்தை ஒரு மலையிலிருந்து இன்னொரு மலைக்குக் கோலிக் குண்டு ஆடுவது போல, உருண்டு வந்த பாறைகள் தூக்கி வீசின. இப்படி இயற்கையாலும் மனிதனின் பொறுப்பற்ற தன்மையாலும் நிகழும் மண் அரிப்பைத் தடுக்க இரண்டு வழிகள் உள்ளன. ஓடைகள் மற்றும் மழைநீரின் வேகத்தைக் குறைக்க மலையில் ஆங்காங்கே சிறிய கால்வாய்களை வெட்டி மட்டுப்படுத்தலாம். மனிதர்களும் போக்குவரத்துத் துறையும் கொஞ்சம் பொறுப்போடு நடந்து கொள்ளலாம்'' என்றார் அந்த அதிகாரி. நீங்கள் படத்தில் பார்ப்பது கடல் மட்டத்திலிருந்து 600 அடி உயரத்தில் போடப்பட்ட மண் அரிப்பு தடுப்புச் சுவர். மனுஷனின் பொறுப்பின்மைக்கும் ஒரு தடுப்பு இருந்தாதான் நல்லாருக்கும் போல!

வாசகர் யோசனை: முருகசாமி, குன்னூர்



முதுமலைக் காட்டில் ஜாலி உலா!

உச்சிப்பொழுது (வெயில்னு சொல்லப் படாது. ஏன்னா... வெயில் தான் லாங் லீவு எடுத்துப் போய்டுச்சே. முதுமலை யில ஏது ஸார் வெயில்? சும்மா மண்டை காய வைக்காதீங்கனு நீங்க கத்தறது கேக்குது.) கொஞ்சம் சரிந்து வரும் நேரம். முது மலையின் தெப்பக்காட் டில் போய் நின்றோம். உயரம் உயரமான மரங் கள்; செடிகள்; புதர்கள்; பச்சைப் பசேல்னு புல் வெளிகள்.

அட.... 'நாக்க முக்க நாக்க முக்க'னு நம்மைப் பார்த்து டூரிஸ்ட் கும்பல் ஒன்று கோரஸாகக் கும்மி யடிக்க, 'அட.... சேக்க முக்க சேக்க முக்க'னு பதிலுக்கு நாமும் பாட்டுப் பாடியவாறு அந்தக் கும்பலை நெருங்கினோம். ''உங்க ரெண்டு பேரைச் சேர்த்தாதான் எங்க வேன் கிளம்பும். நல்லவேளை வந்து சேர்ந்தீங்க. அது எப்படி சேக்க முக்க சேக்க முக்கனு பொருத்தமா பாட்டுப் பாடிட்டே வந் தீங்க''னு கொக்கிப் போட்டது ஒரு பச்சை சட்டை.

இப்ப அதுவா முக்கியம்னு வேனுக்குள் ஏறினோம். ஒரு வேனுக்கு இருபது பேர்; ஓர் ஆளுக்கு முப்பத்தைந்து ரூபாய் வேன் சபாரி(பயணம்)க்கு. நமக்கு முன்னால் யானை மேல் உட்கார்ந்து நால்வர். மொத்த மாக நானூற்று முப்பது ரூபாய் கட்டணம் அவங்களுக்கு. விலங்குகளைப் பார்க்கப் போகும் போது, இன்னொரு விலங்கு மேல் உட்கார்ந்து ஏன் போகணும்னு அகிம்சா புத்தி மனசுக்குள் மணியடிக்க, இப்போது நாம் வேனுக்குள் பத்திரமாக(?) முதுமலைக் காட்டுக்குள் போய்க்கொண்டு இருக்கிறோம்.

நாம போறது சர்க்கிள் ரோடு. விலங்கு களை வேடிக்கை பார்க்கறதுக்குனு அரசு அமைச்சிருக்கற பாதுகாப்புச் சாலை. ஒரு பத்து நிமிஷம்தான் போயிருக்கும். சைடுல பார்த்தா சலசலன்னு சல்வார் கம்மீஸ் போட்ட பொண்ணு மாதிரி ஓர் ஆறு. அதுபாட்டுக்கு ஓடிட்டே இருக்கு. அது நடுவுல பத்துப் பதினைஞ்சு மலைக்குன்று கள் மாதிரி கருப்பா தெரிஞ்சது. அதுக அப் பிடியே நிமிர்ந்ததும், மலைச்சுப் போய்ட் டோம். அத்தனையும் பிரமாண்ட யானைங்க. 'நீராடலுக்காக ஆத்துக்கு வந் துருக்கு! தண்ணிக்குள்ளார யாரு ரொம்ப நேரம் தம் கட்றோம்னு போட்டி வெச்சிருக் கும். ஒன் டு த்ரீ எண்ண ஆளு இல்லேங் கவும் எந்திரிச்சு நிக்குதுங்க' என கமென்ட் அடித்தது வெள்ளை சட்டை. (ஆளுங்க பேரு தெரியலை. அதான் சட்டை நிறம்).





"என்ன அங்கிள் சிங்கத்தையே காணோம்..!"

அந்த வேனில் இருபது பேருக்குத் துணையாக வந்தவர், அட்வென்ச்சர் சேகர். விரல் நுனியில் அவ்வளவு விஷயம் வெச்சிருக்கார்:

''யானைகள் அதிகமா உலவுற காடுகள்ல தென்னிந்தியாவுல இதுக்கு இரண்டாவது இடம். (முதல் இடம் தேக்கடி). முதுமலை வனத்துல மட்டும் சுமார் இரண்டாயிரத்து ஐந்நூறு யானைகள் சுதந்திரமா சுத்திக்கிட்டு இருக்குது'' என்றார்.

புள்ளி மான்கள் இரண்டு துள்ளி ஓட, இளசு ஒண்ணு சீட்டி அடித்தது. அட்வென்ச்சர் சத்தம் போட்டார். ''விலங்குகள் பார்க்க வர்றப்ப அமைதி தேவை. நீங்க சவுண்டு விட்டா, இந்த மனுஷப் பயலுக நமக்கு ஏதோ தொந்தரவு தர வர்றானுகன்னு ஜூட் வுட்டு மறைஞ்சு போய்டும்''னு எச்சரிச்சார். அதுக்கப்புறம் எல்லாரும் கப்சிப்.

''மான்கள்ல அஞ்சு வகை இங்கே இருக்குங்க. புள்ளி மான், மலை மான், எலி மான் (பூனை சைஸுக்கு இருக்குமாம்), பார்க்கிங் டீர், பிளாக் பக் (இந்த மானைத்தாங்க நம்ம பாலிவுட் சல்மான்கான் அடிச்சுப் போட்டு படாத பாடுபட்டது) இப்பிடினு அஞ்சு வகை'' என்று சொல்லிக்கொண்டே வர...

ரொம்ப தூரத்தில் புலி ஒன்று பாய்ந்து சென்றது - அல்லது பாய்ந்து சென்றதாக எங்கள் கண்கள் நம்பின! ''புலிகள்ல முப்பத்திரண்டு இருக்கறதா ஒரு கணக்குச் சொல்லுது. சிறுத்தைகள்ல முப்பத்தைஞ்சு. கருஞ்சிறுத்தைகள் மூணுலேர்ந்து அஞ்சுக்குள்ளார இருக்கும்னு நம்பப்படுது. கருஞ்சிறுத்தை கண்ல தென்படுறது ரொம்ப

அபூர்வம்'' என்றவாறு வந்த நம்ம அட்வென்ச்சர் சேகர் ஒரு தடவை கருஞ் சிறுத்தையைப் பார்த்திருக்காராம்.

லங்கூர் எனப்படும் அரிய வகை குரங்குகள் முதுமலைக் காட்டுல குதியாட்டம் போடுது. மயில்கள் தோகை விரிச்சு ஆடுது. எல்லாம் தூரமாகத்தான் பார்க்க முடியும். பக்கத்தில் போய் எதையும் தொட்டுப் பார்த்துவிட்டு வந்துவிட முடியாது. 'எந்தப் புத்துல எந்தப் பாம்பு இருக்கும்? எந்தப் புதர்ல எந்தப் புலி இருக்கும்னு யாருக்குத் தெரியும்?' அதனால் வேனுக்குள் கையையும் காலையும் கட்டிப் போட்டுட்டு, கண்ணால் மட்டும் வெகு தூரத்தில் பார்வையை அலையவிட்டு நம்ம விலங்கு உடன்பிறப்புகளைப் பார்த்துவிட்டு வருவது நமக்கு நல்லது!



முதுமலை வனவிலங்குகள் சரணாலயம் இப்போ முதுமலை புலிகள் காப்பகம்!

''என்ன அங்கிள், சிங்கத்தையே காணோமே?'' குட்டீஸ் ஒன்றின் குரல் கேட்டது. ''சிங்கத்தைத் தவிர எல்லா வகை விலங்கு இனங்களும் சுத்தி வர்ற காடுதான் முதுமலை''னு பதில் சொன்னார் சேகர்.

ஒரு பக்கம் அருவிகள். மறுபக்கம் அடுத்தடுத்து குன்றுகள். இமயமலைக்கு முந்தையதாக இந்தக் குன்றுகள் தோன்றியிருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடுகிறார்கள். கர்நாடகா மற்றும் கேரள மாநில எல்லைப் பகுதியில் தமிழ்நாட்டில் அமைந்திருக்கிறது முதுமலை. குன்னூரிலிருந்து தலைகுந்தா, கல்லட்டி, மசினகுடி வழியாகவும், குன்னூரிலிருந்தே நடுவட்டம், கூடலூர் வழியாகவும் வரலாம். இது கொஞ்சம் சுற்று வழி என்பதால் நாம் கல்லட்டி வழியாகவே முதுமலை போயிருந்தோம்.

முதுமலை வனவிலங்குகள் சரணாலயம், இப்போது முதுமலை புலிகள் காப்பகம் என்கிற பெயரில் இயங்குகிறது. புலிகள் இனப்பெருக்கம் காணவும், அமைதியாக வாழவும் ஏற்ற இடமாக இது அமைந்திருப்பதுதான் காரணம். பழங்குடி காட்டுவாழ் மக்களைக் காப்பாளர்களாகவும், தமிழக வனத்துறை அலுவலர்களையும் கொண்டு இயங்குகிறது முதுமலை புலிகள் காப்பகம்.

யானை சபாரிக்கும், வேன் சபாரிக்கும் தினசரி இரண்டு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளன. அந்த நேரம்தான் விலங்குகள் மற்றும் பறவைகள் பார்க்க உகந்த நேரமாம். காலை ஏழு மணியிலிருந்து ஒன்பது வரை. மாலை நான்கு மணியிலிருந்து ஆறு வரை. நாம் போனது உச்சிப் பொழுது கீழிறங்கி வந்த சாயந்திர நேரம். சர்க்கிள் ரோட்டில் இருபத்தைந்து கி.மீ. தூரம் போய் சுற்றிக்காண்பித்து விட்டுப் புறப்பட்ட இடத்துக்கே திரும்ப வந்து நின்றது வேன்.

'முதுமலைக் காட்டோட மொத்த உள் பரப்பு முன்னூற்று இருபத்தொரு சதுர கி.மீ. அதுல தம்மாத்தூண்டு தூரத்தை மட்டும் சுத்திப் பார்த்திட்டு வந்திருக்கமே அந்த மொத்தப் பரப்பையும் சுத்திப் பார்க்கறது எப்போ?'னு ஏக்கம் வந்தது. ●





* ஷாஜஹான்

அற்புத மனிதர்!

அந்த ஷாஜஹான் ஆக்ராவுல தாஜ்மகால் கட்டினார். இந்த ஷாஜஹான் ஊட்டி மலையில கை கட்டி நிக்கறார். இவரோட நோக்கம் சமூக சேவை. ஊட்டி மலைப் பகுதிகள்ல வாகனங்கள் வேகமா வருது. இவரோட மனசு படபடனு அடிச்சுக்குது; என்ன ஆகுமோ ஏது ஆகுமோன்னு.

ஊட்டியிலேருந்து கல்லட்டி வழியாக முதுமலை போகிற மலைச் சாலையில், கல்லட்டி வனத்துறை செக்போஸ்ட்ல இவரை நீங்க அவசியம் பார்க்கலாம். மொத்தம் முப்பத்தாறு செங்குத்தான கொண்டை ஊசி வளைவுகள். அத்தனையும் அபாயகரமானவை. மலைப் பகுதியில் ஓட்டிப் பழகிய ஓட்டுனர்களால் மட்டுமே ஓரளவு பாதுகாப்பாக வாகனம் ஓட்ட முடியும்.

கல்லட்டி வனத்துறை செக்போஸ்ட் அமைந்திருப்பது பதினாறாவது கொண்டை ஊசி வளைவில். அங்கிருந்துதான் அதிபயங்கர வளைவுகள் துவங்குகின்றன. அந்த வளைவுகளில் எச்சரிக்கை இல்லாது வாகனம் ஓட்டினால், அதன் விளைவுகள் பெரும் விபத்துகளாக முற்றுப் பெறும்.

அவ்வழியாக வரும் வாகனங்களை நிறுத்தி, வாகன ஓட்டிகளிடம் மெதுவாகச் செல்லுங்கள் என்று எச்சரிக்கை செய்கிறார். அந்த வாகனத்தின் ரேடியேட்டரில் போதுமான அளவு தண்ணீர் ஊற்றுகிறார். வாகனச் சக்கரங்களில் காற்று உள்ளதா, பிரேக் சரியாக வேலை செய்கிறதா, பிரேக் ஆயில் உள்ளதா எனப் பார்த்து திருப்தி அளித்த பிறகே அந்த வாகனத்தை அனுப்பி வைக்கிறார்.

இதற்கென குறிப்பிட்ட கட்டணம் எதுவும் வாங்குவதில்லை. வாகன ஓட்டிகள் மனமுவந்து தருகின்ற தொகையினை மட்டுமே பெற்றுக் கொள்கிறார். இந்த எச்சரிக்கை மனிதரால் வாகன விபத்துகள் சற்று குறைந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

வாசகர் யோசனை: **டி.ரத்தினசாமி**



ஃபர்ஸ்ட் அட்வகேட்!

அருமாக்க இருக்கிறியா (நல்லா இருக்கிறீங்களா?)ன்னு இருளமொழியில் கேட்டதும் பிரகாசமாய்ச் சிரித்துக் கை குலுக்குகிறார் சசிகுமார். இவர்தான் பழங்குடி இனமான இருளர்களின் முதல் வழக்கறிஞராம். பெரும்பாலான பிரச்னை களை பஞ்சாயத்திலேயே தீர்த்துக் கொள்வார்களாம். சிக்கலா னது மட்டுமே கோர்ட்டுக்கு வருமாம். ''இருளர் வழிபாட்டு விஷயத்தில் உரிமை கோரி பிரச்னை செய்யும் படுகர்கள்தான் இப்போது எங்களின் தலைவலி'' என்கிறார் இந்த ஃபர்ஸ்ட் அட்வகேட்!



சிம்ஸ் பூங்கா!

குன்னூர்ல அமைஞ்சிருக்கு. பிரிட்டிஷ் கவர்னர் ஜெனரல் கவுன்சில் மெம்பரா இருந்த ஜே.டி.சிம்ஸ் என்பவர் பொழுதுபோக்குக்காக உருவாக்கியது இந்தப் பூங்கா. முப்பது ஏக்கர் பரப்பளவுல பசுமையா இருக்கு. ஏதாவது ஓரிடத்துல நீங்க போய் உட்கார்ந்தாலும் பொழுது போயிடும். சுத்திப் பார்த்தா அரை நாள் பொழுது சரியாய்டும். அத்தினி அம்சங்கள் பூங்காவுல. குட்டிக் கால்வாய் ஒண்ணு இருக்கு. அதுல படகு சவாரி போகலாம். சிறுவர்களின் குதூகலம். காதலர்களின் நிகழ்கால சொர்க்கம். பெரியவர்களுக்கு மலரும் நினைவு. சிம்ஸ் பூங்காவில் அத்தனையும் அடக்கம். 85 தாவரக் குடும்பங்களின் 255 வகைப்பாடுகள் கொண்ட ஆயிரத்துக்கும் மேற்பட்ட மரங்கள் சிம்ஸ் பூங்காவுல வளர்ந்தோங்கி நிற்கின்றன.

தகவல்: எடக்காடு பீ.சேகர்

குன்னூர்





❖ தோடர் வீடு



❖ தோடா் கோயில்

தோடா மந்து!

தோடர்களின் வீடும் கோயிலும் ஒரே மாதிரியாகத்தான் உள்ளன. முன்புறமும் பின்புறமும் மட்டுமே கருங்கல் சுவர். பிரம்பு அல்லது மூங்கிலால் ஆங்கில எழுத்து பவைக் கவிழ்த்துப் போட்டது போல கூரை வேய்ந்து புற்களால் மூடப்பட்டுள்ளது. கோயிலுக்குள் நுழைந்து செல்ல ஒரு சின்ன பொந்து போன்ற வழி மட்டுமே உண்டு. உள்ளே இருக்கும் சாமி எப்படியிருக்கும்? பிரகாசமாய் இருட்டை எல்லாம் விழுங்கி விடுமாம். அட ஆமாம்பா... விளக்குதான் சாமி. இந்தக் கோயிலுக்கு தோடாமந்துன்னு பேரு.

சிம்ஸ்

லிங்கத்துக்குள் சிவலிங்கம்

ஊட்டியை நோக்கிப் போகும் வழியில் 'வேலி வ்யூ' (Valley view) பக்கம் பதினெட்டு சித்தர் கோயில் உள்ளது. பெரிய சிவலிங்கம் வடிவில் கோயில். அதனுள் ஒரு சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. பெரிய சிவலிங்கக் கோயிலைச் சுற்றி பதினெட்டு சித்தர்கள் சிலைகளாக வட்டமாக உட்கார்ந்து உள்ளனர். சுவாரஸ்யமான வடிவமைப்பிலுள்ளது இந்த சிவன் கோயில்.

தகவல்:
கேஎஸ்ராமகிருஷ்ணன்,
ஓரநள்ளி





வனத் தீ!

"புகைமண்டலத்துக்கு மேலே வானில் வட்டமடித்து, குஞ்சுப் பறவைகளைக் காப்பாற்ற முடியவில்லையே என்கிற ஆற்றாமையில் தாய்ப் பறவைகள் கத்தும் காட்சி பெருஞ்சோகம். காண்போர் இதயங்களைக் கரையச் செய்துவிடும். இதுபோன்ற காட்சிகளை வனங்களில் அவ்வப்போது வரைந்து வைப்பது வனத்தீ" என்கிறார் லதானந்த் என்கிற புனைபெயரில் சிறுகதைகள், கட்டுரைகள் எழுதி வரும் டி.ரத்தினசாமி. இவர் வடக்கு கோட்ட உதவி வனப் பாதுகாவலராகப் பணியாற்றுபவர். வனங்களில் ஏற்படும் வனத் தீ குறித்து, அனுபவரீதியாக அலசுகிறார்.

"வனங்கள் குறைந்து வர, நான்கு வகையான சம்பவங்கள் காரணமாகின்றன. திருட்டு வெட்டு (வனத்துறைக்கு அறியப்படாமல், மரங்கள் வெட்டப்படுவது), ஆக்கிரமிப்பு (வனங்களில் சட்டத்துக்குப் புறம்பாக வீடு மற்றும் தோட்டம் அமைப்பது), மேய்ச்சல் (கால்நடைகளின் எல்லை கடந்த மேய்ச்சல்), நான்காவதுதான் வனத் தீ. வனப் பகுதிகளை அழிப்பதில், இதுதான் மிகவும் கொடூரமானது.

● டி.ரத்தினசாமி



பி.டி.ரத்தினசாமி

வனத் தீ எந்தெந்த வடிவங்களில் ஏற்படுகிறது? பட்டியலிட்டால் ஆச்சர்யமாகவும் அதிர்ச்சியாகவும் இருக்கும்.

★ வாகன ஓட்டிகள் தாங்கள் புகைத்துக் கொண்டிருந்த பீடி, சிகரெட் துண்டுகளை அணைக்காமல் அப்படியே வனத்தின் உள்ளே வீசியெறிதல்.

★ காடுகளில் திறந்த வெளிகளில் அடுப்பு மூட்டி சமையல் செய்பவர்கள், பெருந்தன்மையுடன் அந்த அடுப்பு நெருப்பினை முழுமையாக அணைக்காமல் சென்றுவிடுவது.



★ காடுகளின் பல்வேறுபட்ட பணியாளர்கள், டீ தயாரித்துக் கொள்வார்கள். அதற்கென நெருப்பினை அரையும் குறையுமாக அணைத்து



"அடர்ந்த வனப் பகுதிகளில் கள்ளச்சாராயம் காய்ச்சும் சமூக விரோதிகளாலும் வனத்தில் தீ பற்றுகிறது!"

வைப்பது.

★ உதகை ரயில் என்ஜினிலிருந்து அசந்தர்ப்பமாக வரும் நெருப்புப் பொறிகள்.

★ காடுகளில் சுற்றித் திரியும் தேன் சேகரிப்பாளர்கள் கொளுத்தும் தீ.

★ ஆதிவாசிகள் பிணங்களை எரிக்கையில் காற்றில் பறக்கும் தீயின் கங்குகள்.

★ அடர் வனப்பகுதிகளில் கள்ளச்சாராயம் காய்ச்சும் சமூக விரோதிகளால் ஏற்படும் தீ.

★ சுற்றுலாப் பயணிகளும், வனப்பகுதி மக்களும் குளிர்காய வேண்டி நெருப்பு மூட்டி தங்களின் குளிர் விரட்டுகையில், அருகாமை வனப்பகுதிகளில் நெருப்பு பற்றிக்கொள்ளும் வாய்ப்பு.

★ சாலைப் பணியாளர்கள் தார் காய்ச்சும்போது, காற்றில் பறந்து செல்லும் தீப்பொறிகள்.

★ மூங்கில்கள் ஒன்றுடன் ஒன்று உரசும் போது ஏற்படும் தீப்பொறி.

★ சில சமூக விரோதிகள் மீது வனத்துறையினர் நடவடிக்கை எடுத்திருப்பார்கள். வனத்துறை அதிகாரிகளையும் அலுவலர்களையும் பழிவாங்குகிறோம் என்கிற எண்ணத்தில் அவர்கள் வனப் பகுதிகளில் தீ வைப்பது.

இத்தனை வகைகள்ல வனத் தீ நம்மை அச்சுறுத்துகிறது. வனத் தீ பாதிப்புகள்ல ரெண்டு வகை. ஒண்ணு ஈடு செய்ய முடியறது. இன்னொண்ணு ஈடு செய்யவே முடியாதது. அரிய வகை மூலிகைகள், பெரிய மரங்கள் அழிந்து போவது. இதனை சட்டுனு உருவாக்கிட முடியாது.

வன விலங்குகளின் வாழ்விடங்கள் பாதிக்கப்பட்டு மண் வளம் குன்றிப் போதல். மண் வளம் காத்து வரும் நுண்ணுயிரிகள் மடிந்து விடுவது. மண்ணுக்குக் கிடைத்து வந்த சருகுகளால் உருவான இலைச்சத்து அழிந்து போதல், மழை நீர் உட்புகாதவாறு தரை கெட்டிப்பட்டுப் போதல்.

தீ தடுப்புக் காவலர்கள் மூலம் தீ தடுப்புக் கோடுகள் வெட்டியமைத்து வனத் தீ தடுக்கப்படுகிறது. வனத் தீ குறித்து அறிந்து கொள்ள பார்வைக் கோபுரங்களும், உடனடி தகவல் பரிமாற்ற வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளன. அருகில் வசிக்கும் பொதுமக்களின் உதவிகளும் ஒத்துழைப்பும் பயன்படுத்தப்படுகின்றன. பொதுவாக வனவளம் காக்கப்பட, வனத்தீ நிகழாதிருக்க வேண்டுமென நாம் அனைவரும் பிரார்த்தித்துக் கொள்வோம்!'' என்கிறார் டி.ரத்தினசாமி.

வாசகர் யோசனை:
அகரம். சிவா, கோத்தகிரி

''மூன்று லட்சம் சிறு விவசாய குடும்பங்க பதினைந்து வருஷமா போராடிக்கிட்டு, பத்திரிக்கையில செய்தியா வருஷாவருஷம் வர்ற ஒரு தலைபோற பிரச்னை. கவர்மெண்டால தீர்க்க முடியாம தலைகுனிவை உண்டாக்கியிருக்கிற பிரச்னை இருக்காம். அது... சிறு தேயிலை விவசாயிகளோட விலை நிர்ணயப் பிரச்னைதான்''

''சுத்திவளைச்சுப் பேசாம நேரா விஷயத்துக்கு வாப்பா... முதல்ல சிறு விவசாயின்னா யாரு?''

''0.25 செண்ட்டிலேயிருந்து 10 ஏக்கர் வரை தேயிலைத் தோட்டம் வெச்சிருக்கிறவங்கதான் சிறு விவசாயிங்க.''

''பேஸிக்கா யாரால என்ன பிரச்னை?''

''சின்ன தேயிலை விவசாயிகளோட தோட்டத்திலேயிருந்து பறிச்சு டீ ஃபேக்டரிக்கு அனுப்பி வைக்கிற பச்சை தேயிலைக்கு, (பசுந்தேயிலை) இதான் இப்ப விலைன்னு யாரு முடிவு பண்றது... அதான் இப்ப பிரச்னை.''

''இதுல பிரச்னை எங்க? விவசாயி இலையை விக்கிறான். ஃபேக்டரி முதலாளி வாங்குறான், ரெண்டு பேரும் பேசி, கட்டுப்படியாகற விலையை முடிவு செய்ய வேண்டியதுதானே?''

''அதான் இல்ல. இங்க முதலாளிக்கும் விவசாயிக்கும் நடுவுல புரோக்கர்னு சொல்ற கமிஷனுக்கு வேலை செய்றவங்கதான் தேயிலை வாங்க வருவாங்க. தேயிலைத் தொழிற்சாலை அதிபர்களோட இவங்களுக்கு நல்ல உடன்பாடு உண்டு. முதலாளிக்கு பணத் தட்டுப்பாடுன்னா, இந்த புரோக்கருங்கதான் வரம் அளிக்கும் சாமிங்க. அதனால இவங்க வெச்சதுதான் சட்டம். இந்த முறையை மாத்தச் சொல்லித்தான் இவ்வளவு போராட்டம்.''





''இது என்ன சின்னப்புள்ளத்தனமாயிருக்கே! ஒரு சின்னக் கையெழுத்தைப் போட்டு ராவோடராவா கவர்மெண்ட் இதை முடிவுக்குக் கொண்டு வர முடியாதா..?''

''முடியும்... ஆனா முடியாது... ஏன்னா அவங்க (புரோக்கர்கள்) மேல கைய வெச்சா ஆட்சியே கலைஞ்சாலும் ஆச்சரியப்படுறதுக்கு இல்ல. எல்லோரும் பெரும் புள்ளிங்க. கொள்ளை லாபத்தில் கொழிக்கிறவங்க, எந்த மாற்றத்தையும் ஏத்துக்க மாட்டாங்க.''

''என்னென்ன மாற்றங்களைக் கொண்டுவர முடியும்னு ஏதாவது ஒரு திட்ட வரைவு இருக்கா?''

''ஆமாம்! வெங்காய திட்டம். நம்ம கல்கி நீலகிரி வாசகர் காளிதாசனைக் கேட்டால் அடுக்குவாரு அற்புதமா.''

''என்ன சொல்றாரு? பேசிப் பாத்தியா?''

''ம்ம்... தனியார் ஏல மையங்களை முதல்ல இழுத்து மூடலாம். விதிமுறைகளைச் சீரமைக்கலாம். 2 கோடி செலவுல அரசு கட்டியிருக்கிற ஏல மையத்தைச் செயல்படுத்தலாம். கட்டாயமா 90 சதவிகிதம் தேயிலையை ஏல மையத்துக்குக் கொண்டு



தேயும் தேயிலைத் தொழில்!

வரணும்னு ஆணை போடலாம். SD/SFD/SRD/BOP - ன்னு தேயிலைத் தரத்தை (grade) சீலிங் ரேட் வெச்சு ஏலம் விடலாம். தனியார் தேயிலை வணிகர்கள் அரசு ஏல முறைக்கு வரமாட்டோம்னு அடம் பிடிச்சா, மொத்தத் தேயிலையையும் அரசே கொள்முதல் செய்யலாம். சீலிங் ரேட்டை வருஷா வருஷம் மாத்தலாம். கொள்முதல் செய்றதை 'சிவில் சப்ளை கார்ப்பரேஷன்' மூலமா விநியோகிக்கலாம். ஒரு குடும்பத்துக்கு 200 கிராம் வீதம்னு விநியோகிச்சாலே தேயிலை எல்லாம் காலியாகிடும். இல்லேன்னா தேயிலை விற்பனை மையம் ஆரம்பிச்சு இளைஞர்களுக்கு வேலை கொடுக்கலாம். மீதி இருந்தா Defence Serviceக்குக் கொடுக்கலாம். மட்டமான தேயிலையை இறக்குமதி செய்யறதைத் தடை செய்யலாம்னு அந்த மனுஷன் ஐடியாவை அடுக்குறாரு.''

தனியார் தேயிலை ஏல மையத்தை முதல்ல இழுத்து மூடணும். 2 கோடி செலவுல அரசு கட்டியிருக்கிற ஏல மையத்தைச் செயல்படுத்தணும்!

''இதுல கொஞ்சங்கூட அரசாங்கம் செய்ய முன் வரலையா?''

''மாஸ்டர் மாதன் ரூ.15க்கு விலை நிர்ணயம் செய்றேன்னு வாக்குக் கொடுத்து எம்.பி. ஆனாரு.




அப்புறம் அதெல்லாம் நீங்க நெனைக்கிற மாதிரி கலபமில்லேன்னு சொல்லிட்டார். அதையே குண்டன் எம்.எல்.ஏ. அப்படியே ஃபாலோ பண்ணினார். அடுத்து ஆர்.பிரபுவுக்கு ரொம்பவே ஞாபக மறதி. பிடிவாதமா பல விஷயங்களைச் சாதிக்கிற ஜெ. அம்மாகூட தன்னோட ஆட்சியில இந்த விஷயத்தில் ஒண்ணும் செய்யமுடியல. இப்போ அமைச்சர் ராஜா... இது நீளும்னு தோணுது.''

''மத்த ஆளுங்களைப் பார்த்துப் பேசினா என்ன சொல்றாங்க?''

''மாதவன்னு ஒரு ஏக்கர் நிலமுள்ள விவசாயி 'எல்லாம் சரிதான் ஸார் மத்தபடி நான் எதுவும் பேச முடியாது. நான் விமர்சித்தா ஊர்ல வாழ முடியாது'ன்னு நடுங்குறார். தினக் கூலி வேலை செய்யும் தேயிலை பறிக்கிற பழனியம்மாவைக் கேட்டேன். 'பத்து மணியிலேர்ந்து அஞ்சுமணி வரை வேலை ஸார். முதல்ல ரெண்டு இலை ஒரு மொக்குன்னு பறிச்சோம். இப்போ அப்படி இல்ல. கத்திரிகோல்ல வெட்டுறோம். காலையில வண்டியில 20 பேரைக் கூட்டிட்டு வருவாங்க. இலை பறிச்சு மூட்டை கட்டி முடிச்சதும் 90லிருந்து 120 வரை ஆளுக்கு ஏத்தபடி கூலி கொடுத்து பழைய இடத்துல விட்டுடுவாங்க. மத்த விவரமெல்லாம் தெரியாது. மழை பெய்ஞ்சுகிட்டே இருந்தாலும் வேலை பார்ப்போம். கூலி ஏறணும். என்ன பண்ணலாம்?'னு கேட்டவர், 'ஸார் புரோக்கர் வர்றாரு. வெளி மனுஷங்ககிட்ட பேசினா வேலை போயிடும். அப்பிடிப் போயிடுங்க'ன்னு சொன்னதும், கூட இருந்தவங்களையும் காணோம்! தோட்டத்தில் மறைஞ்சிட்டாங்க. சொக்கா இதற்கெல்லாம் கொஞ்சம் அருள் புரியேன்னு அமைச்சர் ராஜாவுக்கு ஃபோன் போட்டா தொடர்பு எல்லைக்கு வெளியில் உள்ளார்னு பழக்கப்பட்ட ஒலிப்பதிவுக் குரல் கேட்குது!''

தேயிலை புரோக்கர்கள் வெச்சதுதான் சட்டம். முதலாளிங்களுக்கு பணத் தட்டுப்பாடு ஏற்பட்டுச்சுன்னா புரோக்கர்கள்தான் அவங்களுக்கு வரம் தரும் சாமி!



வாசகர் யோசனை:

கே.எஸ். ராமகிருஷ்ணன், ஓரநள்ளி

காணாமல் போகும்

ஒரு பொருள் காணாமல் போகலாம். சரியான துப்பறிவாளன் இருந்தால் கண்டு பிடித்தும் விடலாம். ஆனால் ஓர் இனம் காணாமல் போனால்? ஆம்! மெல்ல மெல்ல ஓர் இனம் எண்ணிக்கையில் குறைவது மட்டுமின்றி தன் கலாசார அடையாளங்களையும் இழந்து அரிய பொருட்களின் பட்டியலில் சேர்வது போல ஆகியிருக்கிறது.

கிருஷ்ண தேவராயரின் வீழ்ச்சிக்குப் பின் கர்நாடகத்திலிருந்து நீலகிரிக்கு இடம்பெயர்ந்து, இந்த மண்ணை ஆண்ட செட்டி என்கிற இனம்தான் மௌண்டாடன் செட்டி என்று மருவிப் போனதாகச் சொல்லப்படுகிறது. சிவவழிபாடு. பேசும் மொழிக்கு எழுத்து வடிவம் இல்லை. 70 சதவிகிதம் கன்னடம், 25 சதவிகிதம் மலையாளம், 5 சதவிகிதம் தமிழோடு உருவான கலவையான மொழி இவர்களுடையது.


ஐந்து வருடங்களுக்கு முன் 8000 பேராக இருந்த மௌண்டாடன் செட்டியின் எண்ணிக்கை இப்போது வெறும் 5000தான். என்ன காரணம்? எம்.பாலகிருஷ்ணன் (அவ்வினத்தின் தலைவர்) மற்றும் சி.ஆர். கிருஷ்ணனைக் கேட்ட போது பெரும் பட்டியலை அடுக்கினார்கள்.

''ஆம்பிளைங்க முப்பது வயசுக்குள்ளேயே செத்துப் போய்க்கிட்டே இருந்தாங்க. பல வருஷமா காரணம் தெரியலை.

"ஆம்பிளைங்க முப்பது வயசுக்குள்ளேயே செத்துப்போய்க்கிட்டே இருந்தாங்க பல வருஷமா..."


எம்.பாலகிருஷ்ணன்

அப்புறம்தான் தெரிஞ்சது. அறுவாள் வியாதிங்கிற சிக்கில்செல் எனிமியா வியாதிதான் எங்க ஜனங்களை சிக்கிப் பிடிச்சிடுச்சு. இது மலைப்பிரதேசப் பழங்குடியை மட்டும் தாக்கும். ஒரே இனத்துக்குள்ளே மாறி மாறி கல்யாணம் பண்ணிக்கிட்டதால வர்றது. அதோட, விதவைங்க அதிகமாகி தனிமையில கஷ்டப்பட்டு தற்கொலையும் பண்ணிக்கிறாங்க. அப்பவெல்லாம் நாங்க 'இன்று முதல் பணம் உங்களுக்கு; பெண் எங்களுக்கு'ன்னு பத்தேகால் ரூபாய் கொடுத்து கல்யாணத்தை முடிப்போம். இப்போ இந்த நகரத்து ஜனங்களின் ஒரு கெட்ட புத்தி எங்க மலை மக்களுக்கு ஒட்டிக்கிட்டு, இங்கேயும் வரதட்சணைப் பிரச்னை வந்துடுச்சு. கூடவே இந்த அரசாங்கம் கொண்டு வந்த சாராயக் கடை. சரியான படிப்பு இல்ல. அதனால எல்லாப் பிரச்

சி.ஆர். கிருஷ்ணன்


இனம்!

னைக்கும் பில்லி, சூன்யம், மாயமந்திரம் மூலம் தீர்வு கெடைக்கும்னு தன்னோட கொஞ்ச வருவாயையும் அதுல கொட்டிடும் அறியா ஜனங்க. தங்களோட மலையோர நிலங்களை வேற வழிமுறை தெரியாம முதலாளிங்ககிட்ட கொடுத்துட்டு நிற்கிற கூட்டம். ஆதி உடை, பழக்க வழக்கம், நடனம் எல்லாத்தையும் இழந்துட்டு, கூலி வேலை செய்யும் அடிமைங்களா ஆகிட்டாங்க. வறுமை, குடி, மந்திரம், கல்வியின்மை, தற்கொலை, பெரும் வியாதி, தனிமை இப்படி ஒட்டு மொத்தமா ஒரு இனத்தைத் தாக்கினா என்ன சாமி ஆகும்? காணாமத்தான் போகும்'' என்றார் சி.ஆர். கிருஷ்ணன்.

''ஸார் வனவிலங்குகளைக் காப்பாத்தி பெருக்கி விட்டுட்டு, எங்ககிட்ட இருந்து துப்பாக்கியையும் பிடுங்கிட்டு, நீங்க காட்டிலேயேதான் இருக்கணும்னு கட்டுப்படுத்தினா எப்படி? சொல்லுங்க! எந்த வசதியும் எங்க காட்டு கிராமங்களில் இல்ல. எங்களால அங்க இருக்க முடியாதுன்னு 1958-லிருந்து போராடிக்கிட்டு வர்றோம்; எங்களை மனுஷனா மதிச்சு வேற இடம் கொடுங்க. உங்க மிருகங்க இங்க சந்தோஷமா இருக்கட்டும்னு. இதுவரை நல்ல பதில் இல்ல. காட்டுலேயே நாங்க காணாம போயிடறதுதான் எங்க தலையெழுத்தா?'' என்று முற்றிலும் புதிய கோரிக்கையை முன்வைக்கிறார் எம்.பாலகிருஷ்ணன். இவர்களிடம் நம்மை அழைத்துப் போன தகவல் சேகரிப்பாளர் உதயகுமார் இன்னும் இன்னும் சில தகவல்களைச் சொல்லி, ''அடுத்த முறை மாவட்டச் சிறப்பிதழுக்கு நீங்க வரும்போது அந்த சனங்களோட எண்ணிக்கை இன்னும் குறைஞ்சிருக்கும் ஸார்'' என்றார்! மனது வலித்தது.



வாசகர் யோசனை:

உதயகுமார், கூடலூர்





பஞ்சு மேகங்களைத் தாவணியாக்கி, பச்சை மலை மார்பை இயற்கைப் பெண் மூடுவதும், காற்றுக் காதலன் அதைக் கலைத்துவிட்டு ஓடுவதும் அதனால் பொய்க் கோபமுற்று சில்லென்ற சாரலைக் கண்ணீராய்ப் பொழிவதுமான ஆட்டம் நிகழ்ந்தபடியே இருந்தது... கூடலூரில்.

தொடர்மழை, வந்து போன நகர மனிதர்களின் வாசத்தைக் கழுவி விட்டிருந்ததால் தெரு பாலை போல் வெறிச்சோடியிருந்தது. காலேஜ் ஆப்பிள் கூட்டத்தைக் காணாததால் ஊட்டி ஆப்பிள்களை பார்க்கப் புறப்பட்டோம் ஒரு சேஞ்சுக்கு. உதிக்கும் நட்சத்திரத்துக்குள் (Morning Star Hr. Sec. School) ஃபாதர் கொரியன் அனுமதியோடு நுழைந்தோம். கூடவே சித்ரா டீச்சர் ஹெல்ப்புக்கு வந்தாங்க.

கா.மு. (காலேஜுக்கு முன் காலம்) காலையூத்துகளை செலக்ட் செய்து பேசினோம்.

''மழையும் குளிரும் உங்க படிப்பைப் பாதிக்கலையா?'' என்றோம் நடுக்கத்தோடு... ''அப்பா அம்மாவை அப்படி அலட்சியமா பேசக் கூடாது ஸார்''னு மழை, குளிருக்கு உயர்திணை அந்தஸ்தைக் கொடுத்து நம்மை அஃறிணை மாதிரி பார்த்தார் சோபியா.

''நீங்களெல்லாம் பணம் கொடுத்து வீட்டுக்குள்ளே ஏ.ஸி. போடுவீங்க. நாங்க ஏ.ஸி.க்குள்ளேயே வீட்டையும் ஸ்கூலையும் கட்டியிருக்கோம்''னு வாலண்டீனா கொஞ்சம் வாலாட்டினாங்க.

''ஏங்க கேட்ட கேள்விக்கு இன்னும் பதில் சொல்லலையே'' என்றதும், ''ஸார் மெட்ராஸ் ஸ்டுடண்ட்டுங்க பேய் பிடிச்ச மாதிரி விடியற்காலை நான்கு மணிக்கு எழுந்து படிக்கிறதும் நைட் 12 வரை கொட்டக் கொட்ட விழிச்சு கண்ணுல கருவளையம் வரவழைச்சிக்கிறதும் கொடுமை ஸார். அதுமாதிரி நாங்க படிச்சா குளிராத்தா எங்களைக் கொன்னுடும். படிப்புங்கிறது காத்து மாதிரி. அது இயல்பா உள்ளே போய் வரணும்'' என்றார் திவ்யா. ''எந்தெந்தப் பத்திரிகையெல்லாம் படிப்பீங்க?'' என்றதும், ''ஸாரி ஸார் எந்தப் பத்திரிகையும் நாங்க படிக்கிறது இல்லை'' என்றனர் ஆண் பெண் பேதமின்றி கோரஸாக!

''பொழுதுபோக்கு...?''

''கேப்ரியல், டால்ஸ்ட்டாய், வாஸ்கோ போப்பா இப்படித்தான். நேரமிருந்தா வீட்டு அறைக் கதவைச் சாத்திட்டு தமிழ் சினிமா பாட்டுக்கு டான்ஸ் ஆடுவேன். சினிமாவுல டான்ஸ் மாஸ்டராகறது என் கனவு ஸார்'' என்றார் பிரவீணா. உடனே குறுக்கிட்ட டேவிட், ''அதைக் கேட்டதும் தான் அவரு ஹார்ட் அட்டாக்கில் போய்ச் சேர்ந்தாரு'' என்று குண்டு வீசினார். ''யாரு?''ன்னு கேள்விக்குறியா முகத்தை வெச்சுக் கேட்க, ஷ்யாம், ''ஏய் மைக்கேல் ஜாக்சன்தாண்டா'' என்றார்.

''சரி சரி உங்க கிளாஸ்ல யாரு Mr, Miss



சித்ரா



ஊட்டி ஆப்பிள்களோடு உரையாடல்!



★ சதார்

பிரபலம்னு குரல் வாக்கெடுப்புல செலக்ட் பண்ணுங்க'' என்றதும் கோரஸாக, ''அப்துல் சதார்தான்''னு முழக்கம்.

''சதார் உங்க கனவு என்ன?'' ''சினிமாவுல வில்லனாவுறது!'' ''ஏன்?'' ''எல்லா தப்பும் பண்ணலாம். மதிப்பும் மரியாதையும் கொஞ்சம் கூட கொறையாது...'' (அடப் பாவிகளா!) ''அப்ப ஒரு வில்லத்தனமான ஜோக் சொல்லுங்க.'' ''மைக்டைசனோட பூனையும் உசைன் போல்ட்டோட பூனையும் ரேஸுக்குப் போனது. அதில் உசைன் போல்ட் பூனை ஜெயிச்சதும், உங்களை மாதிரி ஒரு நிருபர், 'உங்க வெற்றியின் ரகசியம் என்ன?'ன்னு கேட்டார். அதுக்கு அது என்ன சொல்லியிருக்கும்?'' ''தெரியலையே'' என்றதும், ''அந்தப் பூனை மைக்கை வாங்கி தொண்டையைச் சரிபண்ணிக்கிட்டு 'மியாவ் மியாவ்'ன்னு கத்திச்சு'' என்றதும் குட்டி தேவதைகள் 'மொக்கை ஜோக்'னு உசுப்பேத்தினர்.


''உங்க மாவட்டத்தின் பெருமை யாருக்கும் தெரியாது போலிருக்கே'' என்றதும், 'நீலகிரியின் நெடும்புறத் திருத்தாங்கு ஆடியல் யானையும் தேரும் மாவும்'ன்னு வஞ்சிக் காண்டத்தில இருக்கு ஸார்''னு டெஸ்மன் சொன்னதும் ஜென்ம சாபல்யம் அடைஞ்சதா மனசுக்குள்ளேயும் குளிர் குந்திக்கொள்ள தேங்க்ஸ்னு பெருமூச்சு விட்டுக் கிளம்பினோம்.

வாசகர் யோசனை: பேபி, கூடலூர்

பெரிய நிலப்பரப்பு, சுற்றிலும் மின்வேலி, அரசு பட்டுப் புழு வளர்ப்புத் துறைன்னு அறிவிப்புப் பலகை, அகலமான இரும்பு கேட். எட்டிப் பார்த்தால் 'ஜிலோ'ன்னு இருக்கு. கேட்டைத் திறந்து உள்ளே போனதும், ''யாரு என்ன வேணும்?''னு ஒருத்தர் வந்து திக்கித் திக்கிக் கேட்டார். மாவட்டச் சிறப்பிதழ் கல்கி விசிட்னு விவரத்தைச் சொன்னோம். மனுஷன் முகத்தில் சந்தோஷக் களை. ''அரசு பட்டுப்புழு வளர்ப்புப் பண்ணை குன்னூரில் எப்படி ஸார் நடக்குது?''ன்னு கேட்டதுதான் தாமதம்...







* சங்கரன்

''இப்பண்ணைய இம்ப்ருவ் மாடுதாயாதலே கவர்மென்ட் அனவா தந்தலேத்தா இக்காடன்பந்து அரவதாலு ஜென கெலச திலியார்கோ''ன்னு படபடவென்று பொரிந்தார்.

அவரின் முகம் கோபத்தில் இருந்தது. எட்டிப் பிடிக்கும் தூரத்தில் பனி மேகம் ஒன்று நம்மைக் கடந்து செல்ல, சடசடவென தூறலும் குளிரும் கூடுதலானதால் தமிழும் இங்கிலீஷும் சேர்ந்து நடுங்குதோன்னு பார்த்தோம். அப்புறம்தான் தெரிஞ்சது அவரு படுகர் மொழியில பேசினது. நல்லவேளை அவருக்குத் தமிழும் தெரிஞ்சிருந்தது. ''என்ன சொல்ல வர்றீங்க?''ன்னு விளக்கம் கேட்டதும், ''25 ஏக்கர் நிலத்தில் 60 பேர் வேலை செஞ்ச காலமெல்லாம் போச்சு ஸார். இப்போ 5 ஏக்கரில்தான் மல்பெரி பயிர் பண்றோம். மொத்தம் ஐந்து பேருக்குத்தான் வேலை. அதுவும் சிலருக்கு மாசத்தில் பத்து நாள்தான் வேலை. பட்டுப்புழு வளர்ப்புப் பண்ணையில 45 வருஷம் வேலை செஞ்சிக்கிட்டு இருக்கிறவங்களைக்கூட இன்னும் பர்மனென்ட் பண்ணலை'' என்று குன்னூர் மலைச் சரிவில் அடுக்கப்பட்ட வீடுகளைப் போல, அரசு மீது குற்றச்சாட்டுக்களை அடுக்கினார். அவர்தான் மசக்கல், மசினிகுடி, குன்னூர் பகுதிகளுக்கான பட்டுப்புழு வளர்ச்சி சங்கத் தலைவர் கே.வி. சங்கரன்.



பட்டுப்புழு முட்டைகளை ஓரிடத்தில் வாங்குவது; பட்டுப் புழு உண்பதற்கு மல்பெரி இலைகளுக்காகச் செடிகளை வளர்ப்பது; புழுவையும், இலைகளையும் வேறோர் இடத்தில் வைத்து பட்டுக் கூடுகளைப் பெறுவது; பட்டுக் கூடுகளை

''ஸார், நீங்க கொஞ்ச நல்லா எழுதுங்க. விடிங், பேசிங், எரு அடித்தல்னு எல்லா வேலையும் மல்பெரி தோட்டத்தில செய்ய றோம். நிறைய நாள் வேலை கொடுக்கச் சொல்லுங்க'' என்று கூடவே எசப்பாட்டு பாடினார்கள் 27 வருஷமாக வேலை பார்க் கும் கௌசல்யாவும் ஜெஜலக்ஷ்மியும்.



பட்டுப்போன பட்டுப் புழு வளர்ச்சி?

விற்பது போன்றவை பட்டு வளர்ப்புத் துறையின் வேலைகள். பட்டு நூலின் தேவை இன்னும் அதிகமிருக்கும் நிலை யில் ஏன் அரசு நிறுவனம் தூங்கி வழி கிறது? இவ்வளவு இடமும், கட்டடமும், வேலை ஆட்களும் தனியாருக்கு இருந் தால் லாபம் கொழிக்கும்... என்று நாம் யோசிக்கும்போதே... நம் மனத்தை வாசித்தவர் போல,

''அரசு அதிகாரிங்க சொட்டு நீர்ப்பாச னம் போட்டாங்க - அது கொஞ்ச நாள். ஏற்கெனவே ஒருமுறை கரண்ட் வேலி போட்டாங்க. அது கொஞ்ச நாள். இப்படி ஏதாவது சம்பாதிக்கிற வழியை மட்டும் தான் யோசிப்பாங்க ஸார்'' என்றார் சங்கரன்.

குளிரில் கம்பளி உடை போட்டும் நடுங்கிக் கொண்டிருந்த நாம், ''ஏம்மா எங் களை மாதிரி குளிர் டிரஸ் எதுவும் போட் டுக்கலையே. உங்களுக்குக் குளிரலையா?'' என்றோம். ''எல்லாம் பழகிப்போச்சு ஸார்'' என்றனர். அந்த வரியில் நிறைய அர்த்தம் இருப்பதாய்ப் பட்டது. பட்டுப் புழு வளர்ப்பு பட்டுப் போகாமலிருக்க அரசு ஏதேனும் செய்தாக வேண்டும். இருந்த அந்த மூன்று பேரிடமும் நம்பிக்கையை நட்டுவிட்டு நன்றி சொல்லிக் கிளம்பி னோம். அதிகாரிகளுக்கும் இதெல்லாம் பழகிப் போயிருக்குமோ?

வாசகர் யோசனை:

ஓ.கே. விஜயகுமார், மேட்டுப்பாளையம்

எதிர்வரும் அபாயம்

"அரசு யோசிக்காமல் செய்த ஒரு விஷயம் இப்போது அபாயமாகியுள்ளது!'' என்கிறார் ஒரு குன்னூர்வாசி. வெறிநாய் கடித்தவர்களுக்கும், குழந்தைகள், தாய்மார்களுக்கும் போடப்படும் தடுப்பூசிகளுக்குக் கடுமையான தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அரசு மருத்துவமனைகளில் தினசரி மிகக் குறைந்த நபர்களுக்கே, தடுப்பூசி மருந்துகள் போடப்பட்டு வருகின்றன. காரணம், கடந்த ஒன்றரை ஆண்டுகளாக தடுப்பூசி மருந்து உற்பத்தி தடைசெய்யப்பட்டது தான்.



தடுப்பூசிக்குத் தட்டுப்பாடு!



குன்னூரில் அமைந்துள்ளது 'பாஸ்டர் இன்ஸ்டிட்யூட் ஆஃப் இந்தியா' நிறுவனம். 1906ல் இங்கு தடுப்பூசி மருந்து உற்பத்தி தொடங்கப்பட்டது. மத்திய அரசின் சுகாதாரத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள நிறுவனம் இது.

வெறிநாய் கடித்தவர்களுக்கு ரேபிஸ் நோய் தாக்காமல் இருக்க தடுப்பூசி மருந்து. ரணஜன்னி, கக்குவான், தொண்டை அடைப்பான் போன்றவை பிறந்த குழந்தைகள், பிரசவித்த தாய்மார்களுக்கு வராதிருக்க முத்தடுப்பு ஊசி மருந்து, பாம்பு கடி தடுப்பு ஊசி மருந்து என பல தடுப்பூசி மருந்துகள் இங்கு உற்பத்தி செய்யப்பட்டு வந்துள்ளன. இங்கிருந்து இந்தியாவில் உள்ள அரசு மருத்துவமனைகளுக்கு மிகக் குறைந்த விலையில் வழங்கப்பட்டன.

"கடந்த 2007 நவம்பர் மாதம் இங்கு ஆய்வுகள் மேற்கொண்ட உலக சுகாதார மைய (WHO) அதிகாரிகள், 'உலகத் தரத்துக்கு இணையான தரத்தில் உற்பத்தி செய்ய வேண்டும். நவீன உபகரணங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வேண்டும்' எனப் பரிந்துரைத்தனர். அதன்படி குன்னூர் பாஸ்டர் உட்பட மூன்று பொதுத்துறை நிறுவனங்களின் மருந்து உற்பத்தி உரிமத்தை ரத்து செய்தது மத்திய சுகாதாரத் துறை. இதனால் கடந்த பதினெட்டு மாதங்களாக இங்கு தடுப்பூசி மருந்து உற்பத்தி செய்யப்படவில்லை.

தடுப்பூசி மருந்து உற்பத்தி தடை செய்யப்பட்டது மட்டுமல்லாது, குன்னூர் நிறுவனத்தை, செங்கல்பட்டுக்கு மாற்றவும் மத்திய அரசு (அப்போது மத்திய சுகாதார அமைச்சர் அன்புமணி ராமதாஸ்) முயற்சித்தது. கம்யூனிஸ்ட் கட்சிகள் மற்றும் பல சேவை அமைப்புகளின் தொடர் போராட்



✱ கமாலுதீன்



✱ டாக்டர் ஜீவா கலைச்செல்வன்



✱ ஜெகந்நாதன்

டங்களினால், அது கைவிடப்பட்டது. ஆனால், தடுப்பூசி மருந்து உற்பத்தி மீண்டும் தொடங்கப்படுவது எப்போது என்பது கேள்விக்குறியாகவே உள்ளது'' என்கிறார் கமாலுதீன்.

''தொழிலாளர்கள், அலுவலர்கள் என இருநூற்று நாற்பத்தேழு பேர் இங்கு பணி புரிகின்றனர். மத்திய அரசு மருந்து உற்பத்தியைத் தடைசெய்திருந்தாலும் தொழிலாளர்களை பணி விடுப்பு செய்துவிடவில்லை. அதனால் இடைப்பட்ட காலத்தில் தொழிலாளர்களுக்கு, சிறப்புப் பயிற்சிகள் தரப்பட்டு வருகின்றன. ஆய்வு மாணவர்களுக்கு இங்கு வகுப்புகள் நடத்தப்படுகின்றன. எங்கள் அலுவலர்களே பாஸ்டர் ஆய்வகப் பாதுகாப்பு இயக்கம் ஒன்றினைப் பதிவுசெய்து, செயல்பட்டு வருகின்றனர். இந்த இயக்கம் தடுப்பூசி மருந்து உற்பத்தி தொடர வேண்டுமென மத்திய அரசுக்கு பல அறப்போராட்டங்கள் வாயிலாக வலியுறுத்தி வருகிறது!'' என்கிறார் பாஸ்டர் ஆய்வகப் பாதுகாப்பு இயக்கச் செயலாளர் ஜெகன்னாதன்.

குன்னூர் பாஸ்டர் நிறுவனத்தில் தடுப்பூசி மருந்து உற்பத்தியை உடனடியாகத் தொடங்க மத்திய அரசு அனுமதிக்க வேண்டும்!

''இந்திய அரசு மருத்துவமனைகளின் தடுப்பூசி மருந்து தேவையில் அறுபது சதவிகிதத்தைப் பூர்த்தி செய்து வந்தது பாஸ்டர். இந்தியாவின் அனைத்துப் பகுதிகளிலும் முன்னரே இருப்பு வைத்திருந்த தடுப்பூசி மருந்துகளும் தீர்ந்துபோக உள்ளன. மேலும் அவற்றின் உபயோகிப்பு நாட்களும் காலாவதியாக உள்ளன. இந்நிலையில், குன்னூர் பாஸ்டர் நிறுவனத்தில் தடுப்பூசி மருந்து உற்பத்தியை உடனடியாகத் தொடங்கிட மத்திய அரசு அனுமதி அளிக்க வேண்டும். அப்படியே தொடங்கினாலும் கருவிகளை மீண்டும் இயக்கி, பரிசோதனைகள் முடித்து மருந்து வெளிவர பல மாதங்கள் ஆகும். அப்போது ஏற்படும் பற்றாக்குறையை அரசு சமாளிக்க வேண்டிய சூழலும் உள்ளது. உலக சுகாதார மையத்தின் பரிந்துரைக்கேற்ப உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி, நவீன உபகரணங்களின் உதவியுடன் விரைவில் பாஸ்டர் தொடர்ந்து இயங்க வேண்டும்!'' என்கிறார் அதன் ஆய்வகப் பாதுகாப்பு இயக்கத் தலைவி டாக்டர் ஜீவா கலைச்செல்வன்.



வாசகர் யோசனை :

ஓ.கே. விஜயகுமார்,
நீலகிரி

நீலகிரி மாவட்டச் சிறப்பிதழை வடிவமைக்க ஆலோசனைகள் வழங்கி, குன்றென கடிதங்கள் குவிந்துவிட்டன. தேர்ச்சியான தகவல்கள், விவரணங்கள், படங்கள் என அள்ளித் தந்து அசத்திவிட்டனர். இவர்களின் உதவியால்தான் இந்தச் சிறப்பிதழைத் தயாரிக்க முடிந்தது. அவர்களுக்கு எங்களது பிரத்யேக நன்றிகள்.

(ஆர்)

எம்.காளிதாசன், ஜக்கனாரை
அகரம்.சிவா, கோத்தகிரி
வழக்கறிஞர் ஹரிமோகன்
கே.பிச்சையம்மாள், மேல்கோடப்பமந்த்
பி.ராமன், ஜக்கத்தா
பெ.மணிவண்ணன், கூடலூர்
கே.எஸ்.ராமகிருஷ்ணன்,
ஓரநள்ளி
உதயகுமார், கூடலூர்
பி.ஏ.வதூத்,
மேட்டுப்பாளையம்
டி.சுதா, ஸ்ரீரங்கம்
ம.சுரேஷ்குமார்,
அரவேணு


அமுது ரமேஷ், ஓரசோலை
நீலமலை நா.மூர்த்தி, கொடநாடு
ம.பிரபு, உதகை
அ.அகல்யா, ஆத்தூர்
ரா.பிரேம் சுரேஷ், கோத்தகிரி
மேல்குந்தை வாசு
நயிமா ரஃபீக், சென்னை
எடக்காடு பீ. சேகர்,
எஸ்.மரகதம், கோபி
நீலமலை ஜே.பி.
தவமுதல்வன் நியாஸ்
நீலகிரி வாசுதேவன், மேல்குந்தா
முருகன், குன்னூர்
ஓ.கே.விஜயகுமார், மேட்டுப்பாளையம்
ஓவியர் சின்னராஜு, மேட்டுப்பாளையம்
கே.ராஜி,
வேளாண்மை உதவி பொறியாளர்



நன்றி... நன்றி... நன்றி

நூல் விமர்சனம்

மன அதிர்வு!



ஆணிவேர், ஜான், நக்கீரன் வெளியீடு, 105, ஜானி ஜான்கான் சாலை, இராயப் பேட்டை, சென்னை-600 014. விலை ரூ.150.00

இலங்கைப் பிரச்னையை மையமாகக் கொண்ட திரைப்படம் 'ஆணிவேர்'. 'ஆணி வேர்' படப்பிடிப்பின்போது தமக்கு ஏற் பட்ட அனுபவங்களைப் பகிர்கிறார் அதன் இயக்குநர் ஜான். படத்தின் திரைக்கதை வடிவமும் நூலில் இடம் பெற்றுள்ளது. போர்ச் சூழலில் இத் திரைப்படத்தைப் படமாக்கிய அனுபவங்களைத் தொடர்ந்து, திரைக்கதையை வாசிக்கையில் யுத்த களத்தின் நடுவே காட்சியாளனாய் நிற்பது போன்ற உணர்வு; மன அதிர்வு.



பத்ரகிரியாரின் மெய்ஞானப் புலம்பல் - தொகுதி 1, பேராசிரியர் டி.என்.கணபதி, ரவி பப்ளிகேஷன்ஸ், 'ராஜ்கமல்', 45(21), 4வது அவென்யூ, அசோக் நகர், சென்னை - 600 083. விலை ரூ. 90.00

தமிழ் இலக்கிய வரலாற்றில் சித்தர் பாடல்களுக்குச் சிறப்பிடம் உண்டு. தத்துவ விசாரங்களும், ஆன்மத் தேடலும் நிறைந்த பாடல்களைத் தந்தவர்கள் சித்தர்கள். அவர்களுள் ஒருவரான பத்ரகிரியாரின் வாழ்க்கை வரலாறும், அவரது மெய்ஞானப் புலம்பல்களின் ஒரு பகுதியும் இந் நூலில் இடம்பெற்றுள்ளன; பாடல்களுக்குரிய விளக்கவுரையோடு. சித்தர்களைப் பற்றிய அறிமுகத்தைத் தரும் முன்னுரையும், பின்னிணைப்பான நூற்பட்டியலும் ஆய்வு மாணவர்களுக்குப் பயனளிக்கும்.



கேள்வி நேரம், எஸ்.லெக்ஷ்மி நரசிம்மன், சாயீஸ்வரி பப்ளிகேஷன்ஸ், 25/2, தாராசந்த் நகர் மெயின் ரோடு, விருகம்பாக்கம், சென்னை-600 092. விலை ரூ. 120.00

பதில் சொல்வதைப் போல் கடினமானதுதான் கேள்வி எழுப்புவது - சுவாரஸ்யமானதும் கூட. வெவ்வேறு துறைகளில் புகழ்பெற்ற பிரபலங்களின் பேட்டிகள் இடம்பெற்ற தொகுப்பு. புகைப்படங்களும், பேட்டிகளின் இறுதியில் வெளியான காலமும் தரப்பட்டிருந்தால் நூலுக்கு மேலும் அழகு சேர்ந்திருக்கும்.

- நேயமுகில்

அந்த நாளும்

கல்கி ராஜேந்திரன்

எங்கள் வீட்டுத் தோட்டதில் இரண்டு தென்னை மரங்கள் இருக்கின்றன. அவற்றில் ஏறி தேங்காய் பறித்துப் போடும் நபரை வரச் சொல்லி செல்ஃபோனில் பேசிக்கொண்டிருந்தாள் என் மனைவி விஜயா. ''அட! அவனிடம் கூட செல்ஃபோன் இருக்கா?'' என்று கேட்டேன். ''யாரிடம் இல்லை? பால் பாக்கெட் போடுகிறவர், எலக்ட்ரீஷியன், பிளம்பர், வீடு பெருக்குகிறவள், தெரு கூட்டுகிறவள் எல்லாரிடமும்தான் இருக்கு'' என்றாள் விஜயா.

எதில் அபிவிருத்தி இருக்கிறதோ இல்லையோ, செல்ஃபோன் சோஷலிஸம் இங்கு வந்தாயிற்று! டெலிஃபோன் என்பது வசதி படைத்தவர்களுக்கே கிடைக்கும் என்ற நிலை ஒரு காலத்தில் நிலவியது என்பதை நம்புவதுகூட இன்று சிரமம்தான். ஃபோன் கனெக்ஷனுக்காகப் பெயர் கொடுத்துவிட்டு ஆண்டுக்கணக்கில் காத்திருப்பார்கள்.

ராஜாஜியின் பேரன் ஸி.ஆர்.பார்த்தசாரதிக்கு (ஹிந்து நாளிதழில் துணை ஆசிரியராகப் பணிபுரிந்த ஸி.ஆர்.கிருஷ்ணசாமியின் மகன்) ஒரு சமயம் அவசரமாக டெலிஃபோன் இணைப்பு தேவைப்பட்டது. ஸிவில் இன்ஜினீயர் பட்டம் பெற்று, வடக்கே நல்ல உத்தியோகத்தில் இருந்தவர். திடும்மென்று ஒரு நாள் வேலையைத் துறந்து சென்னை திரும்பிவிட்டார்! ராஜாஜிக்கு ரொம்பக் கவலையாகப் போய்விட்டது. ''என்ன இப்படிச் செய்துட்டே!'' என்றார். ''நான் சொந்தத்தில் ஒரு நிறுவனம் தொடங்கப் போகிறேன்'' என்றார் பேரன் பார்த்தசாரதி. ராஜாஜிக்கு மேலும் ரொம்பக் கவலையாகிவிட்டது!

''சொந்தப் பத்திரிகை தொடங்குகிறேன்'' என்று ''கல்கி'' கூறியபோது, ''வேண்டாம், சிரமப்படப்போறே'' என்று கவலையோடு தடுத்துவிடப் பார்த்தவர் அல்லவா, ராஜாஜி! அதையே ராஜாஜியின் ஆசிர்வாதமாக ஏற்றுக்கொண்டதாகக் ''கல்கி'' எழுதியிருக்கிறார். பார்த்தசாரதியும் ஏறத்தாழ அதே நிலையில்தான் இருந்தார்.

''எனக்கு உதவணும்னு நினைச்சா நீங்க ஒரு சின்ன காரியம் பண்ணலாம்'' என்றார் பேரன். ''என்ன?'' என்று கேட்டார் ராஜாஜி. ''ஃபோன் இல்லாமல் நிறுவனம் தொடங்கி நடத்துவது ரொம்பக் கஷ்டம். கனெக்ஷன் கிடைப்பதோ குதிரைக் கொம்பாக இருக்கிறது. ஒரு வார்த்தை நீங்க சொன்னால் உடனே கிடைச்சுடும்'' என்றார் பார்த்தசாரதி.

சொந்த நிறுவனம் தொடங்குவதில் பேரனுக்கு இருந்த உறுதி ராஜாஜிக்குப் பிடித்திருந்தது. ஆனால் முறை தவறி ஃபோன் கிடைக்க சிபாரிசு செய்வது அவருக்குக் கொஞ்சமும் பிடிக்காதே! ''அதோ டெலிஃபோன் டைரக்டரி இருக்கு பாரு; அதை எடு'' என்றார் ராஜாஜி. அதைப் புரட்டி ஒரு பக்கத்தைச் சுட்டிக் காட்டினார். 'own your own telephone scheme என்று புதுசா அறிமுகப்படுத்தியிருக்கா'' என்றார். ''அதை நான் படிச்சுட்டேன்'' என்றார் பேரன். ''ஃபோன்

இணைப்பு உடனே கிடைச்சுடும்; ஆனால் அதுக்கு இரண்டாயிரம் ரூபாய் பணம் கட்டணுமே! ரெண்டு காண்ட்ராக்டாவது பிடிச்ச பிறகு தான் என்னிடம் கொஞ்சம் பணம் புரளும்.''


★ ஸி.ஆர்.பார்த்தசாரதி

ராஜாஜி உடனே தமது 'செக்' புத்தகத்தை எடுத்து, பார்த்தசாரதி பெயருக்கு இரண்டாயிரம் ரூபாய் செக் எழுதிக் கொடுத்தார். முன்னாள் கவர்னர் ஜெனரலுக்குக் கிடைத்த பென்ஷன் மாதம் ஆயிரம்

வந்திடாதோ?



ரூபாய்! அதில் இரண்டாயிரம் ரூபாய் தனக்கு அள்ளித் தருவது எவ்வளவு சிரமம் என்பது பார்த்த சாரதிக்கு நன்றாகவே தெரியும். ''ஆறு மாசத்தில் திருப்பித் தர்றேன்'' என்று சொல்லி சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து எழுந்தார். பேரன் தலையில் கை வைத்து ஆசீர்வதித்தார் ராஜாஜி.

அந்த ஆசி வீண்போகவில்லை. சாரதி பில்டர்ஸ் நிறுவனம் நன்றாகவே நடந்தது. சரியாக ஆறாவது மாதம் இரண்டாயிரம் ரூபாய்க்கு செக் எழுதி எடுத்துக்கொண்டு தாத்தாவை பேரன் சந்தித்தார். ராஜாஜி அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

''இந்தச் சந்தோஷமே எனக்குப் போதும்; பணம் என்னுடைய ஆசீர்வாதமாக உன்னிடமே இருக்கட்டும்'' என்றார்.

குற்றவாளி சார்பில் உயர்நீதிமன்ற நீதிபதிக்கே ஃபோன் செய்து பேசி, நீதி விசாரணையில்கூட மத்திய அமைச்சர் தலையிடும் இன்றைய அரசியல் சூழலில் வாழும் நமக்கு, பேரனுக்கு டெலிஃபோன் இணைப்பு தருமாறு சிபாரிசு செய்ய மறுத்துவிட்ட ராஜாஜியின் போக்கு புரிந்துகொள்ள முடியாததாகவே தோன்றலாம். ஆனால், அன்பும்

நேர்மையும் இணைந்து செயல்பட்ட இதுபோன்ற தருணங்கள் ராஜாஜியின் வாழ்க்கையில் நிறையவே உண்டு.

ஒரு சமயம் ரயில் ஏறுவதற்காக எழும்பூர் ஸ்டேஷனுக்கு சென்னை மாகாண முதலமைச்சர் காரில் சென்று கொண்டிருந்தார். ஸ்டேஷனை நெருங்கும் சமயம் முன்னதாகப் போய்க்கொண்டிருந்த கார்கள் இடையே (பைலட் கார்கள் அல்ல) சிறிய விபத்து ஏற்பட, போக்குவரத்து தடங்கல் ஏற்பட்டது. ராஜாஜி உடனே காரை விட்டு இறங்கி, ரயில் நிலையம் நோக்கி நடக்க ஆரம்பித்து விட்டார்! அவருடைய பி.ஏ. சீனிவாச ராகவன் பதறிப்போய், ''ஐந்து நிமிஷத்தில் ரோடு க்ளியர் ஆயிடும்; காரிலேயே போயிடலாம்; முதலமைச்சர் ஏறுவதற்கு முன் ரயில் நிச்சயம் புறப்படாது'' என்று சொன்னார்.

''அதற்காகவேதான் அவசரமாக இறங்கி நடக்கிறேன்'' என்றார் ராஜாஜி. ''எனக்காக ரயில் தாமதப்படக் கூடாது; பயணிகளுக்குச் சிரமம் ஏற்படக் கூடாது!''

அந்த நாளில் பிளாட்ஃபாரம் ஓரமாகவே காரில் சென்று இறங்கும் வசதி எழும்பூர் ரயில் நிலையத்தில் உண்டு. அவ்வாறிருக்க, முதலமைச்சர் ஸ்டேஷனுக்குள் நடந்து வந்து நுழைவதைக் காண பயணிகளும் ஸ்டேஷன் அதிகாரிகளும் வியப்பில் ஆழ்ந்தனர்.



"முரசொலி நிருபர் வந்திருக்காரா?"

தி.மு.க.வுடன் அரசியல் ரீதியில் ராஜாஜி தோழமை பாராட்டிய தருணங்களும் உண்டு; எதிர்த்து நின்ற நாட்களும் உண்டு அல்லவா? எதிர்க்க நேர்ந்த காலகட்டங்களில் பத்திரிகையாளர்களைச் சந்தித்தால், ராஜாஜி எடுத்த எடுப்பில், 'முரசொலி நிருபர் வந்திருக்கிறாரா?' என்று கேட்பார். முதல் கேள்வியைக் கேட்கும் உரிமையை அவருக்குத்தான் வழங்குவார்!

அவர் கவர்னர் ஜெனரல் பதவி வகித்த காலகட்டத்தில் ஒரு சமயம் எம்.எஸ். அவர்களுடைய கச்சேரி புது தில்லியில் நடைபெற்றது. அதை அறிந்த ராஜாஜி, சதாசிவம் குடும்பத்தை கவர்னர் ஜெனரல் மாளிகைக்கு விருந்துக்கு அழைத்தார். வேறு சிலரும் அழைக்கப்பட்டிருந்தனர். ஒரு கவனக் குறைவு காரணமாக அதிகாரிகள் சதாசிவம் தம்பதியின் இரண்டாவது மகள் விஜயாவின் பெயரை விருந்தினர் பட்டியலில் சேர்க்காமல் விட்டுவிட்டார்கள். மாளிகையின் வரவேற்புக் கூடத்துக்குள் கரம் கூப்பியவாறே நுழைந்த ராஜாஜி, எல்லா விருந்தினர்களையும் ஒரு நோட்டம் விட்டார். ''விஜயா எங்கே?'' என்றுதான் எடுத்த எடுப்பில் கேட்டார். ''அவளுக்கு அழைப்பு இல்லாததால் அழைத்து வரவில்லை'' என்றார் சதாசிவம். ''அடடா! குழந்தை மனசு என்ன பாடு படும்!'' என்றார் ராஜாஜி. சற்று நேரத்தில் சிறுமி விஜயாவை அழைத்துப்போக ராஜாஜியின் மகன் நரசிம்மனே, கவர்னர் ஜெனரல் மாளிகையைச் சேர்ந்த காரில் வந்தார்! விஜயாவுடன் நரசிம்மன் திரும்பி வரும் வரை ராஜாஜி விருந்துக் கூடத்துக்குச் செல்லாமல் நண்பர்களுடன் பேசிக் கொண்டிருந்தார். இதனால் ஏற்பட்ட பத்து நிமிஷத் தாமதம் கவர்னர்

ஜெனரல் மாளிகை அன்று வரை கண்டறியாத ஒன்று!

ராஜாஜியின் அன்பு, உறவினரிடம், நண்பர்களிடம், குழந்தைகளிடம், எதிர்க் கட்சியினரிடம், பொது மக்களிடம் எப்படி



அன்பும் நேர்மையும் அறிவாற்றலும் அடக்கமும் ஒன்றுடன் ஒன்று கைகோத்துச் செயல்பட்ட ஒரு காலம் இருந்தது.

யெல்லாம் செயல்பட்டது என்பதற்கு இதுபோல எத்தனையோ சம்பவங்களை விவரிக்கலாம். இதெல்லாவற்றையும் விட ஆச்சர்யம் ஒன்று உண்டு!

பஸுல்லா ரோடிலிருந்து நௌரோஜி ரோடுக்கு ராஜாஜி குடிபெயர்ந்த பிறகு, அந்த அடக்கமான வீட்டைச் சுற்றி இருந்த சிறிதளவு வெட்டவெளியில் சில பூச் செடிகளை வைத்துத் தர முன்வந்தார் சதாசிவம். ''அதையெல்லாம் வைச்சுக் காப்பாத்தறது எனக்கு ரொம்ப சிரமம்; வேணும்னா நாலு துளசிச் செடிகளை நடச் செய்யுங்கள்'' என்றார் ராஜாஜி. ஒரு பக்க சுற்றுச் சுவரையொட்டி வேலி போட்ட மாதிரி துளசிச் செடிகளைப் பயிரிட்டார் சதாசிவம். அவை செழுமையாக வளர்ந்தன. ராஜாஜி, வீட்டுப்படி இறங்கினால் முதலில் துளசிச் செடியின் பக்கம்தான் போவார். துளசி இலையைப் பறிக்கவோ, கசக்கி முகரவோ மாட்டார். பாசத்துடன் செடிகளைத் தடவிக் கொடுத்துவிட்டு உள்ளங்கையை முகர்வார்! இந்த அன்புக்கு இணை ஏது?

அன்பும் நேர்மையும் அறிவாற்றலும் அடக்கமும் ஒன்றுடன் ஒன்று கைகோத்துச் செயல்பட்ட ஒரு காலம் இருந்தது. ராஜாஜி, டி.கே.சி., ''கல்கி'', சதாசிவம், எம்.எஸ். ஆகியோரிடம் மட்டுமின்றி வேறு பல பெருந்தலைவர்களிடமும் இந்தக் குணநலன்கள் இருந்தன. இன்றைய சூழலிலோ, ''அந்த நாளும் வந்திடாதோ'' என்று தொடங்கும் ''பக்த மீரா'' திரைப் படப் பாடல்தான் நினைவுக்கு வருகிறது. இருப்பினும் அந்த நாள் திரும்ப வரும்; வந்தே தீரும்; பாரதத்துக்குப் புதிய பெருமைகள் சேரும் என்ற நம்பிக்கையுடன் விடைபெறுகிறேன்.

(வணக்கம்)



"தனிமையில இருக்கறப்ப உங்க மனைவியை எப்படிக் கூப்பிடு வீங்க?"

"தனிமையில நிம்மதியா இருக் கறப்ப அவளை ஏன் கூப்பிட ணும்?"

- சென்னிமலை
சி.பி.செந்தில்குமார்



"ஆபரேஷன் முடிஞ்சதும் உங்களால எழுந்து ஓட முடியும்னு ஃபைனான்ஸ் கம்பெனிக்காரன்கிட்டே சொன்னது ரொம்பத் தப்பாப் போயிடுச்சு!"

"ஏன்... என்னாச்சு?"

"ஃபீஸ் கொடுக்காம ஓடிட்டார்!"

- ஜி.வி.சுபாஷ், சேலம்.



"நேத்து உங்க படத்தைப் பார்த்து ரொம்ப வேதனைப்பட்டேன்."

"ஏன்? அது அவ்வளவு சோகமா?"

"ம்ஹூம்... வீட்ல 1008 வேலையை வெச்சுட்டு, போயும் போயும் இந்தப் படத்துக்கு வந்தோமேன்னுதான்."

- சென்னிமலை
சி.பி.செந்தில்குமார்

“போரைத் தவிர்க்க வேறு வழியே இல்லையா அமைச்சரே?”

“ஏன் இல்லாமல்... சுரங்கப் பாதை வழியுள்ளதே மன்னா!”

- வீ.விஷ்ணுகுமார், கிருஷ்ணகிரி





“இந்தப் போரில் நம் மன்னரின் பங்கு என்ன?”

“துவக்க ஓட்டக்காரர்.”

- சாயம் வெ.ராஜாராமன்

துவக்க ஓட்டக்காரர்!

“மன்னர் மறப்போர் புரிய ஏன் மறுக்கிறார்?”

“போர்க்களத்தில் இறப்போர் பட்டியலில் சேர்ந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான்!”

- வீ.விஷ்ணுகுமார், கிருஷ்ணகிரி




நீலகிரி மாவட்ட சிறப்பிதழ்

என்னோடு இருக்கும் ரகசியம்!

வகுப்பறையில்
கண்களால் எழுதி எழுதி
கரைந்துகொண்டிருந்தோம்
சாக்பீஸ் துண்டுகளாய்!

கணிதப் பாடத்தில் நமக்குத் தெரியாத
சூத்திரத்தைப் போலவே
யாருக்கும் தெரியாமல்தானிருந்தது
நம் காதலும்.

கரும்பலகை அழிப்பானாய்
காத்திருந்தது நம் முன்
காலம்.

சிலப்பதிகாரச் செய்யுளை
ஒப்பிக்க மறந்த நீ
ஆசிரியர் முன் உடைப்பாய்
விழிச் சிலம்பை.
உன் கன்னங்களில்
சிதறும் முத்துக்கள்.

ஆசிரியர் பிரம்பை எடுக்கும்போது
கைகளைப் பிசைவாய்;
என் இதயம்
இருப்பதை மறந்து.

ஒவ்வொரு முறையும்
உன் மௌனப் பூட்டைத்
திறக்க முயன்று
உடைந்து போனது
என் புன்னகைச் சாவி

பள்ளி இறுதியாண்டில்
எப்போதும் சந்திக்கும்
குழாயடியில் விடைபெற்றோம்
விழிக்குடம் தழும்பத் தழும்ப!

என்றும் நீ
என்னுடன்தான் இருக்கிறாய்
ஒரு ரகசியத்தைப் போல!

- அமுது. ரமேஷ்

சாயப் பட்டறை
துயர மருதாணியை
நிலத்தில் பூசும்
ஆக்டோபஸ் கரங்கள்

- ம. சுரேஷ்குமார்

- சாதிநதிகள் எல்லாம்
  மனிதக் கடலில்
  கலக்குமானால்
  போதி மரங்கள்
  முளைக்கும்
  வீதிக்கொன்றாய்!

- நீ...
  கவிதைக்குத்
  தப்பிய
  வார்த்தை.

- நீலமலை. நா. மூர்த்தி





புராண ரேகைகள்!

"வேதங்களால் விளக்க முடியாததையும் புராணங்களால் புரிய வைக்க முடியாததையும் உபநிடதங்களால் உணர்த்த முடியாததையும் ஓவியத்தால் உருவகப்படுத்த முடியும்" என்கிறார் இராஜராஜன்.

புதுச்சேரி பாரதியார் பல்கலைக் கூடத்தில் நுண்கலைத் துறையின் விரிவுரையாளராக(ஓவியம்) உள்ள இவர் பிறந்தது மயிலாடுதுறையில். பள்ளியில் படிக்கும்போதே விளம்பர கலை மீதான ஈர்ப்பு தொடங்கிவிட்டது.



• இராஜராஜன்

ஓவியத்துக்கு மொழி பேதம் ஏது? பெங்களூர், புதுடெல்லி, குண்டூர், கொச்சி என இவரது ஓவியக் கண்காட்சிகள் நடக்காத நகரங்களை இந்திய வரைபடத்தில் சிரமப்பட்டுதான் தேடவேண்டும். சிங்கப்பூர் போன்ற கடல் கடந்த தேசங்களிலும் இவரது தூரிகை நீண்டுள்ளது.

கலாபீடம், சேவா ரத்னா, கலைப் படைப்பாளி, கோடீஸ்வரராவ் விருது... பட்டியல் போட்டால் நீண்டுகொண்டே போகிறது விருதுகள் மற்றும் பரிசுகளின் எண்ணிக்கை. இவரது விரல்கள் தூரிகையைத் தவிர, பேனாவையும் பிடித்து அரசியல், கலை, வரலாற்று கட்டுரைகளை எழுதியுள்ளன.

கும்பகோணம் ராமசுவாமி கோயிலுக்குச் சென்றால் தூண்களில் தெய்வீக மணம் கமழும் இவரது எண்ணெய் ஓவியங்களைக் காணலாம்.

- யுவராஜ்



விரல்... புதிர்... விடை...!

போலீஸ்கமிஷனர் வைகுண்டராமன் நிஜமாகவே கனல் தெறிக்கிற கண்களோடு, ஏ.சி. கசிந்து கொண்டிருந்த ஹாலில், போலீஸ் அதிகாரிகளைப் பார்த்து ஆவேசமாய்ப் பேசிக் கொண்டிருந்தார்.

''ரெண்டு நாட்களுக்கு முன்னாடி சாலிகிராமத்தில் நடந்த கொலைச் சம்பவம் இன்னமும் ப்ரஸ், டீ.வி. மீடியாவில் சூடாவே இருக்கு... ஒரு பெண்ணைத் துண்டுதுண்டாய் நேர்த்தியாய் வெட்டி சாலிகிராமத்தில் இருக்கிற ஏழு குப்பைத் தொட்டிகளுக்குச் சீராய் சப்ளை பண்ணியிருக்காங்க... தலை இன்னும் கிடைக் காததாலே அந்தப் பொண்ணு யார்னு தெரியலை. இந்த கேஸை டீல் பண்ற டீம், இதுவரைக்கும் ஒரு உருப்படியான தகவலைக்கூட கண்டுபிடிக்கலை. இன்னைக்குக் காலையில் வந்த ஒரு பேப்பரில் என்ன நியூஸ் போட்டிருக்காங்க தெரியுமா...?'' சொன்னவர் தன் கையில் வைத்திருந்த அந்தச் செய்தித்தாளை விரித்துக் காட்டினார்.

இரண்டாம் பக்கத்தில் அந்தச் செய்தி வெளியாகியிருந்தது.

கொலை செய்யப்பட்டது யார்?

கொலையாளி யார்?

போலீஸ் திணறல்...

சென்னை போலீஸ் சிரிப்பு போலீஸாக மாறுகிறது.

அந்தப் பத்திரிகைச் செய்தியைப் படித்துவிட்டு முன்வரிசையில் உட்கார்ந்திருந்த அஸிஸ்டெண்ட் கமிஷனர் சந்தோஷ் எழுந்தார்.

''ஸார்... அது எதிர்க்கட்சிப் பத்திரிகை. அப்படித் தான் எழுதுவாங்க... இன்னும் நாலைஞ்சு நாள்ல நாங்க எல்லா உண்மைகளையும் வெளியே கொண்டு வந்துடுவோம் ஸார்''

''சரி..! இதுவரைக்கும் கிடைச்ச உண்மைகள் என்ன?''

''போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட்படி கொலை செய்யப்பட்ட பெண்ணுக்கு இருபத்தைந்து வயதிலிருந்து முப்பது வயதுக்குள் இருக்கலாம் ஸார். உடம்போட பாகங்களை ஒரு கூர்மையான ஆயுதத்தால் பிசிறில்லாமே வெட்டியிருக்கறதைப் பார்க்கும்போது



டாக்டர்கள் ஆபரேஷன் செய்யறதுக்காகப் பயன்படுத்தற கத்தியைப் பயன்படுத்தியிருக்கலாம்.''

கமிஷனர் வைகுண்டராமன் ஒரு பெருமூச்சோடு அஸிஸ்டெண்ட் கமிஷனரை ஏறிட்டார்.

''மிஸ்டர் சந்தோஷ்! நீங்க இப்ப சொன்ன ரெண்டு விவரங்களும் உடம்பை போஸ்ட்மார்ட்டம் பண்ணினதால கிடைச்சது. உங்களோட இன்வெஸ்டிகேஷன்ல என்ன உண்மைகள் கிடைச்சது? அதைச் சொல்லுங்க.''

''அது... வந்து... ஸார்...''

''எனக்குத் தெரியும்... கேஸ் அதுக்குப் பின்னாடி நகரவேயில்லை...''

''ஸாரி... ஸார்...''

''எனக்கு வேண்டியது ஸாரி இல்லை... ரிசல்ட்! உங்களுக்கு ஒரு வாரம் டைம்... அதுக்குள்ளே கொலை செய்யப்பட்ட பெண் யார் என்கிற விவரமும், கொலையாளி யார் என்கிற கேள்விக்கான பதிலையும் உங்ககிட்டயிருந்து எதிர்பார்க்கிறேன். வில்...யூ...?''

''சர்ட்டன்லி ஸார்...''

கமிஷனர் வைகுண்டராமன் மீட்டிங்கை முடித்துக்கொண்டு தன் அறைக்குத் திரும்பியபோது, அறைக்கு வெளியே

சாதுர்யா சக்ஸஸ்-2



சாதுர்யா பேசறேன்.

ஹெட்லைட் எரிவதற்குக் காரணமான டங்ஸ்டன் என்ற உலோகக் கம்பி, எரிந்து கொண்டிருக்கையில் ஹெட்லைட் உடைந்தால் வெளிக் காற்றில் உள்ள ஆக்ஸிஜன் பட்டு கறுப்பாக மாறிவிடும். அதற்கு 'டங்ஸ்டன் ஆக்ஸைடு' என்று பெயர். ஹெட் லைட் எரியாத நேரத்தில் உடைந்தால் இந்த டங்ஸ்டன் இழை எந்த மாறுதலுக்கும் உட்படாது. இளங்கோவின் கார் ஹெட்லைட்களில் இந்த இழை கறுத்திருந்தது. டேனியலின் லாரியில் அப்படியே இருந்தது. ஸோ, டேனியல் ஹெட்லைட் போடாமல் லாரியை ஓட்டி வந்திருக்கிறான் என்பதைப் புரிந்துகொண்டேன். இதைச் சரியாகக் கண்டுபிடித்து எழுதிய உங்களில் பரிசு பெறும் ஐந்து பேர் யார்னு தெரிஞ்சுக்க வட்டமேஜை பகுதியில் பார்க்கவும்.

சாதுர்யா காத்திருப்பதைப் பார்த்துச் சின்னதாய்ப் புன்னகைத்தார்.

''குட்மார்னிங் ஸார்.''

''குட்மார்னிங்...! என்னம்மா ரொம்ப நேரமா வெயிட் பண்றியா...?''

''இல்ல... ஸார்... வந்து பத்து நிமிஷம்தான் ஆச்சு... உங்ககிட்டே ஒரு ரெண்டு நிமிஷம் பேசலாமா ஸார்?''

''தாராளமாய்ப் பேசலாம்... உள்ளே வாம்மா...''

இருவரும் அறைக்குள் நுழைந்தார்கள். கமிஷனர் நாற்காலியில் சாய்ந்து கொள்ள, சாதுர்யா எதிரே விறைப்பாய் நின்றாள்.

''சொல்லும்மா... என்ன விஷயம்?''

''ஸார்..! நான் இதுவரைக்கும் டீல் பண்ணின ரெண்டு கேஸ்களிலேயும் நல்ல ரிசல்ட் கிடைச்சது... அதுக்கான பாராட்டுக்களும் எனக்கு உங்ககிட்டேயிருந்து கிடைச்சது... இப்போ மூணாவதா ஒரு கேஸை டீல் பண்ணலாம்னு இருக்கேன். அதுக்கு உங்களுடைய பர்மிஷன் வேணும்...''

கமிஷனர் மினரல் வாட்டர் பாட்டிலை எடுத்து அதனுடைய மூடியைத் திருகிக் கொண்டே கேட்டார்.

''எந்த கேஸை டீல் பண்ணப் போறே?''

''ரெண்டு நாளைக்கு முன்னால ஒரு பெண்ணைக் கொலை பண்ணி துண்டு துண்டாய் வெட்டி சாலிகிராமத்துக் குப்பைத் தொட்டிகளில் போட்டுட்டுப் போன அந்தக் கொடூரமான கேஸைத்தான் ஸார்...''

''அந்த கேஸா...? அது ரொம்பவும் காம்ப்ளிகேட்டட் கேஸ் ஆச்சே...! இப்பத்தான் ஒரு மீட்டிங் போட்டு ஏ.சி. சந்தோஷை வறுத்தெடுத்துட்டு வர்றேன். அவரே திணறிட்டிருக்கார். உன்னால அதை டீல் பண்ண முடியாதும்மா... வேற ஏதாவது ஒரு சுலபமான

கேஸை எடுத்துக்கோ... மைலாப்பூர்ல நடந்த அந்த...''

''ஸாரி... ஸார்... சவாலாய் இருக்கிற அந்த சாலிகிராமம் மர்டர் கேஸையே டீல் பண்ண விரும்பறேன். ப்ளீஸ் பர்மிட் மீ... ஸார்...!''

வைகுண்டராமன் தோள்களைச் சின்னதாய் 'ஜெர்க்' செய்துவிட்டுப் புன்னகை செய்தார்.

''ஓ.கே...! அந்த கேஸ்ல நீ இவ்வளவு இன்ட்ரஸ்ட் காட்டும்போது நான் சொல்றதுக்கு எதுவும் இல்லை. யூ...கேன் ப்ரொஸீட்...''

''மறுபடியும் ஒரு ஸாரி ஸார்.''

''இது எதுக்கு..?''

''நீங்க பர்மிஷன் தர்றதுக்கு முன்னாடியே நான் அந்த சாலிகிராமம் மர்டர் கேஸை இன்வெஸ்டிகேட் பண்ண ஆரம்பிச்சுட்டேன். அந்த இன்வெஸ்டிகேஷனில் ஒரு உண்மையையும் கண்டுபிடிச்சுட்டேன்.''

கமிஷனர் நிமிர்ந்து உட்கார்ந்தார்.

''என்ன உண்மை...?''

''கொலை செய்யப்பட்ட அந்தப் பெண் கோவைக்குப் பக்கத்தில் இருக்கிற தொண்டாமுத்தூர் கிராமத்தைச் சேர்ந்தவளாய் இருக்கலாம்.''

கமிஷனரின் வியப்பு உச்சத்துக்குப் போயிற்று.

''எப்படி அவ்வளவு உறுதியாய்ச் சொல்றே...?''


''எனக்குக் கிடைச்ச தடயத்தை வைச்சுத்தான் ஸார்...''

''என்ன தடயம்...?''

''ஸார்... நேற்றைக்கு சாயந்திரம் 'ஜி.ஹெச்'ல் மார்ச்சுவரியில் வைக்கப்பட்டிருந்த அந்தப் பெண்ணின் உடல் பாகங்களைப் பார்த்தேன். மொத்தம் ஒன்பது துண்டுகள். இதில்


அண்டாசாமி

ஊட்டியிலிருந்து கல்லட்டி வழியாக தெப்பக்காடு போகும் வழியில் பதினைந்தாவது கொண்டை ஊசி வளைவருகே ஒரு சிவன் கோயில் இருக்கிறது. படுகர் இன மக்கள் பெரிய அண்டாவில் பொங்கல் வைத்து சாமி கும்பிட பூஜை வேலைகள் ஆரம்பிக்கும்போது, திடீரென அண்டா (வெடி வைத்தால் பொருள் வீசியெறியப்படுவது போல்) எகிறி மரக்கிளையில் மாட்டிக் கொண்டதாம். எவ்வளவோ முயற்சித்தும் எடுக்க முடியாமல் பல வருடங்களாக மரத்தில் இருக்கிறது. அது இப்போது வழிபாட்டுத்தலமாகி 'அண்டாசாமி'யாக மாறிவிட்டது.



இங்கிலாந்தாக மாற்றிய பூ

குளுமையும் பசுமையும் தம் நாட்டை அப்படியே நினைவூட்டினாலும், இங்கிலாந்துக்காரர்களுக்கு ஏனோ மனம் ஒன்றாமல் தனிமை உணர்ந்தார்களாம். அதை நீக்கும் முயற்சியாகத்தான் இல்லப்பஸ் இரோனியன் என்கிற இங்கிலாந்து நாட்டு மஞ்சள் நிறப் பூச்செடிகளை எல்லா இடங்களிலும் வளர்த்தார்களாம். அந்தப் பூக்கள் தாய்நாடாக ஊட்டியை உணர வைத்தனவாம்.



துண்டான இடது கை விரல்களைப் பார்த்துட்டு இருக்கும்போதுதான் என்னோட மூளை யில் ஒரு ஃப்ளாஷ் அடிச்சது. உடனே அந்தக் கைவிரல்களை மட்டும் ஃபோட்டோ எடுத்துக்கிட்டேன். பிறகு வீட்டுக்கு வந்து அந்தத் தடயத்தை ஆதாரமாய் வெச்சு தகவல்களைச் சேகரித்த போது எனக்குக் கிடைத்த விடை, கொலை செய்யப்பட்ட அந்தப் பெண் தொண்டா முத்தூர் கிராமப் பகுதியைச் சேர்ந்தவளாய் இருக்கலாம் என்பதுதான்...!''

கமிஷனரின் ஆர்வம் கரைகடந்த வெள்ளமானது.

''சாதுர்யா...! ஆர்...யூ...மேட்...? ஒரு பெண்ணோட இடது கை விரல்களைப் பார்த்துட்டு குறிப்பிட்ட ஊரைச் சேர்ந்த வள்னு எப்படி சொல்ல முடியும்...?''

துப்பறியும் போட்டி-3

சாதுர்யா எந்தத் தடயத்தை வைத்துக் கொண்டு கொலை செய்யப்பட்ட அந்தப் பெண் தொண்டாமுத்தூர் பகுதியைச் சேர்ந்தவளாகத்தான் இருக்க வேண்டும் என்று கண்டுபிடித்தாள்? நீங்கள் கண்டு பிடிக்க உதவியாக இரண்டு க்ளூக்கள் இதோ...!

1. கட்டை விரலுக்குப் பக்கத்தில் உள்ள விரல்.
2. ஸ்யாமின் ஓவியத்திலும் ஒரு க்ளூ உள்ளது.

போஸ்ட் கார்டு எடுங்க. விடையை எழுதுங்க. 'துப்பறியும் போட்டி - 3' என்று குறிப்பிட்டு கல்கி முகவரிக்கு அனுப்புங்க. ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

கடைசித் தேதி: 22.7.09



இந்தத் தொடரில் துப்பறியும் 'சாதுர்யா' கேரக்டருக்காக 'பவானி' படத்தின் சினேகா ஸ்டில்ஸ் பயன்படுத்தப்படுகின்றன.

சாதுர்யா தன் கையோடு கொண்டு போயிருந்த ப்ரவுன் நிற கவரிலிருந்து அந்த ஃபோட்டோக்களை எடுத்துக் கொடுத்தாள்.

''ஸார்! அந்தப் பெண்ணின் துண் டாக்கப்பட்ட இடது கையையும் அத னோட விரல்களையும் க்ளோஸப்பில் எடுத்த ஃபோட்டோக்கள் மொத்தம் ஆறு இருக்கு. ஒவ்வொரு ஃபோட்டோவையும் உன்னிப்பாய்ப் பாருங்க. அந்தத் தடயம் உங்க பார்வைக்குத் தட்டுப்படலாம்...''

''ஊரோட பேரைப் பச்சை குத்தியிருக் காளா?''

''அப்படி பச்சை குத்தியிருந்தாத் தான் அஸிஸ்டென்ட் கமிஷனர் கண்டுபிடிச்சிருப்பாரே...? இது வேற ஒரு விஷயம் ஸார்...''

''ஈஸிட்...! நான் பார்த்துட றேன்...'' கமிஷனர் ரீடிங் ஸ்பெக் ஸைப் பொருத்திக் கொண்டு ஃபோட்டோக்களைப் பார்க்க ஆரம் பித்தார்.

பார்த்தார். பார்த்தார். பார்த்துக் கொண்டேயிருந்தார்...

ஒரு நிமிஷம்... இரண்டு நிமிஷம்... மூன்று... நான்கு....ஏழு...

எட்டாவது நிமிஷம் ஒரு பெருமூச்சை விட்டுக்கொண்டே களைப்பாய் சாதுர்யாவை ஏறிட்டார்.

''ஒண்ணும் பிடிபடலை யேம்மா?''

''நான் சொல்லலாமா ஸார்?''

''ம்... சொல்லு...''

சாதுர்யா சொல்ல ஆரம்பித் தாள்.

• மு.பெரியசாமி, விட்டுக்கட்டி

? **தமிழ்நாட்டில் 900 அரசுப் பள்ளிகளில் தமிழாசிரியர்கள் இல்லையாமே?**

! எதுக்குங்க தமிழாசிரியர்கள்? எல்லா பிள்ளைங்களுக்கும் தமிழ் அறிவு பெறும் உரிமையை, சட்டபூர்வமா வழங்கிட்டா ஆச்சு!

• வே.ந.கதிர்வேல், வேலூர்

? **''சில குறுகிய கால ராணுவ இலக்குகளை அடைவதற்காக, பாகிஸ்தான் தீவிரவாதிகளை வளர்த்தது என்பது உண்மைதான்'' என அந்நாட்டின் அதிபர் ஜர்தாரியே ஒப்புக் கொண்டிருக்கிறாரே?**

! உண்மையை ஒப்புக் கொண்ட வரைக்கும் மகிழ்ச்சி. ஆனால், அது மட்டும் போதாதுங்க. தீவிரவாதத்தை முற்றிலும் ஒடுக்க முனைகிறபோதே அது தன்னால் ஒடுங்கவும் வழிவகை கண்டால் பிராயச்சித்தம் செய்ததாகும். இந்தியாவுக்கு மட்டுமல்ல; பாகிஸ்தானுக்கும் அதுதான் விமோசனம்.



❖ கோட்டை விட்ட உரிமை

துரைமுருகனின் இலாகா பறிபோனது பற்றி..?

• ஜி.மாரியப்பன், சின்னமனூர்

? **''யுவராஜ் சிங், இந்திய அணியின் பேட்டிங் முதுகெலும்பு'' என்கிறாரே தோனி?**

! அளவுக்கு அதிகமான சுமையை ஏற்றி, முதுகெலும்பை முறித்து விடாமல் பார்த்துக் கொண்டால் சந்தோஷம்.

• ப.காளிதாசன், வேட்டனூர்

? **சினிமாவில், 'மதுரையில் நடக்கும் கதைகள்' வெற்றி பெறுவதாக வதந்தி பரவியுள்ளது பற்றி...?**



❖ திரியவிட்ட பால்!

! அரசியல்ல நான் அப்படியொரு வதந்தின்னா சினிமா விலுமா!

• ஜி.இந்திரா, பெங்களூரு

? **'அ.இ.மு.க. தோல்விக்கு மக்கள் காரணம் அல்ல; பணம்**

வாங்கிக் கொண்டு எதிர்க்கட்சியினரைக் கள்ளவோட்டுப் போட அனுமதித்த தமது கட்சிக்காரர்களே காரணம்' என இப்போது ஜெ. சொல்கிறாரே?

! ஏதேனும் ஓரிரு இடங்களில் அவ்வாறு நேர்ந்திருக்கக் கூடும். அதைப் பொதுப்படையாக்கி, எல்லா அ.தி.மு.க. தொண்டர்களையும் இழிவுபடுத்துவது மேலும் பல தோல்விகளுக்கு வழிவகுக்கும் தவறு. தமது கொள்கைகள், திட்டமிடல், வியூகம் அமைத்தல் போன்றவற்றில் உள்ள குறைகளை ஜெ. ஒருபோதும் ஒப்புக் கொண்டதில்லை. இது அவர் இயல்பு.

● எஸ்.ராமசாமி, வடக்கு தயிர்பாளையம் ❒

? ஆண்டு ஒன்றுக்கு ஒரு கோடியே இருபது லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படும் என்றும், 2014-ஆம் ஆண்டுக்குள் வறுமை முற்றிலுமாக ஒழிக்கப்படும் என்றும் நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி அறிவித்துள்ளாரே... சாத்தியமா?

! சரியான கொள்கையும் திட்டமிடலும் லஞ்ச-ஊழல் அற்ற சீரான அமலாக்கமும் இருந்தால் சாத்தியமே. அவை இல்லாத நிலையில், பட்ஜெட்டில் பணம் ஒதுக்கிவிட்டாலே எல்லாம் நடந்துவிடும் என்று எண்ணுவது பகற்கனவாகவே முடியும்.

● கே.கணபதி, சென்னை-11 ★

? வறுமையை ஒழிக்காமல், புவி தட்ப-வெப்ப மாறுதல் குறித்து விவாதிப்பதில் பலன் இருக்காது என்று ஜீ-8 மாநாட்டில் பிரதமர் கூறியுள்ளாரே?

! தவறான அணுகுமுறை. புவி தட்ப-வெப்ப பாதிப்புகள், வறுமையில் உள்ள நாடுகளுக்கே அதிகமான நஷ்டத்தை உண்டாக்கும். வறுமையைப் போக்குவதற்கான வழிமுறைகளை, அதற்குரிய விவாத மேடைகளில் பிரதமர் எடுத்துக்கூறி ஆதரவு பெறலாம்.

● எஸ்.அமிர்தா, சென்னை-26

? துரைமுருகனின் பொதுப்பணித்துறை இப்போது கலைஞரிடம். உங்கள் கருத்து?

! பாலாற்றின் குறுக்கே ஆந்திரத்தில் அணை உருவாவது குறித்த முதல்வரின் ஆணித்தரமான அறிக்கை, அவ்விஷயத்தில் துரைமுருகன் கோட்டை விட்டுவிட்டதை உணர்த்துகிறது.

● அ.யாழினி பர்வதம், சென்னை - 78

? டெல்லியில் மெட்ரோ ரயில் திட்டப் பாலங்கள் இரண்டாவது முறையாக இடிந்து விழுந்துவிட்டனவே?

! எதிர்பாரா விதத்திலும், யாரும் விரும்பாத போதிலும் நடப்பவைதான் விபத்துகள். ஆனால், அவை பெரும்பாலும் கவனக்குறைவினாலும் மனிதன் செய்யும் தவறுகளினாலும் நிகழ்கின்றன என்பதுதான் விபத்தைக் காட்டிலும் சோகமானது. எந்த ஒரு துறையிலும் திட்ட

❒ ரூ.150/- பரிசு பெறுபவர் :


எஸ்.ராமசாமி, வடக்கு தயிர்பாளையம்



✱ கோடிகளில் இலக்கு!



✱ ஒப்புக்கொண்ட உண்மை



✱ தேடிச் சொல்லும் காரணம்...



✱ பறக்கவிட்ட வைராக்கியம்!

அமலாக்கத்துக்கு முன்னதாக ஊழியர் களுக்கு 1. திட்டம் பற்றிய அறிவுரை, 2. பாதுகாப்புப் பயிற்சி, 3. செயல்பாடு பற்றிய பயிற்சி... ஆகியன அளிக்கப்பட வேண்டும். இனியேனும் படிப்பினை பெற்றால் சரி.

● **பி.பாலாஜி கணேஷ்,**
கோவிலாம்பூண்டி

? பகுத்தறிவு பேசும் கருணாநிதி, பால் உற்பத்தியாளர்கள் போராட்டத்தை, ''அமங்கலப்படுத்தாதீர்கள்'' என்று குறிப்பிடுவது சரியா?

! கருணாநிதி நாத்திக பகுத்தறிவுவாதியானாலும் பால் உற்பத்தியாளர்கள் பாலை வீதியில் கொட்டியது என்பது மக்களைப் பொறுத்தமட்டில் அமங்கலம்தானே. அத்துடன் நின்றிருந்தால் பரவாயில்லையே... ''ரத்தத்துக்கே பயப்படாத நான் பாலுக்கா பயப்படுவேன்?'' என்ற முதல்வரின் பேச்சு தவிர்க்கப்பட்டிருக்கவேண்டும். பாலைத் திரிய விடுவது முத்தரப்புக்கும் நல்லதல்ல.

● **பி.ஜெயபிரகாஷ், சர்கார்பதி**

? சிதம்பரம் நடராஜர் கோவிலில் ஹிந்து அறநிலையத்துறை சார்பில் மேலும் மூன்று இடங்களில் உண்டியல் வைக்கப்படுவதை, ஹிந்து கோயில் பாதுகாப்புக் குழுவினர் எதிர்க்கின் றனரே?

! வழக்கு நிலுவையில் உள்ளபோது, இந்து அறநிலையத்துறை மாற்றங்கள் செய்யலாகாது என்ற அவர்களது கோரிக்கை நியாயமானது.

● **ஜே.துரைராஜ், சென்னை-87**

? மத்திய அமைச்சர் நெப்போலியன், 'பொன்னர் சங்கர்' படத்தில் தலையூர் காளியாக நடிப்பது பற்றி..?

! படத்தில் நடிக்கமாட்டேன் என்றவர், முதல்வர் படம் என்பதால் வைராக்கியத்தை வீசி எறிந்துவிட்டார் போலும்! ''நடிப்பை மூட்டைகட்டி வைத்துவிட்டு, மத்திய அமைச்சர் பதவியை முழுமையாகக் கவனியுங்கள்'' என முதல்வராவது அறிவுரை சொல்லியிருக்கலாம்.

★ ரூ.75/- பரிசு பெறுபவர் :
கே.கணபதி, சென்னை - 11



★ தாங்கி நிற்கும் சுமை!

● **எம்.செல்லையா, சாத்தூர்**

? ''அரசியல் கட்சியான பிறகு பா.ம.க. மீண்டும் ஏன் ஜாதிச் சங்கமாகக் கூனிக் குறுகவேண்டும்?'' என்று கலைஞர் கேட்கிறாரே?

! ஜாதி சங்கங்கள், அரசியல் கட்சிகளாவதும் அரசியல் கட்சிகளுக்குள் ஜாதி சங்கங்கள் ஊடுருவுவதும் அன்றாட வாடிக்கையான பிறகு குறுகுவது எங்கே! சாதி உணர்வுகளுக்கு அப்பாற்பட்டு எந்தக் கட்சி இன்று இருக்கிறது?!

இந்திரா பார்த்தசாரதி


பி.வி.ராமகிருஷ்ணா: இயல்பான நடிப்பு

சமூகப் பிரச்னைகளை அறிவுபூர்வமாக அணுகி, புத்திசாலித்தனமான உரையாடல்களுடனும், நகைச்சுவையுடனும் நாடகங்கள் எழுதிய பெர்னார்ட் ஷாவின் படைப்பு 'பிக்மெலியன்'. இந்நாடகம் இசை நாடகமாக உலகத்தை ஒரு கலக்கு கலக்கும் என்று பெர்னார்ட்ஷாவே எதிர்பார்த்திருக்க மாட்டார். அவர் இறந்த ஐந்தாண்டுகளுக்குப் பிறகு, 1956ல், 'பிக்மெலியன்', 'மை ஃபேர் லேடி' என்று நாமகரணம் சூட்டப்பட்டு, அமெரிக்காவில், பிராட்வேயில் சக்கைபோடு போட்டது. இதன் பின், அதே பெயரில், ரெக்ஸ் ஹாரிஸன், ஆட்ரி ஹெப்பெர்ன் நடித்த திரைப்படமான போதும் அமோக வெற்றி அடைந்தது.

'பிக்மெலியன்' ஷா எழுதிய வடிவத்திலேயே 1938ல் திரைப்படமாக வந்த போது, அது ஷாவுக்கு திரைக்கதை - வசனத்துக்கு ஆஸ்கார் விருது வாங்கிக் கொடுத்ததே தவிர, (நோபல் பரிசும், ஆஸ்கார் விருதும் வாங்கிய ஒரே இலக்கிய ஆசிரியர் பெர்னார்ட் ஷாதான்) படம் பரவலாக வெற்றி பெறவில்லை!

'மை ஃபேர் லேடி'யின் வெற்றிக்குக் காரணம், இசை! 'ஆஷாத் கா ஏக் தின்' நாடகம் மோகன் ராகேஷ் எழுதியபடியே ஹிந்தியில் மேடையேற, எழுபதுகளில் பார்த்திருக்கிறேன். காளிதாஸனைப் பற்றிய ஒரு புதுப் பார்வையைத் தரும் நாடக அனுபவமாக அது எனக்கு இருந்தது. தலைமை கதாபாத்திரங்கள் உணர்ச்சிபூர்வமாக, சற்று அதிகமாகவே, வசனம் பேசினார்கள்.

"ஒரு நல்ல நாடகத்தில் 'செட்'டும் ஒரு கதாபாத்திரம்தான்."

இந்நாடகத்தில் இருக்க சாத்தியமான, இசை, நடன வாய்ப்புக்களைப் பற்றி நான் அப்பொழுது யோசித்துப் பார்க்கவில்லை. ஆனால், இப்பொழுது கௌரி ராம்நாராயண் அவற்றைப் பற்றிச் சிந்தித்து, A Day in Aashad என்கிற ஆங்கிலப் படைப்பாக வழங்குகையில், மோகன் ராகேஷின் நாடகத்துக்கு ஒரு புதிய கலைப் பரிமாணம் தந்திருக்கிறார். 'பிக்மெலியன்', என்ற ஷாவின் நாடகம், 'மை ஃபேர் லேடி' ஆகிய சாதனையோடு இதை ஒப்பிடலாம் என்று தோன்றுகிறது. காளிதாசனின் காவிய வரிகளோடு மோகன் ராகேஷின் நாடகத்தை இணைத்திருப்பதுதான் 'மாஸ்டர் ஸ்ட்ரோக்.'

கடந்த வார இறுதியில், சென்னை, சிவகாமிபெத்தாச்சி அரங்கில் மூன்று தினங்கள் இந்நாடகம் அரங்கேறியது.

நாடக ஆசிரியரின் பிரதிகளில் காணும்



மல்லிகா இப்படித்தான் இருந்திருக்க வேண்டும்...
-அகிலா ராம்நாராயண்

உரையாடல்களை நடிகர்கள் தெளிவாக உச்சரித்துக் கூறிய சொல்லாற்றல், மிக விரைவாக நடந்தேறிய காட்சி மாற்றம் ஆகியவைதான்.

அனிதாவின் நடிப்பு முகம் பிரமிப்பையும் மகிழ்ச்சியையும் தந்தது. மல்லிகா இப்படித்தான் இருந்திருக்க வேண்டுமென்ற உணர்வைத் தோற்றுவித்தார் அகிலா ராம்நாராயண். ராகேஷின் நாடகத்தில் மிகச் சாதாரணமாகத் தோன்றிய மாதுலுக்கு ஒரு புதிய பரிமாணம் தருகிறார் பி.வி.ராமகிருஷ்ணா, தம் இயல்பான நடிப்பினால்.

'ஆடிப் பருவத்தில் ஒரு நாள்'

உள்ளடங்கிய கலை இடைவெளிகளைக் கற்பனையுடன் வெளிக் கொணர்ந்து, காட்சிப் படிவங்களை நிரப்புகின்றவரே ஒரு நல்ல இயக்குநர். கௌரி இதைச் சிறப்பான முறையில் செய்திருக்கின்றார் என்பதற்கு அவரைப் பாராட்ட வேண்டும். காளிதாஸனின் 'அபிஞான சாகுந்தலம்', 'குமாரசம்பவம்', 'மேக தூதம்' ஆகிய நூல்களினின்றும் தேர்ந்த பகுதிகளை நாடகத்துடன் இசை - நடனக் காட்சி ஓவியங்களாக ஒருங்கிணைத்து, பார்வையாளர்களுக்கு ஒரு புதிய நாடக அனுபவத்தைத் தருகிறார். அஞ்சனா ஆனந்தும், ஷீஜித் கிருஷ்ணாவும் மிக அற்புதமாக ஆடியதைக் காளிதாஸன் பார்த்திருந்தானானால் அவன் மனம் குளிர்ந்திருக்கும்.

கிட்டத்தட்ட இரண்டு மணி நேரம் போனது தெரியவே இல்லை. காரணம், நாடகக் கலைஞர்களின் உயர்தர நடிப்பு, ராம்நாராயணின் சரளமான, உயிர்த்துடிப்புடன் கூடிய மொழி ஆக்கத்தில் விளைந்த

காளிதாஸனாக வரும் பாலகிருஷ்ணனும், விலோமாக வரும் வாசுதேவ் மேனனும் நடிப்புக்கு இலக்கணம் வகுக்கிறார்கள்.

''ஒரு நல்ல நாடகத்தில், 'செட்'டும் ஒரு கதாபாத்திரம்'' என்பார் பீட்டர் ப்ரூக். மைக்கேல் முத்துவின் கை வண்ணத்தில் அது இந்நாடகத்தில் நிறைவேறி உள்ளது.

காளிதாஸனின், 'ரிதுசம்ஹாரத்'தில் வரும் வரிகள்:

'தொடக்கம், முடிவு என்று
ஏதுமில்லை.
எல்லாமே வட்டச் சுற்று
பகல் இரவைத் தொடர்கிறது,
இரவு பகலைத் தொடர்கிறது.
விதையைத் தொடர்வது மரம்,
மரத்தைத் தொடர்வது விதை.
மனிதனுக்கு இதுவே ஆறுதல்'.

இந்நாடகத்துடன் இதைத் தொடர்புபடுத்தி அர்த்தம் காண முடியும். ●

"எனக்கு ஏரியாவும் புதுசு. பிரச்னைகளும் புதுசு. இருந்தாலும் இந்தக் குறுகிய காலத்துக்குள் என் கவனத்துக்கு வந்தவற்றில் முன்னுரிமை கொடுத்து சிலவற்றைத் தீர்க்க முனைந்து நடவடிக்கை எடுத்து வருகிறேன்" என்கிறார் நீலகிரி பாராளுமன்றத் தொகுதி உறுப்பினரும் மத்திய அமைச்சருமான ராஜா. நீலகிரி மாவட்ட ஸ்பெஷலுக்காக அவரைச் சந்தித்தபோது...

"பிரசாரத்தின்போது பெரும்பாலானவர்கள், 'எப்படியாவது ஹிந்துஸ்தான் ஃபோட்டோ ஃபிலிம் தொழிற்சாலையை மீண்டும் சீர்திருத்திச் செயல்பட வையுங்கள்' என்று சொன்னார்கள். அது நவீனத் தொழில்நுட்பத்துடன், இப்போதைய தேவைக்கேற்ப செயல்பட வேண்டுமானால், 300 கோடி ரூபாய் தேவை. இதற்காக பொதுத்துறை நிறுவனங்கள் மீட்பு அமைப்பு மூலம் தேவையான நிதியைப் பெற முயற்சி செய்து வருகிறேன். அதற்குள் இடைக்கால ஏற்பாடாக, கையில் இருக்கும் 67 கோடி ரூபாய் ஆர்டரைச் செய்து முடிக்க, நிறுவனத்துக்கு 30 கோடி தேவை. கனரகத் தொழிற்சாலைகள் அமைச்சகத்தின் மூலம் இதற்காக நிதி ஏற்பாடு செய்யும் முயற்சியில் இறங்கியுள்ளேன். ஒரு நிலையான ஏற்பாடாக, மாநில அரசையும் சேர்த்துக் கொண்டு கூட்டுத் துறை நிறுவனமாக இந்தத் தொழிற்சாலையை மாற்றும் யோசனையும் பரிசீலனையில் இருக்கிறது. பெரிய நிறுவனமான விஸ்கோஸ் ஆலை, மாசுக் கட்டுப்பாடு விதிகளுக்கேற்ப கழிவுநீரை பவானி ஆற்றில் விடாமல் இருக்க மாற்று ஏற்பாடுகள் செய்து கொள்ளவேண்டும். முதலில் மூடியிருக்கும் தொழிற்சாலைகளைத் திறப்பதற்கு எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளப் போகிறேன்.

தேவை 300 கோடி!

மாவட்ட மருத்துவமனையை மேம்படுத்துவது குறித்தும் யோசனை இருக்கு. இங்கு பணியமர்த்தப்படும் டாக்டர்கள் சேர்ந்தவுடனே விடுப்பில் சென்று விடுகிறார்கள். உள்ளூர் டாக்டர்களையே இங்கே போஸ்டிங் போட வேண்டும் என்று தமிழக அரசிடம் கேட்டுக் கொண்டிருக்கிறேன். ஆறு கோடி செலவில் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் வாங்குகிறோம். மூன்று ஆம்புலன்ஸ் ஏற்பாடு செய்திருக்கிறேன்.

மழை சரியாக இல்லாவிட்டால் கோடைக்காலத்தில் குடிதண்ணீர் தட்டுப்பாடு வரும் என்கிறார்கள். எந்தச் சவாலையும் சமாளிக்கும் வகையில் குடிநீர் வடிகால் வாரியத்திடம் திட்டங்களைப் போடச் சொல்லியிருக்கிறேன். அவினாசிக்கு அத்திக்கடவு தண்ணீரைக் கொண்டு போகும் திட்டமும் இருக்கு. அங்குள்ள 800 குளம் குட்டைகளுக்கு நீரைக் கொண்டு சென்றாலே நிலத்தடி நீர் உயரும். இதற்கு மாநில அரசிடமிருந்து 75 சதவிகிதமும் மத்திய அரசிடம் 25 சதவிகிதமும் நிதியுதவி கேட்டிருக்கிறோம்.

மருத்துவக் கல்லூரி உட்பட பல துறை கல்லூரிகள் கட்ட மக்கள் மனு கொடுக்கிறார்கள். முதலில் மாவட்டத்தின் தேவைகளைக் கணக்கெடுக்கிறேன். சமீபத்தில் கோழிக்கல் என்ற இடத்தில் உள்ள அரசு



- மத்திய அமைச்சர் ராஜா

கலைக் கல்லூரிக்கு, கட்டடம் கட்ட இரண்டு கோடி கேட்டார்கள். ஒரு நிறுவனத்திடமிருந்து நிதியாகப் பெற்றுக் கொடுக்க இருக்கிறேன். சத்தியமங்கலத்தில் சப்-கோர்ட் கொண்டு வந்து விட்டோம். கோவை - ஊட்டி மாற்றுப் பாதை (கோத்தகிரி வழியாக), ஆய்வு நடக்கப் போகிறது.

மாவட்டத்தின் முக்கியப் பிரச்னை தேயிலை விலை மற்றும் தோட்டத் தொழிலாளர்கள் பிரச்னைகள். கிலோ இரண்டு ரூபாய் விற்ற பச்சைத் தேயிலை இன்று 15 ரூபாய் விற்கிறது. முன்பு ஏழு வியாபாரிகள் குன்னூரில் உட்கார்ந்து கொண்டு விலை நிர்ணயம் செய்து விவசாயிகளின் வயிற்றில் அடித்து வந்தார்கள். இப்போது தேயிலை வியாபாரத்தில் மின்னணு வர்த்தகம் நடக்கிறது. உலகெங்கிலும் இருந்து ஆர்டர்கள் வருகின்றன. நல்ல விலை கிடைக்கிறது. அதே போல் தோட்டத் தொழிலாளர்களுக்கு, விவசாயத் தொழிலாளர்கள் போல அரசின் எல்லா உதவிகளும், தொகுப்பு வீடுகள் உட்பட - போய்ச் சேருவதற்கு ஒரு சட்டத் திருத்தம் தேவை. முதல்வர் கலைஞர் உடனடியாக அதற்கு இசைவு தெரிவித்திருக்கிறார். இந்தத் திருத்தம் வந்தால், தோட்டத் தொழிலாளர்களுக்குப் பல பிரச்னைகள் தீர்ந்துவிடும்'' என்கிறார் ராஜா.

- ப்ரியன்

"முன்பு ஏழு வியாபாரிகள் குன்னூரில் உட்கார்ந்து கொண்டு விலை நிர்ணயம் செய்து விவசாயிகளின் வயிற்றில் அடித்து வந்தார்கள்"



ஒருநாள் துவாதசியன்று சந்திரபாகா நதியில் நீராடிக்கொண்டிருந்த சில அந்தணர்களின் காதுகளில் சோக்காமேளரின் உரத்த குரல் கேட்டது. தம் மனைவியிடம்தான் பதற்றத்துடன் பேசிக் கொண்டிருந்தார் சோக்காமேளர்.

''அடடா, பாண்டுரங்கர் வரும் நேரமாகிவிட்டதே. சீக்கிரமாகச் சமையலைச் செய்துமுடி. அவர் இங்கு வருவது வேறு எவருக்கும் கிடைக்காத பாக்கியம். அவரை ஒரு கண நேரமும் காக்க வைக்கக் கூடாது.''

இதைக் கேட்ட அந்தணர்கள் தங்களை அவமதிக்கவே சோக்காமேளர் இப்படிக் கூறியதாக நினைத்தனர். அரசனிடம் புகார் கூறினர்.



வீங்கிய கன்னத்துடன் விட்டலன்!


அன்று மாலையே சோக்காமேளரை அரண்மனைக்கு வரச் செய்தான் மன்னன். ''பாண்டுரங்கன் உன் வீட்டுக்குச் சாப்பிட வருவதாக இவர்கள் எதிரே கூறினாயா?'' என்றான்.

''ஆம்'' என்றார்.

சோக்காமேளர் பொய் கூறுவதாக முடிவெடுத்த மன்னன் அவரை பசுநிரைக் காட்டில் தள்ளுமாறு உத்தரவிட்டான்.

அந்தக் காட்டில் காளைகளும் பசுக்களும் வெறியோடு திரிந்தன. சேவகர்கள் சோக்காமேளரை அங்கு போட்டுவிட்டுத் திரும்பியதும் விபரீதம் தொடங்கியது. காளைகள் பெரும் ஒலி எழுப்பியபடி ஒருசேர அவரை முட்டவந்தன. யாரையுமே நடுநடுங்க வைக்கக்கூடிய அந்த நிலையிலும் சோக்காமேளர் இதுபற்றிக் கவலைப்படவில்லை. 'பாண்டுரங்க விட்டல, பண்டரிபுர விட்டல' என்று தன்னை மறந்து பஜனை செய்யத் தொடங்க, முட்ட வந்த மாடுகள் சட்டென நின்றன. பாண்டு

தீராத விளையாட்டு விட்டலன்



ரங்க பஜனை அமுதத்தில் மயங்கி நின்றன.

வேறொரு அற்புதத்தையும் நடத்திக் காட்டத் தீர்மானித்தான் விட்டலன்.

வேறொரு துவாதசி. வழக்கம் போல உணவருந்த வந்த கண்ணன் ''சோக்கா, நாம் வெளியில் அமர்ந்து சாப்பிடலாமே'' என்றான்.

வேப்பமரம் ஒன்றின் கீழ் கண்ணனும் சோக்காமேளரும் அமர்ந்து சாப்பிடத் தொடங்கினார்கள். இந்தக் கண்கொள்ளாக் காட்சியைப் பார்த்து வியந்துபோய் சற்றுத் தொலைவில் நின்று கொண்டிருந்தார் ஓர் அந்தணர். 'கண்ணனுக்குத்தான் எத்தனை பெருந்தன்மை. சோக்காமேளனுடன் கூடச் சாப்பிடுகிறாரே!'

அப்போது மரத்தின்மீது அமர்ந்த காகங்கள் கண்ணனைப் பார்த்துக் குரல் கொடுக்கத் தொடங்கின. சோக்காமேளருக்கோ வேறு கவலை. இருக்கும் ஓரளவு உணவை கண்ணன் காக்கைகளுக்கு அளித்துவிட்டால் அவன் பசியாக இருக்க நேரிடுமே! எனவே அவற்றை விரட்ட முயற்சித்தார். அப்போது மனைவி எடுத்து வந்த தயிர்ப் பானையில் அவரது கை வேகமாகப்பட, அதிலிருந்து சிந்திய தயிரின் ஒரு பகுதி கண்ணனின் பீதாம்பரத்தின்மீது தெறித்தது.

பிரமிப்பில் திக்குமுக்காடிய சோக்காமேளர் ''எனக்கா இந்தப் பாக்கியம்'' என்று உணர்ச்சிப்பெருக்கில் தடுமாறினார்.

இதைக் கண்டதும் சற்று தொலைவிலிருந்த அந்தணருக்குக் கோபம் பொங்கியது. 'விட்டலனின் வஸ்திரத்தைக் களங்கப்படுத்திவிட்டாரே!'

வேகமாக சோக்காமேளரை நெருங்கிய அந்தணர், அவரது இடது கன்னத்தில் அறைந்தார்.

அந்த அந்தணர் பாண்டுரங்க ஆலயத்தில் அர்ச்சகரும்கூட. அன்று பிற்பகல் சன்னிதிக் கதவைத் திறந்த அவருக்குப் பேரதிர்ச்சி. அங்கிருந்த பாண்டுரங்கர் சிலையில் இடது கன்னம் வீங்கி

14 அருண் சரண்யா

அபங்க அமுதம்

தன்யதே ஸபாக்யநர ஆணிநாரீ
கரிதாதீ வாரீ பண்டரீசீ
தயாசே சரணீ மாஜா தண்டவத
ஜே நேமே மாஜ்யா காத விடோபாஸீ
திவாளீ தஸரா அவகே பர்வகாள
நாந்ததீ ஸகள தயா கரீம்
சோகாம்ஹணே தன்ய தன்யதோ ஸம்ஸாரீ
நேமே கரிதீ வாரீ பண்டரீசீ!!

- பக்த சோக்காமேளர்

"பண்டரிபுரத்துக்கு வாரகரீ யாத்திரை செல்லும் பாக்கியமுள்ளவர்கள் மிகவும் அதிர்ஷ்டசாலிகள். அவர்களை நமஸ்கரிக்கிறேன். எல்லா தினமுமே அவர்களுக்கு தீபாவளிதான், தசராதான். அவர்கள் வீட்டில் அனைத்துச் செல்வங்களும் உள்ளன. நியமத்துடன் பண்டரிபுரத்துக்கு வாரகரீ யாத்திரை செல்பவர்கள் உலகில் மிகப் பேறு பெற்றவர்கள்."

யிருந்தது. பீதாம்பரத்தில் தயிர் சிந்தியிருந்ததற்கான அடையாளம் புலப்பட்டது.

நொடிப்பொழுதில் அந்தணருக்கு உண்மை விளங்கியது. சோக்காமேளரின் உயர்வை உணர்ந்து கொண்டார்.

விட்டலனின் முன் விழுந்து, "என்னை மன்னித்துவிடு. உன் முகத்தைப் பழையபடி அதே பொலிவுடன் நான் காணவேண்டும் விட்டலா" என் வேண்டினார். பலன் இல்லை. வீங்கிய கன்னம் வீங்கியதுதான்! சிந்தித்த அந்தணர், வேகமாக வெளியேறி சோக்காமேளரின் குடிலை அடைந்தார்.

அவரது கைகளைப் பற்றிய அந்தணர், விட்டலனின் ஆலயத்துக்குள் அழைத்து வந்தார்.

பிரமிப்பில் திக்குமுக்காடிய சோக்காமேளர், "எனக்கா இந்தப் பாக்கியம்?" உணர்ச்சிப்பெருக்கில் வார்த்தைகள் தடுமாறின.

"ஐயா, நீங்கள்தான் பண்டரிபுரத்தின் பாக்கியம். என்னை மன்னித்துவிடுங்கள்" என்று வேண்டினார் அந்தணர். அடுத்த நொடியே, விட்டலனின் வீங்கிய கன்னம் சகஜ நிலைக்குத் திரும்பியது.

பக்திப் பெருக்கில் மற்றும் ஒரு அபங்க அமுதத்தை வெளிப்படுத்தினார் சோக்காமேளர். 'கரும்பு வளைந்திருக்கிறது. ஆனால் அதன் சாறு கசப்பதில்லை. வில் வளைந்திருக்கிறது. ஆனால் அதன் அம்பு வளைந்து செல்வதில்லை. நதி வளைந்து நெளிந்து செல்கிறது. ஆனால் அதன் நீர் உப்பாக இருப்பதில்லை. சோக்காமேளாகிய நான் பலவிதங்களில் கூனன்தான், குறை உள்ளவன்தான். ஆனால் விட்டலா, உன் மீதுள்ள எனது பக்தி குறையற்றது என்பதை உணர்ந்துகொண்டாயே' என்று கதறினார்.

உணர்ந்துகொண்டது மட்டுமல்ல; பிறருக்கு உணர்த்தியும் விட்டானே விட்டலன்!

சோக்காமேளர் விஷயத்தில் நடந்தது போலவே விட்டலனின் திருமேனியில் மாற்றம் கண்ட சம்பவம் புரந்தரதாசர் விஷயத்திலும் நடந்தது. புரந்தரதாசர் என்பது அவரது இயற்பெயர் அல்ல. பின் எப்படி அவர் புரந்தரதாசர் ஆனார்? அதற்கு ஒரு சுவாரஸ்யமான பின்னணி உண்டு. தம் மனைவி லட்சுமியுடன் அவர் திருப்பதியில் தங்கி வேங்கடவனைப் பாடி மகிழ்ந்து கொண்டிருந்த போது உருவானது அந்தப் பின்னணி.

வண்ணப்படம்:
வேதா
படம்: **ஸ்ரீஹரி**



சினிமாவில் நடிக்கும் ஆசையுடன் சென்னைக்கு வரும் நாயகன், ஒரு கொலை சம்பந்தப்பட்ட விஷயத்தில் தன்னை அறியாமல் சிக்கி, தப்பிக்கப் போராடும் கதை - வாமனன்.

சுப்பிரமணியபுரத்தில் தாடியும் அழுக்குமாக வந்த 'ஜெய்' இதில் எடுத்திருப்பது ஸ்மார்ட்+ஜாலி அவதாரம். இவருடன் சேர்ந்து சந்தானம் முதல் பாதி வரை படத்தைக் கலகலப்புடன் கொண்டு செல்கிறார். நாயகியாக புதுமுகம் பிரியா (கோடம்பாக்க நியதிப்படி) வந்து போகிறார். இதற்கு மேல் எதிர்பார்க்கக் கூடாது.

லக்ஷ்மிராய் கொலைக்குப் பிறகு 'ஜெய்'தான் ஓடுகிறார். பார்க்கும் நமக்கு சலிப்பு ஏற்பட்டு விடுகிறது. ஏகப்பட்ட லாஜிக் பொத்தல்கள். மிகப் பெரிய போதை கடத்தல் கும்பலை 'எல்' போர்டு பிக்பாக்கெட் போல காட்டுகிறார்கள். க்ளைமாக்ஸில் நடக்கும் துப்பாக்கிச் சண்டை சிரிப்பைத்தான் வரவழைக்கிறது. போலீஸ் காவலில் இருக்கும் லக்ஷ்மிராய் வீட்டுக்கு, ஜெய் சர்வசாதாரணமாக வந்து போகிறார்.

'ஏதோ செய்கிறாய்...' பாடல் மனத்தை ஏதோ செய்கிறது. மற்றவை இந்தக் காதில் நுழைந்து அந்தக் காது வழியே போய்விடுகிறது. இதோ வரப் போகிறது, அதோ வரப் போகிறது என எதிர்பார்க்கும் விஸ்வரூபம் கடைசி வரையில் கதையில் வராததால் ஏமாற்றத்துடன் வெளியே வரவேண்டியுள்ளது.

வாமனன் - விஸ்வரூபம் கம்மி!

- யுவராஜ்



அம்மாவின் இருப்பிடம்

தவமுதல்வன்



நல்லாத் தூங்கிப் போயிட்டேன். இன்னும் செத்த நேரம் கண்ணசந்து தூங்கியிருக்கக் கூடாதான்னு தோணுது. நான் நெனைச்சு என்ன பண்ண..? ரோடு குண்டும் குழியுமா இருந்தா வண்டி தூக்கித் தூக்கிப் போடத்தானே செய்யும். எப்போ முழிப்பு வந்திச்சோ அப்பவே வெளையாட்டு மைதானம் கண்ணுல வந்து ஒட்டிக்கிச்சு. ஜன்னலுக்கு வெளியே எட்டிப் பார்க்கிறேன். பஸ் கருவேலங் கொளத்தத் தாண்டிப் போய்க்கிட்டிருந்திச்சு. முன்னெல்லாம் கண்ணுக்கெட்டிய தூரம் மறுகரையே தெரியாம தண்ணி நெறஞ்சு கெடக்கும். கருவேல மரமெல்லாம் கழுத்த நீட்டிக்கிட்டு நிக்கும். கொக்கு, நாரை கூட்டம் கூட்டமாப் பறக்க அதை வேடிக்கை பார்க்க எனக்கே அதிசயமா இருக்கும். ஆனால் கொளந்தான் இப்ப கிரிக்கெட்டு மைதானம்... பார்க்கவே வெறுப்பா இருக்கு. இனி எங்க ஊரு போயி அந்த மைதானத்துல முழிக்கிற வரை கையும் ஓடாது காலும் ஓடாது. கண்டக்டர் ஸ்டாப்பில நிறுத்தும் போதெல்லாம் கோவம் கோவமா வருது. இன்னும் அரைமணி நேர மாவது ஆகும். என்ன பண்ண? கண்ணை மூடிக்கிட்டுத் தூங்க சீட்டுக் கம்பியில சாஞ்சேன்.

''எம்பா... தம்பி... பனங்குளம் வந்தாச்சு எறங்குப்பா... நல்லாத் தூங்குறியே...?'' கண்டக்டர்.

பஸ்ஸை விட்டு இறங்கின உடனேயே என்னோட படிச்ச பசங்களெல்லாம் டீக் கடை பெஞ்சுல ஒக்காந்து இருந்ததைப் பார்த்திட்டேன்.

''டேய் வாடா குமாரு... எம்புட்டு நாளாச்சு பார்த்து. பரீட்சையெல்லாம் நல்லா எழுதியிருக்கியாடா?'' என்றான் ஒருவன்.

''ம்...'' பேச வரமாட்டேங்குது.

''இவ்வளவு நாள் கழிச்சு வந்திருக்க... என்னடா பேசக் கூட மாட்டேங்கிறே?'' - இது இன்னொருவன்.


''இல்லடா பஸ்ல வந்த களைப்புடா... அப்புறம் பேசிக்கலாம், நான் வரட்டுமா?''

அவதி அவதியா பக்கத்து வீட்டு ரவியோட யமஹாவில ஏறிக்கிறேன்.

போகும்போது எதுக்கால வர்றவுகள்லாம் என்னையத் திரும்பித் திரும்பிப் பாக்குறாக... கணக்கா அடையாளம் கண்டவுக மட்டும் கையைக் காட்டி அவுக அன்பை வெளிப்படுத்துறாக.

ரவி என்னை வீட்டுல கொண்டு போய் விடுறான்.

அப்பா, சித்தி, பக்கத்து வீட்டுக் காரங்க எல்லாம் விசாரிச்சு முடிஞ்சாச்சு. எம் மனசுதான் எதுலேயும் ஒட்டல. ''டேய் பஸ்ல வந்தது பயணக் களைப்பாயிருக்கும். குளிச்சிட்டு சாப்பிட்டுத் தூங்கு. அங்க இங்க சுத்தாத. நா கொல்லைக்குப் போயிட்டு வாரேன்.'' கடுகடுப்பா சொல்லிட்டுப் போறார் அப்பா. பஸ்ஸை விட்டு எறங்கினதும் என் ஃபிரண்டுக எங்கிட்ட பேசினப்ப அவங்க மொகத்துல இருந்த சந்தோஷம்கூட என் அப்பா மொகத்துல காணம். 'ச்சே... என்னா



மனுஷன்' எனக்குள்ள நொந்துக்கிறதைத் தவிர வேற என்ன செய்ய முடியும்? பேசாம மைதானத்துக்கே போய்ட்டேன்.

''டேய் வாடா... வாடா... நல்லாயிருக்கியா... பரீட்சையெல்லாம் நல்லா எழுதியிருக்கியா...?'' எல்லாரும் ஒட்டுமொத்தமா கேக்கிறாக. என்னையும் வெளையாடக் கூப்பிடுறாக. ''இல்லடா நான் சும்மாதான் வந்தேன். நீங்க வெளையாடுங்க. நான் பார்த்துக்கிட்டு இருக்கேன்'' என்றேன்.

மைதானமே இரைச்சலா இருக்கு. ரொம்ப மும்முரமா எல்லாரும் வெளையாடுறாக. நான் மட்டும் மைதானத்தோட நடு எடத்தையே பார்த்துக்கிட்டிருக்கேன். அவங்கள்லாம் வெளையாண்டு முடிச்சு களைச்சு, ''டேய் வாடா போலாம்''னு என் முதுகுல தட்டினதும்தான் எனக்கு அவங்க நெனப்பே வந்துச்சு.

வீட்டுக்கு வந்து திண்ணையில் படுத்தேன். வெளியில ஏறுவெயிலாயிருந்தது. சுவத்துல தொங்குற என்னோட பள்ளிக்கூடத்து குரூப் ஃபோட்டோவைப் பாக்குறேன். மைதானத்துல வெளையாண்டவங்கள்லாம் கால்சட்டையோட நிக்குறாங்க. எந் தலையில தேச்சிருந்த வேப்பெண்ணெய் மூஞ்சியெல்லாம் வழிஞ்சிக்கிட்டிருக்கு. சர்க்கஸ் கோமாளி மாதிரி

மூஞ்சியெல்லாம் பவுடர் வேற. அந்தப் படத்தைப் பார்க்கும்போதெல்லாம் என்னோட அம்மா எங்கூடவே இருக்கிற மாதிரி இருக்கும். ''மொட்ட வெயில்ல சுத்தாத தங்கம்... ஒனக்கு ஏதாவது சவுரியமில்லாம போச்சுன்னா அம்மாதானே சிரமப்படுவேன்'' இப்படிச் சொல்லிக்கிட்டே வேப்பெண்ணெயை தேய்ச்சுவிடும். காலையில எந்திரிச்சு ராத்திரி தூங்குற வரைக்கும் குமாரு குமாருதான். ஒரு நாளைக்கு நூறு தடவையாவது கூப்பிட்டுரும்.

கொஞ்ச நேரம் என்னை விட்டுட்டு இருக்காது. அதுக்கா போதும்ங்கிற வரைக்கும் எந்தச் சோலின்னாலும் கூடவே இருந்து பார்த்து ஏதாவது சொல்லிக்கிட்டே இருக்கும். ராத்திரியானா அம்மாவோட கொடங்கையிலதான் சுருண்டு படுத்துக்குவேன்.

வீட்டுக்குள்ள அப்பாவும் யாரோ ஒரு பொம்புள ஆளும் பேசிக்கிற பேச்சும், சிரிப்பும் கேட்டுக்கிட்டேயிருக்கும். சில நாள்ல அம்மா செருமி அழுகுறதைப் பார்த்திருக்கேன். எங்கூட படிக்கிற பசங்களோட அப்பால்லாம் அவங்களை ஆசை ஆசையாக கையப் பிடிச்சு கடைத்தெருவுக்கு... திருவிழாவுக்கு கூட்டிப் போறதையும் சிரிச்சுப் பேசுறதையும் பார்த்திருக்கேன். ஆனா என்னோட அப்பா காதைப் பிடிச்சித் திருகுவதையும்... புளியங்குச்சியாலே தொரத்தித் தொரத்தி அடிக்கிறதும்தான் எனக்கு நடந்துச்சு. சரி, நான்தான் குறும்புக்காரன்னு கூட சொல்லிக்கலாம். அம்மா என்ன பாவம் செஞ்சா? அப்பா வீட்டுக்குள்ள நொழைஞ்சா போதும்; அம்மா வீட்டுக்குள்ள இருக்கிற இடமே தெரியாது. அப்பாவோட மொகத்தை அம்மா நிமிர்ந்து பார்த்ததை நான் ஒருநாள்கூட பார்த்ததே கிடையாது.

ஒருநாள் ஏதோ தைரியத்துல ஏதோ ஒரு வார்த்தையை அம்மா பேசிட்டா. பெல்ட்டை உருவி பலங்கொண்ட மட்டும் துரத்தித் துரத்தி அடிச்சார். அக்கம்பக்கத்து வீட்டுக்குள்ளேயெல்லாம் ஓடி ஒளிஞ்சும் விடல... களைப்பு வர்ற அளவுக்கு அடிச்சிட்டு, 'இனிமே நீ வீட்டுல இருக்கப் படாது'ன்னு அப்பா சொல்லிருச்சு.

அம்மாவுக்கு மொகம், முதுகெல்லாம் காயமாகி ரத்தம் வழிஞ்சிச்சு. அன்னைக்குப் பூரா பக்கத்து வீட்டிலேயே இருட்டுற வரைக்கும் அழுதுக்கிட்டிருந்திச்சு.

அதுக்குப் பிறகு அம்மாவைப் பார்க்க முடியல. அப்பாவோட மொகத்துல சந்தோஷத்தைப் பார்க்கணுமே, அடுத்த ஒரு மாசம் கூட முழுசா முடியலை... சித்தி நிரந்தரமா வீட்டுல தங்கிருச்சு.

ஒருநாள் மத்தியானம் சாப்பிட்டுட்டு, பள்ளிக்கூடம் முன்னால வெளையாடிக்கிட்டிருந்தேன். எங்கிளாஸ் செல்லபாண்டி வந்து சொன்னான், எங்கம்மா... பேய் இருக்கிற புளியமரத்துக்கிட்ட நிக்குதுன்னு. எனக்கு திக்குன்னு ஆயிருச்சு.

மத்தியான 'உரிமை' நேரத்துல அங்க நின்னா பேயடிச்சிடாதா? அம்மாவை நெனைச்சு மரத்துக்கிட்ட ஓடினேன். கலங்கின கண்ணோட அம்மா நின்னுக்கிட்டிருந்திச்சு. என்னை அப்படியே தூக்கி முத்தம்



கொடுத்துச்சு.

எனக்குப் பிடிச்ச கம்மரக்கட்டு... தேன் மிட்டாய்... கடலை மிட்டாய்... எள் ளுருண்டை... வாங்கி வந்த எல்லாத்தை யும் எடுத்துக் கொடுத்து, நான் திங்கிறதைப் பார்த்துக்கிட்டேயிருந்திச்சு.

'என்னைப் பார்த்த விஷயத்தை அப்பா கிட்ட சொல்ல வேண்டாம். தெரிஞ்சா உன்னையும் அடிப்பாரு'ன்னு சொல்லிட்டு அழுகையோட போயிடுச்சு.

நான் புளியமரத்தோட உச்சியைப் பார்க் கிறேன். பேயைக் காணோம். ஆனாக்கூட எனக்குள்ள ஏதோ பயம் வர ஓடிவந்திட் டேன். அப்புறம் மறுசெழமைதான் அம்மா வைப் பார்த்தேன். தீனிச் சாமானோட வந்து நிக்கும். என்னை வாரி அணைச்சு மடியில தூக்கி வச்சிக்கிட்டு எடுத்துக் குடுக்கும். மரத்தோட வேர்லதான் சாஞ்சு ஒக்காந்திருக் கும். மரத்த நாலைஞ்சு பேரு சுட்டிப் பிடிச்சாக் கூட முடியாது. பெரிய மரங்கிற தால அந்தப் பக்கம் நிக்கிறத, இந்தப் பக்கம் நிக்கிறவுக பார்க்க முடியாது. இருந் தாலும் அம்மா அப்பப்ப எட்டிப் பார்த்துக் கும். அந்த மரத்துல தூக்குப் போட்டுக் கிட்டு தொங்குன மாரியம்மா ஊரையே பயமுறுத்திக்கிட்டிருந்திச்சு. அந்த மரத் தைக் கண்டு ஊரே பயந்து கெடக்க, நானும் அம்மாவும் மட்டும் மரத்தோட வேர்ல கெடந்தோம். எல்லா நேரமும் புளியமரத்து நெனப்போடயே இருந்தேன். கண்ணுக் குள்ளே மரமிருந்தது. ஆனா அம்மா வர்றது தான் திடீர்னு நின்னு போச்சு.

அம்மா, சில நாள் செருமி அழறதைப் பார்த்துப் பதறியிருக்கேன்!

எனக்கு அதுக்குப் பிறகு உலகமே இருண்டு போன மாதிரியாகிப் போச்சு. பொழுது விடிஞ்சு பொழுது சாய்ற வரைக் கும் புளியமரமே கதியா கெடந்தேன். அப்பா கூட, 'பேய் அடைஞ்சு கெடக் கிற புளியமரத்துக்கிட்ட என்னடா வேலை'ன்னு அதட்டினாரு. எனக்கு ஊர்ல இருக்கவே புடிக்கல.

டவுனுக்குப் போய் ஹாஸ்டல்ல தங்கிப் படிக்கறேன்னு அழுது அடம்புடிச்சு காலேஜ் வரைக்கும் போய்ட்டேன்.

இன்னிக்கு வருஷம் நெறைய ஓடிப் போச்சு. ஃபைனல் இயர் பரீட்சையெல் லாம் முடிஞ்சு ஊருக்கு வந்ததுல புளிய மரத்தைக் காணோம். மைதானம்தான் தெரியுது. பள்ளிக்கூடம் மாடியா வளர்ந்து நிக்குது. பரீட்சை ரிசல்ட்டும் வந்திருச்சு. டவுன்ல அப்பாவுக்குத் தெரிஞ்ச எலெக்ட் ரானிக் கடையில சேல்ஸ்மேன் வேலையும் கிடைச்சிடுச்சு.

இவ்வளவு பெரிய மனுஷனா வளர்ந்து நிக்கிற என்னை அம்மா இருந்து பார்த் திருந்தா... என்னையறியாமலேயே கண் ணீர் வருது.

அப்பா... சித்தி... பக்கத்து வீட்டாரெல் லாம் புத்திமதி சொல்லி பயணம் அனுப்பு கின்றனர். யார் முகத்தையும் பார்க்க முடி யல. ரவியோட யமஹா பைக்குல சூட்கேஸ் பெட்டியுடன் ஏறிக்கிறேன்.

ஆரம்பப் பள்ளியின் காம்பவுண்ட் வந்த வுடன் நிறுத்தச் சொல்றேன். நான் நடந்தே வருவதாகச் சொல்ல, அவன் எவ்வளவோ கெஞ்சியும் அவனை அனுப்பிவிட்டு அங் கேயே நின்று மைதானத்தைப் பார்த்தேன். மைதானத்தின் நடுவில் அந்தப் பேய்மரம் எனக்குள்ள தெரியுது. அம்மா கை காட்டிக் கொண்டு நிக்குது. அம்மா சிரிக்குது; அழுகுது. அது சந்தோஷத்தின் அழுகையா எனக்குத் தோணுது. எனக்கும் சந்தோஷமா கண்ணீர் வருது. ●

கலக்கும் இளசுகள்!


* அரவிந்த்


* அனுப்ரியா

"எனக்கு நடப்பதே ஒரு கட்டத்தில் மறந்து விட்டது. அந்த அளவுக்கு ஓடினேன், ஓடுகிறேன், ஓடிக் கொண்டே இருப்பேன்'' என்று நம்மிடம் பேசும்போதும் அரவிந்த்குமாரின் கால்கள் அலைந்து கொண்டேயிருந்தன.

கோவையைச் சேர்ந்த இந்த இளம்புயலின் ஸ்பெஷல்... தொடர் ஓட்டம்.

''ரொம்பவும் த்ரில்லிங்கான போட்டி இது. எனது பார்ட்னர் என்னிடம் ஓடிவந்து ரிலே பேட்டனைத் தந்து நான் எனது ஓட்டத்தை ஆரம்பிக்கும் வரை ஒரே பதற்றமாக இருக்கும். என்னுடைய படுவேகமான ஓட்டத்தால் பார்ட்னர் கொஞ்சம் முன்பின்னாக வந்தாலும் அதை அட்ஜஸ்ட் செய்து முதலிடத்தைப் பெற்று விடுவேன்'' என்கிறார்.

தொடர்ந்து ஆறு முறை மாவட்ட அளவிலும், நான்கு முறை தேசிய அளவிலும் சாதனை செய்து தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களைக் குவித்துள்ள அரவிந்துக்கு, ஸ்போர்ட்ஸ் கோட்டாவில் பொறியியல் படிக்க இடம் கிடைத்துள்ளது.

அரவிந்த் படித்த கோவை, பாரதி மெட்ரிக் பள்ளியின் பறக்கும் பாவை அனுப்ரியா. பன்னிரண்டாம் வகுப்பு படிக்கும் இவர் ரோலர் ஸ்கேட்டிங்கில் மாநில அளவிலான இளையோர் பெண்கள் சாம்பியன். கோப்பையை ஆறு வருடங்களாகத் தக்கவைத்துள்ளார். ''மற்ற விளையாட்டிலிருந்து வித்தியாசமாகவும் துளிச்சலாகவும் இருக்கணும்னு இதைத் தேர்ந்தெடுத்தேன். குடும்பத்தோட சப்போர்ட், குறிப்பா அம்மாவோட பக்கத் துணை என்னை இந்த அளவுக்கு உயர்த்தியிருக்கு'' என்கிற இவர், மருத்துவம் படித்து கிராமங்களில் சேவை செய்யப் போகிறாராம்.

''ஒரு பக்கம் மருத்துவ சேவை, இன்னொரு பக்கம் ஸ்கேட்டிங் பயிற்சி மூலமா நிறைய வீரர்களை உருவாக்கணும்'' என்று கண்களில் கனவு மின்னப் பேசுகிறார்.

- ஆர்.பாலா

எதிர்ப்பக்கத்தில்... இளம்புயலும், பறக்கும் பாவையும்


SRM

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / CC (S) DN / 144 / 09 -11 * Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN / CC (S) DN / 70 / 09 - 11* Registered as a Newspaper in Srilanka.



